# செந்தமிழ்

தொகுதி:68 பிரமாதீச புரட்டாசி செப்டம்பர்73 பகுதி: 3

1. ''விடுதலை வித்திட்ட சிறுகதைகள்'' 3
திருமிகு. வ. ஞானசுந்தரம்
இந்திய மொழிகளின் நடுவன் நிறுவனம் மைசூர்.
2. ''பாவேந்தர் கவித்திறன்'' 12
திருமிகு. பேராசிரியர் வ. பெருமாள்
எம். ஏ, பீ. டி, எம். ஆர் எ. எஸ். கோலார் தங்கவயல் [மைசூர்]
3. ''சிலம்பு—பெருங்கதை ஓர் ஒப்பாய்வு'' 19
திருமிகு. இரா. காசிராசன். எம். ஏ.
(தமிழ்த்துறை) கேரளப் பல்கலைக் கழகம்
4. ''தாயுமானவரின் பராபரக்கண்ணி 25
திருமிகு. பு மு. சாந்தமூர்த்தி, எம். ஏ.
சௌராட்டிரர் கல்லூரி, மதுரை.
5. ''கம்பனுக்கு முன்'' 37
திருமிகு. பா. கங்காபரமேசுவரன், எம். ஏ,
பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி பழனி.
6. ''கோத்த மொழியில் பாலெண் இனஇயைபு'' 42
திருமிகு. கோ. சுப்பையா
இந்திய மொழிகளின் நடுவன் நிலையம் மைசூர்.
7. ''பாடொல்லாக் கண்கள் 49
திருமிகு. பண்டித வித்துவான் கி. பொன்னுராமன்
மதுரை.
8. ''காலமும் கோலமும்'' (தொடர்கதை) 53
தவத்திரு. கவியோகி. சுத்தானந்த பாரதியார்
9. ''பழம் ஈந்த பரிசில்'' 56
திருமிகு. தமிழ்த்தொண்டன். ஆ. ஆண்டியப்பன்
10. ''தமிழவேள் வாழி'' 63
கவிஞர். ப. சங்கரலிங்கம், செக்கானூரணி
11. ''இரங்கல் இருபது'' 65
திருமிகு ந. மு. கோவிந்தராய நாட்டார் பி.ஏ.எல்.டி.
தஞ்சை.
12. ''கவிராயர்கூத்து'' 69
தவத்திரு. கவியோகி. சுத்தானந்த பாரதியார்
13. ''ஆறுவதறிவு மனம்'' 75
திருமிகு. ப இராமன், எம். ஏ.
தமிழ்ப் பேராசிரியர் விவேகானந்தா கல்லூரி, சென்னை.
14. ''திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும்
வரலாற்று அமைப்பும்'' 81
திருமிகு. இரா. கோதண்டராமன், எம். ஏ; எம். ஏ.
15. சங்கச் செய்திகள்'' 86

## நூல் மதிப்புரை.

**சூடர்மணிமாலை**
[நான்காம் பதிப்பு]

தொகுப்பாசிரியர்.
**திருமிகு. வேம்பத்தூர் கிருஷ்ணன்,**
**சூளைமேடு, சென்னை–24.**

தனது அன்புமகள் காந்தியின் நினைவாக ஆண்டு தோறும் பதிப்பித்து இலவசமாகவே வெளியிட்டு வருகிறார், திரையுலகுத் தேவர் பெருமகனாரின் திருத்தொண்டராம் வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள்.

கன்னி முதல் இமயம் வரையிலுமுள்ள கோவில்களின் தொன்மைச் சிறப்புக்களையும், அன்பே இறையருள் பெறுவதற்குரிய வழிஎன்பதையும் தக்கமேற்கோள்களுடன்எடுத்துக் காட்டப்பட்டுள்ளது இந்நூல், ஆசிரியசரின் ஆழ்ந்த புலமைக்கு எடுத்துக் காட்டாய் நிற்கும்.

''சமயச் சின்னங்கள் அணிந்த இமயத் திருடர்'' என்றும் கூறுவதற்கேற்ப மனத்திலோர் வாய்மையல்லா ஒரு சில வேடதாரிகளை ஒளிவுமறைவின்றி இடித்துக் கூறும் ஆசிரியரது நெஞ்சுத்துணிபு சங்ககாலப் புலவர்களை நினைவு கூறும் வண்ணம் அமைந்துள்ளது.

நூல் சிறியதாக இருந்தாலும் அதன் பொருள் அரியதாக அமைந்துள்ளது. அன்பர்கள் ஆக்கமும் ஊக்கமும் அருளி இது போன்ற பக்திநூல்கள் பல வெளியிட ஆசிரியருக்கு உறுதுணை இருக்க வேண்டுகிறோம்.

**ஆ ஆண்டியப்பன்,**
பதிப்பாசிரியர்.

# விடுதலை வித்திட்ட சிறுகதைகள்[1]

வ. ஞானசுந்தரம்,
இந்திய மொழிகளின் நடுவன் நிறுவனம்,
மைசூர்-6.

தலைப்பு அமைந்த விதமானது இரண்டு விதமாகப் பொருள் கொள்ள வழியமைத்து விடுகிறது. விடுதலை என்ற சொல்லானது இங்கு இந்திய சுதந்திரப் போராட்டத்தை அல்லது இந்திய விடுதலைப் போரினைக் குறிக்கின்றது. விடுதலை வித்திட்ட சிறுகதைகள் என்ற தலைப்பானது ஒன்று: இந்திய விடுதலைப் போரினுக்கு வித்திட்ட அல்லது வழி வகுத்த சிறுகதைகள் என்றும், இரண்டு: இந்திய விடுதலைப் போரினால் அல்லது இந்திய விடுதலைப் போர் என்ற இந்தக் கால கட்டத்தின் பாதிப்பால் (Impact) எழுந்த சிறுகதைகள் என்றும் அமையும். முதலாவது பொருளுக்கு சிறுகதைகள் மூலகாரணமாகி வித்திடப்பட்ட விடுதலை காரியமாகின்றது. இரண்டாவது பொருளுக்குவிடுதலை மூலகாரணமாகி வித்திடப்பட்ட சிறுகதைகள் காரியமாகின்றன.

முதலாவது பொருள் கூறுவது என்ன?

புதுமை இலக்கியத்தின் ஒருவகையான சிறுகதை வலிமையாகப் படைக்கப்பட்ட விதத்தாலேயே, இந்திய விடுதலைப் போரின் நீண்ட கால கட்டத்தில் பின்னால் நிகழவிருக்கின்ற பல சம்பவங்களுக்கு, முக்கியமான திருப்பங்களுக்கு அவை தூண்டுகோலாக இருந்தன என்பதாகும்.

இந்த அளவிற்கு, நீண்டகாலவெளியில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்திய விடுதலைப் போரின் பல கட்டங்களை ஊக்குவிக்கும் வகையில், அல்லது வழி நடத்திச் செல்லக் கூடிய அளவில் மிக வலிமை வாய்ந்த ஒரு இலக்

கியச் சாதனமாக, பிரச்சாரம் கலந்த இலக்கிய சாதனமாக, சிறுகதை என்ற இலக்கியவகை செயல்பட்டு வந்ததா என்ற ஆராய்ச்சி நோக்கில் ஊன்றிப் பார்க்கும் போது, இந்திய மொழிகளில், தமிழ் மொழியில் வளர்ந்து கொண்டிருக்கின்ற சிறுகதை என்ற இலக்கிய வகை, அந்தக் கால கட்டத்தில் அந்த அளவிற்கு வலிமை படைத்ததாக அமையவில்லை என்ற முடிவிற்கு வர வேண்டியுள்ளது.

இயல்பான, நியாயமான காரணங்கள் இதற்கு உண்டு.

சிறுகதை என்ற இலக்கிய வகை தமிழ் மொழியில் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்திய விடுதலைப் போரின் நீண்ட கால கட்டத்தின் இறுதிப் பகுதிகளில்தான் என்பதை மனதில் கொள்ளுதல் நல்லது. தமிழ் மொழியில் சிறுகதை ஒரு இலக்கிய வகையாகத் தோற்றம் தர ஆரம்பித்தகாலம் அது. இந்நாட்கள் போல அந்நாட்களில் பத்திரிகைகள் பல்கிப் பெருகியிருக்கவில்லை. அடக்குமுறைக்குட்பட்ட இந்தியாவில் அன்று எழுத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் போதிய அளவிற்குக் கிடையாது. விடுதலை உணர்வை, நாட்டு மக்களிடையே பரப்பி அதன் மூலம் சுதந்திரத்தை அடைவதற்கான வழிவகைகளில் ஒன்ருக இலக்கிய நோக்கில் பாடல்களை—கவிதைகளைப் பயன்படுத்திய அளவிற்கு தமிழக எழுத்தாளர்கள் சிறுகதை என்ற இலக்கிய வகையை வலுவுள்ள பிரச்சாரச் சாதனமாகப் பயன்படுத்தவில்லை. பாடல்கள் படிக்கத் தெரிந்த தெரியாத எல்லா மக்களிடையேயும் சென்று சேர வழியுண்டு. சுப்பிரமணியபாரதியின் பாடல்கள் இந்த நோக்கில் பிரச்சார சாதனமாகப் பயன்பட்ட அளவிற்கு. பிரச்சாரம் சற்றேரக்குறைய அதே அளவிற்குக் கலந்து காணப்படுகிற அவரது (சிறு) கதைகள் பயன்படவில்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது. மேலும், ஆங்கிலேயரது ஆளுகையில் பிரச்சார அளவிற்குச் சிறுகதைகளேயோ அல்லது வேறு எந்த இலக்கியத் துறையையோ வலிமையுடைய தாக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்போது, அடக்குமுறையின்கீழ் அத்தகைய எழுத்துக்கள் அபகரிக்கப்படலாம் என்ற பேராபத்து தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

1924–ஆம் ஆண்டு நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்கள், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவு தேடும்வகையில் அப்போதைய சத்தியாகிரகிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு கி. பி. 1857—ல் நடந்த சிப்பாய் புரட்சியைப் பற்றி சில பாடல்கள் எழுதியிருக்கின்றார். எழுதிய வேகத்தோடு பாடல்கள் அனைத்தும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் தலையீட்டால் போலிசாரால் கவர்ந்து செல்லப் பட்டிருக்கின்றன. 2

எனவே, தமிழில் சிறுகதை என்ற இலக்கிய வகையானது குறிப்பிட்ட அந்தக் காலப் பகுதியில் பிரச்சார வலிமையை, இந்தியாவின் விடுதலைக்கே வித்திடும் வகையில் பெற்றிருக்கவில்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது.

எனவே இந்திய விடுதலைக்கு வித்திடும் வகையில் தமிழிலும் சிறுகதைகள் எழுந்தன என்ற முதல் வகையான பொருளைக் கொள்ளாது, இந்திய விடுதலைப் போராட்டம் என்ற கால கட்டமானது எந்த அளவிற்குத் தமிழில் சிறுகதைகளுக்கு வித்திட்டது என்ற இரண்டாவது வகைப் பொருளினை இனி பார்ப்போம்.

தமிழில் சிறுகதை வளர்ச்சியை முறையாகக் கணிக்க விரும்புபவர்கள் 1920–லும் அதற்குப் பின்னர் 1925 வரையிலும் வா. வே. சு. ஐயர், மாதவையர் போன்றோரால் எழுதப்பட்ட **"குளத்தங்கரை அரசமரம்" "குசிகர் குட்டிக் கதைகள்"** போன்றவைகளைத் தமிழின் முதற் சிறுகதைகளாகக் கொண்டு தொடங்குவர். சற்றேறக்குறைய இதே காலகட்டத்தில் முழுக்க முழுக்க விடுதலைக் கவியாக மலர்ந்திருந்த சுப்பிரமணிய பாரதியும் சில [சிறு] கதைகளை எழுதியுள்ளார்.

தமிழ்ச் சிறுகதையின் பிறப்பை இதிலிருந்து தொடங்கும்போது நாம் ஒரு உண்மையை உணர்ந்து கொள்கிறோம். இந்திய விடுதலைப் போராட்டத்தின் மிக முக்கியமான கடைசிக் கால கட்டங்களினடையேதான் தமிழ்ச் சிறுகதை பிறந்து வளர ஆரம்பித்திருக்கின்றது. தொடர்ந்து தமிழ்மொழியில் சிறுகதையின் வளர்ச்சியைக் காணும்

போது 1925-லிருந்து 1932 வரையிலும் தமிழ்ச் சிறுகதைவளர்ச்சியில் ஒருதேக்கம்ஏற்பட்டிருப்பதையும் உணரமுடிகின்றது. காரணத்தை ஆராயும்போது விஷயம் விளங்கத் தொடங்குகிறது. 1925 முதல் 1932 வரையிலும் உள்ள ஆண்டுகள் இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் உள்ள முக்கியமான நாட்களாக இருந்திருக்கின்றன.

1929-ல் மகாத்துமா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் [Civil disobedience Campaign] நடைபெற்றிருக்கிறது.

1930-ல் உப்புச் சத்தியாகிரகப் போராட்டம் (Salt Satyagraha) நிகழ்ந்தேறியிருக்கின்றது.

1931-ல் காந்தி-இர்வின் சமாதான உடன்படிக்கை (Gandhi Irivin Pact) நடைபெற்றிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக 1934-ல் வெள்ளையனே வெளியேறு [Phit India Movement] என்ற தாரக மந்திரம் ஒரு பெரும் இயக்கமாகவே மாறியிருக்கின்றது.

குறிப்பிட்ட இந்தப் போராட்ட கால கட்டத்தில் காந்திய இயக்கமானது நாட்டில் உள்ள அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டி போராட்டத்தில் ஈடுபடும்படி செய்திருக்கின்றது. சிறிது காலம் இலக்கிய அக்கறை பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. பொதுவாக மனித வாழ்வின் நேரடியான போராட்ட காலத்துக்கு முன்னும் பின்னும் தான் இலக்கிய இயக்கங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. திலகர் நடத்திய இயக்கத்திற்கும் காந்தி நடத்திய இயக்கத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் பாரதி கவிஞரானது எந்த அளவிற்கு இலக்கிய நிகழ்ச்சியோ, அதே அளவில் முன்பு குறிப்பிட்ட போராட்ட கால கட்டத்திற்குப் பின் அதாவது 1930-33ற்குப் பிறகு தமிழ் மொழியில் சிறுகதையானது ஒரு இலக்கிய இயக்கமாகவே உருமாறிற்று எனலாம். 3

இந்த இலக்கிய இயக்கத்தின் காரண கர்த்தாக்களாக அன்று விளங்கியவர்கள் :

1. கல்கி. ரா. கிருட்டிணமூர்த்தி, 2. வ. ரா., 3. சங்கு சுப்ரமணியன், 4. டி. எஸ். சொக்கலிங்கம்.
இந்த நால்வருமே தீவிர தேசியவாதிகள். காந்தீய வழியில் நின்று 1930-ஆம் ஆண்டு சத்தியாகிரகப் போரில் ஈடுபட்டு சிறை சென்று மீண்டு வந்தவர்கள். காந்தீய இயக்கத்தின் போராட்ட கட்டம் ஒன்று முடிய ஆனால் முழு வெற்றி எதுவும் கிடைக்காத நிலையில் தங்களது ஆவேசம் முழுவதையும் எழுத்தில் காட்ட முன் வந்தவர்கள் இவர்கள். இந்நால்வரும் முறையே 'ஆனந்த விகடன்', 'மணிக்கொடி', 'சுதந்திரச் சங்கு', 'காந்தி' போன்ற பத்திரிகைகள் மூலம் தமிழ்ச் சிறுகதைக்கு முதன் முதலாக இலக்கிய வடிவம் தர முனைந்தனர். இலக்கியத் தரமுள்ள சிறுகதைகள் முதன் முதலாக இந்த இயக்கத்தின் பலனால் வெளி வர ஆரம்பித்தன.

விடுதலைப் போராட்ட உணர்வு தந்த பாதிப்பால் விளைந்த சிறுகதைகளை எழுதியவர்கள் என்ற முறையில், தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஏறக்குறைய 1920-லிருந்து எழுதிக் கொண்டிருக்கின்ற எழுத்தாளர்களை சுதந்திர கட்டத்திற்கு முன் உள்ள எழுத்தாளர்கள் (Pre Independend writers) என்றும், 1947-க்குப்பின் இன்று வரையிலும் எழுதிக் கொண்டிருக்கின்ற எழுத்தாளர்களை சுதந்திர கட்டத்திற்குப் பின் உள்ள எழுத்தாளர்கள் (Post Independent writers) என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

முதல் வகையில் புதுமைப் பித்தன், கல்கி, இராஜாஜி பி. எஸ். இராமையா, சி. சு. செல்லப்பா போன்றவர்கள் சென்றடங்குவர். இரண்டாவது வகையில் அகிலன், ஜெயகாந்தன், ஜெகசிற்பியன், ஆர். சூடாமணி, வி. ஆர். இராதாகிருட்டிணன் போன்றோர் சென்றடங்குவர். ஆனால் இரண்டு பிரிவிலும் உள்ள எழுத்தாளர்களில் சிலர் இந்திய விடுதலைப் போராட்டத்தின் பல கட்டங்களில் ஏதாவது ஒன்றிலாவது தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களாக இருக்கின்றனர்கள்.

இனி இரண்டு பிரிவிலும் உள்ள சிறுகதைகளை ஊன்றிப் பார்க்கும்போது அத்தகைய சிறுகதைகள் இலக்கிய வடிவம் பெற்றிருக்கும்பாங்கினை பின்வருமாறு பகுக்கலாம்.

ஒன்று: இந்திய விடுதலைப் போரின் நீண்ட போராட்ட கட்டங்களது சம்பவங்களில் ஏதாவது ஒன்றினைக் கதைக் கருவாகக் [Theme] கொண்டு அதன் அடிப்படையில் எழுதப்பட்ட சிறுகதைகள்.

இரண்டு: இந்திய விடுதலைப் போரின் போராட்ட கட்டங்களில் உள்ள சம்பவங்களில் சில பகைப் புலனாக (Back-ground) நிற்க, இந்தப்பகைப் புலனின் கீழ் எழுதப்பட்ட சிறுகதைகள்.

இவை இத்தகைய சிறுகதைகளின் அமைப்பைப் பொறுத்தது.

நீண்ட நாட்களாக அடிமைத் தளையில் கட்டுண்டு உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழ் மக்களிடையே முதன் முறையாக, விடுதலைப் போராட்ட உணர்வானது அதன் சார்பான சில சமூகக் கிளை உணர்வு பாதிப்புகளை (Sub sequent Social Impact) உண்டாக்கியிருக்கின்றன. நீண்ட நாட்களாகத் தங்களிடையே வேரூன்றிக் கிடைந்த வைதிக மனப்போக்குக் கொடுமைகள், ஆங்கில ஏகாதிபத்திய மோகத்தால் தவறான முறையில் வளர்த்துக் கொண்ட போலிப் பெருமைகளை விரும்புகின்ற நிலைமை இவைகளை மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டார்கள். காந்திய இயக்கம் பிரச்சார பலத்துடன் சமுதாயத்தில் முதன் முறையாகப் புகுத்திய தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு போன்றவைகள் உண்டாக்கிய விளைவுகளையும் மக்கள் நேருக்கு நேர் சந்தித்தார்கள். எனவே இவைகளால் சமுதாயத்தில் பரவலாக முதன் முறையாக விளைந்த அகப்புற மாற்றங்களை எழுத்தாளர்கள் தங்களது சிறுகதைகளுக்குரிய பொருளாகவும் (Subject) எடுத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

எனவே விடுதலை வித்திட்ட சிறுகதைகளின் தன்மை முன்பு கூறியபடி இரண்டு விதமாக அமைந்திருந்த போதிலும் அவைகளின் பொதுவான உள்ளடக்கமாக விடுதலை உணர்வு கிளர்ந்தெழச் செய்த சில சமூக உணர்வு பாதிப்புகளும் (Social impact) காந்தீய இயக்கப் பிரச்சாரத்தின் விளைவுகளான தீண்டாமை, மதுவிலக்கு போன்றவைகளும் அங்கங்கே பரவலாக இடம் பெற்றிருக்கின்றன.

இனி, மூன்பு பகுத்த சிறுகதை அமைப்பின்படி சுதந்திரத்திற்கு முன் உள்ள எழுத்தாளர்கள் (Pre Independend Writers) சிறுகதைகள் பெரும்பாலும் இந்திய விடுதலைப் போரின் போராட்ட சம்பவங்களில் சிலவற்றைப் பகைப் புலனுகக் (Back-ground) கொண்டு சமூக உணர்வு பாதிப்புகளை மையமாகப் பெய்து எழுதப்பட்டவைகளாகத்தான் உள்ளன.

கல்கியின் சிறுகதைகளில் உள்ள இளம் விதவைகளின் வாழமுடியாப் போராட்டமாகட்டும், அல்லது 'புதுமைப் பித்தன்' 'புதியநந்தன்' என்ற சிறுகதையில் உள்ள சாதிப் பகுப்பு முறையில் உள்ள ஏற்றத் தாழ்வுக் கொடுமையோ அல்லது அதை எதிர்த்துப் போரிட முனையும் புதியதலை முறையின் தீண்டாமை ஒழிப்புப் போராட்டமாகட்டும், அல்லது ராஜாஜியின் கதைகளில் உள்ள கள் குடியால் சமூக நிலையில் சரிந்து போகின்ற ஏழைகளின் துயரமாகட்டும், இவை அனைத்தும் சிறுகதை உருவங்களாக மாறும்பொழுதே இந்திய விடுதலைப் போராட்டத்தின் சில கட்டங்கள் அங்கங்கே பின்னணியில் விளக்கம் பெறுகின்றன. இன்னும் கூறப்போனால் புதுமைப்பித்தன் 'புதிய நந்தன்'4 என்ற சிறுகதையின் உச்ச கட்டமே (climax scene) இந்திய விடுதலைப்போரின் ஒரு கட்டமாக மகாத்துமா காந்தி அவர்கள் மக்களைச் சந்திக்கும் பொருட்டு மேற்கொண்ட தென்னுட்டுப் பயணத்தின் பின் புலத்தில்தான் நிறைவு பெறுகிறது. ஆனுல் சுதந்திரத்திற்கு முந்தைய எழுத்தாளர்கள், இந்திய விடுதலைப் போரின் வலிமை மிக்க முக்கியமான கட்டங்களையே கதையின் மையப் பொருளாகக் (central theme) கொண்டு சிறுகதைகளைப் படைக்கவில்லை. அக்கால கட்டத்தில் அத்தகைய எழுத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம் என்று தொடர்ந்து இருந்து வந்த பயம்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

ஆனுல் சுதந்திர இந்தியாவில் அத்தகைய அச்சத்திற்குக் காரணமில்லை. எனவேதான் சுதந்திரத்திற்குப் பின் உள்ள எழுத்தாளர்களது [Post Independend writers] சிறுகதைகளில் சிலவாவது இந்திய விடுதலைப் போரின் நீண்ட போராட்ட கட்டங்களில் சிலவற்றையே மையக் கருவாகக் (Central theme) கொண்டு எழுதப்

பட்டமைகளாக உள்ளன. பொதுவாக அகிலன், போன்ளுரது சிறுகதைகளில் சில இந்த வகைக்கு நல்ல எடுத்துக் காட்டுகளாக அமையும். சிறப்பாக 'விடுதலைப் போரில் உயிரிழந்த தியாகிகள் நினைவு நாளன்று' வெளிவந்த வி. ஆர். இராதா கிருட்டிணன் அவர்களது 'தியாகியின் தாய்' என்ற சிறுகதைத் தொகுப்பானது இந்த வகைக் கதைகளுக்கு மிக நல்ல உதாரணங்கள்.

அவரது சாமி தாமோதரன்5 என்ற சிறுகதை 1942 ஆகஸ்டு போராட்டத்தில் தலை மறைவாக இருக்கவேண்டிய கட்டாயத்திறகு ஆளாகின்ற தேச பக்தர்களது துன்பமான நிலையை சிறுகதை உருவ அமைதியோடு நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. ''நேதாஜி தரிசனம்'' 6 என்ற சிறுகதையானது விடுதலைப் போராட்டத்தில் நேதாஜி சம்பந்தப்பட்ட சரித்திர விவரங்கள் அனைத்தும் சுவை குன்ருமல் சிறுகதையாக ஆக்கப்பட்டிருக்கின்றது. இதற்கும் மேலாக, சுதந்திரத்திற்கு முன்னும் சுதந்திரத்திற்குப் பின்னும் உள்ள இந்திய மக்களது மாறுபட்ட குண இயல்புகளை வி. ஆர். ராதா கிருட்டிணன் தமது 'தொண்டர் தர்மநாயகம்' 7 என்ற சிறுகதையில் அழகாக விளக்குகின்ருர்.

சிறுகதையின் ஒரு கட்டம்.

''சுப்பிரமணிய சிவாவா? யாருங்க அது?'' என்றேன் நான்.

''ஆமாம் தம்பி, அவர் பெயர் யாருக்கு ஞாபகமிருக்கும் இப்போது சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, வா. வே. சு. ஐயர், சுப்பிரமணியசிவா இவர்கள்தான் தமிழ் நாட்டினைத் தட்டியெழுப்பிய வீரர்கள். சுப்பிரமணியசிவா நோயினல் பீடிக்கப்பட்டிருந்தார். இருந்தாலும் அவரது தேசிய வேட்கை குறையவே இல்லை. அவர் பாட்டைக் கேட்டுத்தான் நாங்கள் எல்லாம் தேசியவாதிகள் ஆனேம். அவருக்கு ஒரு ஆசை தம்பி''

''என்னங்க அது?''

பாரத மாதா கோவில் கட்டவேண்டும் என்று நினைத்

தார். சேலம் ஜில்லாவில் தர்மபுரிக்கு அருகேயுள்ள பாப் பாரப்பட்டி கிராமத்தில் அதற்காக அஸ்திவாரக் கல்கூட நாட்டினர். அங்குதான் அவரும் இறந்து போனர். அவருக்குச் சமாதி கூட இருக்கிறது.

"இப்போது பாரத மாதா கோவில் என்னவாயிற்று"?

சிறுவன் கேள்வியைக் கேட்டு விட்டான். பொதுவாக விடை பெற முடியாத கேள்விகளில் ஒன்ருகத்தான் இந்தச் சிறுகதையில் இந்தக் கேள்வியும் இடம் பெற்று விடுகிறது.

---

# பாவேந்தர் கவித்திறன்

பேராசிரியர். **வ. பெருமாள்** எம். ஏ. பி டி. எம். ஆர். ஏ. எஸ்.
தமிழ்ப்பேராசிரியர்
முதல் நிலைக் கல்லூரி, உதிகம்,
கோலார் தங்கவயல் [மைசூர் மாநிலம்]

மனிதன் பிறக்கின்றான்; இருக்கின்றான்; சாகின்றான். இது மனித வரலாறு. கவிஞன் தோன்றுகின்றான்; வாழ்கின்றான்; அமரனாகின்றான். இது கவிஞன் வரலாறு கவிஞனின் உடல் மறைந்தாலும் அவன் இயற்றிய கவிதைகள் காலத்தை வென்று என்றும் வாழ்ந்துகொண்டேயிருக்கின்றன. கவிஞனது எண்ணமும் உணர்ச்சியும் அவன் உருவாக்கிய கவிதைகளில் என்றும் வாழ்கின்றன. சுருங்கக் கூறுமிடத்துக் கவிஞன் படைக்கும் உயிர் இலக்கியம் அவனை உலகம் உள்ளளவும் வாழச் செய்கின்றது.

தமிழகத்தில் தோன்றிய கவிஞர்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் சிலர். அச்சிலருள்ளும் மக்கள் கருத்தைக் கவர்ந்தவர்கள் மிகச்சிலர். அவர்களில் தலையாயவர் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் ஒவ்வொரு கவிஞரும் ஒவ்வொரு சிறப்பியல்பு பெற்றிருந்தாலும் பாவேந்தரிடம் பல சிறப்புகள் உண்டு. ஏனைய கவிஞர்கள் தனித்தனி பூக்கள் போன்றவர்கள். ஆனால் பாரதிதாசன் பல்வேறு வண்ணமுள்ள நறுமணப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலைபோன்றவர். அம்மாலையில் முல்லை உண்டு, மல்லிகைஉண்டு. வண்ணத்தாலும் மணத்தாலும் அமைப்பாலும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் அப்பூமாலைக்கு உண்டு. பாரதிதாசன் கவிதைகள் யாவும் அவர்தம் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வந்தவை. இன்பமே உருவம் எடுத்து விளங்குவதைப் போல் அமைந்தவை. பளிங்கு போல் தெளிந்த நடையில் இயங்குபவை. எல்லாவற்றுக்கும் மேலாக உண்மையை அடிப்படையாகக் கொண்டவை. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடிய,

"உள்ளத் துள்ளது கவிதை — இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெளிந்து ரைப்பது கவிதை"

என்னும் கவிதை இலக்கணத்திற்குப் பாவேந்தர் இலக்கியப் படைப்பு மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது

**தமிழ் உணர்ச்சியை வளர்த்த கவிஞன்:**

தமிழின் சிறப்பையும் இனிமையையும் பாடிய தமிழ்க் கவிஞர்களில் பாரதிதாசன் தலையாயவர். தமிழ்ச்சுவையை ஒவ்வொரு கோணத்திலிருந்தும் அறிந்துணர்ந்து மகிழ்ந்து அனுபவித்தவர். கனிச்சுவை, கரும்புச்சுவை, தேன்சுவை, பாகுச்சுவை, பாற்சுவை, இளநீர்ச்சுவை முதலிய அறுவகைச் சுவையுடன் தமிழ்ச்சுவையை ஒப்பிடுகிறார். இவ்வறுவகை இன்சுவையை விடத் தமிழ்ச்சுவையே மிகவும் இனிமையாக இருக்கின்றது, என்பதைப் புரட்சிக் கவிஞர் உணர்கின்றார். எனவே, தமிழ்ச் சுவையை இவ்வறுவகைச் சுவைக்கு ஒப்பாகச் சொல்வதைவிட அவற்றை விட ஒருபடி உயர்ந்த அமிழ்துக்கும் — ஏன்? தம் ஆருயிர்க்கும் ஒப்பாகக் கூறுகின்றார்.

"கனியிடை ஏறிய சுளையும் — முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் — காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் — தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் — தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

வாய்ச்சுவையுடன் தமிழை ஒப்பிட்டக் கவிஞர் அத்துடன் அமைந்தார் அல்லர் மூக்கிற்குப் பெருவிருந்தளிக்கும் நறுமணத்துடனும் கண்ணிற்குப் பேரின்பம் நல்கும் நிலவுடனும் தமிழை ஒப்பிட்டு மகிழ்கின்றார்.

தமிழ்ச்சுவை, தமிழ்மணம் ஆகியவற்றை இனிது இயம்பிய பாரதிதாசன் தமிழ் ஒலிநயத்தையும் இசைச் சிறப்பையும் சொல்ல மறந்தார் அல்லர். வண்டொலி,

அருவியொலி, குழல்இசை, வீணைஇசை ஆகியவற்றின் இன்னிசையைவிடத் தமிழ்இசை மிகவும் செவியின்பம் பயக்கவல்லது, என்பதைத் தமக்கே உரிய நடையில் கவிஞர் இனிது பாடுகின்றார். சோறு, பசுநெய், காய்கறி, தானியங்கள்; தயிர், மிளகுச்சாறு, கிழங்கு, அப்பம் முதலியவை உடலை வளர்க்க வல்லன. உயிரையும் உணர்வையும் வளர்ப்பது தமிழே என்று பாவேந்தர் பாடுங்கால் அவர்தம் தமிழ்ப் பற்றின் ஆழத்தையும் தமிழ் உணர்ச்சியின் வேகத்தையும் மிகத் தெளிவாக அறியலாம்.

செந்நெல் மாற்றிய சோறும் — பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை — கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்,
நன்மதுரஞ்செய் கிழங்கு — கானில்
நாவிலினித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா! — உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

பாவேந்தர் தமிழில் பாடினார்; தமிழைப் பாடினார்; தமிழுக்காகப் பாடினார். தமிழை ஐம்புல இன்பத்துடன் ஒப்பிட்டுத் தமிழ் உணர்ச்சியுடன் பாடினார்.

## இயற்கை:

இயற்கை எழிலைச் சுவைக்கும் ஆற்றல் வாய்ந்தது கலை உள்ளம். தான் சுவைத்த இயற்கை எழிலைப் பிறர்க்கும் புலப்படுமாறு செய்பவனே கலைஞன். ஒரு கலைஞன் தான் கண்ட இயற்கைக் காட்சியைக் காவியமாக்குகின்றான். மற்றொருவன் ஓவியமாக்குகின்றான். காவியத்திலும் கலை உண்டு. ஓவியத்திலும் கலை உண்டு. காவியத்திலும் உயிர் ஓட்டம் உண்டு. ஓவியத்திலும் உயிர் ஓட்டம் உண்டு. புகைப்படக்காரன் உள்ளதை உள்ளவாறே படம் பிடித்துக் காட்டுகின்றான். ஆனால் கலைஞன் அவ்வாறு இல்லை. வேண்டாதவற்றை நீக்குகிறான், வேண்டியவற்றை இணைத்துக் கொள்கிறான். அத்துடன் கற்பனை உணர்ச்சியுடன் அழகுச் சுவையை ஊட்டிக் காண்போர்க்குப் பெரு விருந்தளிக்கின்றான். ஒரு சிறு குளம் இருக்கின்றது. அதன் நடுவில் ஒரு கழுதை நின்று கொண்டிருக்கிறது. ஒருபுகைப்படக்காரன் அக்குளத்தைப் படம் பிடிக்கும்போது அங்

குள்ள கழுதையையும் சேர்த்துப் படம் பிடித்து விடுகிருன். குளத்தின் நடுவே கழுதையை ஒதுக்கிவிட்டு அவனுல் படம் எடுக்க முடிவதில்லை. அது அவனுடைய குறைபாடன்று புகைப்படக் கருவியின் இயல்பு. ஆனுல் கலைஞனின் நிலை அவ்வாறன்று. அவன்தன் கற்பனைத் துணைகொண்டு அங்குள்ள கழுதையை விரட்டி விடுகின்ருன். அவ்வெறுங் குளத்தைத் தாமரைப் பூத்த நறுங்குளமாக மாற்றுகின்ருன். அதில் அன்னத்தை உலவிடச் செய்கின்ருன். புகைப் படக்காரனுக்குக் கழுதை நின்று கொண்டிருந்த வெறுங் குளம் கலைஞனுக்கு அன்னம் உலவும் குளமாகக் காட்சியளிக்கின்றது. கலைஞன் படைப்பில் வேண்டாததுஇராது. வேண்டியவையும், விரும்பத்தக்கவையும் மிகச் சிறப்பாக விளங்கும். பாவேந்தர்தம் இயற்கை வர்ணனை, இக்கலை இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றது. 'ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்' என்னும் பழமொழிக்கேற்பப் பாவேந்தர் தீட்டிய இயற்கை காட்சிகளில் ஒன்றைமட்டும் இவண் காண்போம்.

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
  அவ்வாறே வான்கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
  பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதருமல் அழகை யெல்லாம்
  சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
  எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானே?

பாவேந்தர் கண்ட நிலா முழுநிலா, மாசு மறுவற்றநிலா, அழகுநிலா, முத்துநிலா, ஒளிநிலா, குளிர்நிலா, காதல் உள்ளத்தில் முகிழ்த்த கற்பனை நிலா, எழில் வாழ்வைச் சித்தரிக்கும் இனிய நிலா. இயற்கை யழகைச் சொல் லோவியமாக்குவதில் பாவேந்தர் வல்லவர் என்பதற்கு இது ஒன்றே தக்க சான்ருகும்.

**பெண் கல்வி:**

பண்டைத் தமிழ்ச் சான்ரேர்கள் கல்விச் செல்வத்தை இருபாலர்க்குமுரிய பொதுச் செல்வமாகக் கருதினர். இப் பேருண்மையைத் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாக

நன்கு விளக்குகின்றார்.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என்பது குறட்பா. எண்ணும் எழுத்தும் ஆண்களுக்கு மட்டும் கண்கள் அல்ல. உலகில் வாழும் மக்கள் எல்லோர்க்கும் கண்களாக அமையும். குறட்பாவிலுள்ள 'உயிர்க்கு' என்னும் சொல் கல்வி இருபாலர்க்கும் உரிய பொதுச் செல்வம் என்பதைத்தெளிவுபடுத்துகிறது. இவை ஆண்களுக்கு மட்டும் கூறப்பட்டவை அல்ல. பெண்களுக்கும் உரைக்கப்பட்ட பொன்மொழிகளே. ஆனால் பிற்காலத்தில் கல்வியை ஆண்களுக்கு மட்டும் உரிய தனியுடைமையாக்கிப் பெண்களை அறியாமையில் ஆழ்த்தும் குருட்டுக் கொள்கை எழுந்தது. அம்மூடக் கொள்கையின் விளைவாக ''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'' என்னும் பழமொழி தோன்றிற்று. இது பழமொழி போல் காட்சியளித்தாலும் உண்மையில் இது பழிமொழியே. பெண் குலத்தை இழிவுபடுத்தும் இழிமொழியே. அப்பழிமொழியையும், இழிமொழியையும் போக்கும் வகையில் 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்னும் பாவேந்தர் வாக்கு ஒரு நன்மொழியாகவும் பொன்மொழியாகவும் சிறந்து விளங்குகின்றது. பயனுள்ள நிலம், வயல்; பயனற்ற நிலம் களர். திருந்திய கழனியில் பயிர் செழித்து வளரும். களர் நிலத்தில் ஒருவேளை புல் முளைக்குமே தவிர பயிர் வளர்தல் இல்லை. கல்லாதவனையும் பயனற்றவனையும் களர்நிலத்திற்கு ஒப்பிடுவதுண்டு.

''உளரென்னும் மாத்திரையர் அல்லாற் பயவாக்
களர் அனையர் கல்லாதவர்.''

என்பது வள்ளுவர் வாய்மொழி. திருவள்ளுவர் கல்லாதவர்களைக் களர் நிலத்திற்கு ஒப்பிட்டதைப் போன்று பாவேந்தரும் கல்லாத பெண்களைக் களர் நிலத்திற்கு ஒப்பிடுகின்றார். கல்வியற்ற பெண்கள் களர் நிலம்; கல்வியுள்ள பெண்கள் பயன்நிலம். இதுவே பாவேந்தரின் கருத்து.

''கல்வி இல் லாத பெண்கள்
களர் நிலம்! அந் நிலத்தில்
புல்விளைத் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறி வுடைய மக்கள்
விளைவது நவிலவோ நான்."

பாவேந்தர் பெண் கல்விக்கு அளித்த சிறப்பிடத்தை விளக்க இப்பாடல் ஒன்றே சாலும். "ஓர் ஆண் மகனுக்குக் கற்பித்தால் ஒருவனுக்கு கற்பிக்கிறாய்; ஒரு பெண்ணுக்குக் கற்பித்தால் ஒரு குடும்பத்திற்கே கற்பிக்கிறாய்" என்பது ஓர் அறிஞர் வாக்கு. கல்வி கற்ற பெண் சிறந்த பெண் மணியாக, நல்லமனைவியாக, குடும்ப விளக்காக, நன்மக்களைப் பெறும் உயர்ந்த தாயாக, குடும்பத்தைக் கலைக்கோயிலாகவும் பல்கலைக்கழகமாகவும் ஆக்கும் சிந்தனைச் சிற்பியாக விளங்குகிறாள். பெண்கல்வியே நன்கல்வி; அதுவே மக்களை வாழ்விக்கும் வாழ்க்கைக் கல்வி.

## பெண்ணுரிமை:

பண்டைச் சமுதாயத்தில் உரிமையுடன் வாழ்ந்த தமிழ்ப்பெண்கள் பிற்காலத்தில் அடிமைகளானார்கள். இல்லை அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள். ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் பிற்காலத்தில் தோன்றி விட்டது. சமுதாய உரிமைகள் அனைத்தையும் ஆண்கள் பெற்றார்கள். மகளிர் கொடுமைப் படுத்தப்பட்டு அடிமைக்கும் ஆளானார்கள். பெண்ணைப் பெற்றவர்கள், தாம் பெற்ற பெண்ணைப் பணத்திற்காக ஆசைப்பட்டு பன்னிரண்டு வயதுகூட நிறைவுறாத தம் ஒரே மகளை அறுபது வயது கிழவனுக்கு வற்புறுத்தித் திருமணம் நடத்திய கொடுங் காட்சி நம் மனத்தைவிட்டு இன்னும் நீங்கவில்லை. அந்தோ! அக்கொடுங்காட்சியை நம்மால் நினைக்வும் முடியவில்லை. பெண்களை விலைக்கு விற்கும் இத்திருமணத்தைக் கொடுமணத்தைக் கண்டார் பாவேந்தர். அவர் உள்ளம் பதறியது. பகுத்தறிவு கண்கொண்டு திருமணத்தை வரையறுத்தார். திருமணம் என்பது பணத்தால் ஒன்றுபடுவதன்று; மனத்தால் ஒன்று படுவது. குலத்தால் ஒன்றுபடுவதன்று; உள்ளத்தால் ஒன்றுபடுவது. வம்பால் ஒன்றுபடுவதன்று; அன்பால் ஒன்று படுவது, ஒருவர் மட்டும் இசைவதன்று; இருவரும் இசைவது இதுதான் பாவேந்தர் காதலுக்கு வரையறுத்த தெளிவான இலக்கணம்.

காதலர் இருவர் — தம்
கருத்தொரு மித்த பின்
வாதுகள் வம்புகள் ஏன் — இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?

ஒரு திருமணம் நடைபெறுகின்றது. திருமணமாகி ஒரு மாதத்திற்குள் கணவன் இறந்துவிடுகிறான். பதினாறு வயதுள்ள அவ்விளம் பெண் கைம்பெண் கோலத்தில் சமுதாயத்திலிருந்து விலக்கி ஒதுக்கி வைக்கப் பட்டவளாய் நரம்பு அறுந்த வீணைபோன்றவளாய், பூவிழந்து, பொட்டுஇழந்து மஞ்சள்இழந்து, குங்குமம் இழந்து, உயிர்இருந்தும் வாழ்விழந்து, பருவம் இருந்தும் இன்பம் இழந்து, கண்ணீரும் கம்பலையுமாய் ஒவ்வொரு வினாடியும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அவல நிலையைக் கண்டார், புரட்சிக்கவிஞர். அவர் இரக்க உள்ளம் உணர்ச்சியால் பதறியது. அவர் சிந்தை பகுத்தறிவால் உந்தப்பட்டுக் கேள்விகளை எழுப்பியது. கவிஞரது பகுத்தறிவு தோய்ந்தஇரக்க உணர்வால் அரும்பிய கவிதையே இது.

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலாவத் தென்றல்
பசியாத நல் வயிறு பார்த்த துண்டோ?

பெண்ணுரிமையைப் பொறுத்தவரை பாவேந்தர் வலியுறுத்தியவை பல. அவற்றில் இங்குக் குறிப்பிடத்தக்கவை இரண்டு. ஒன்று காதல் திருமணம்; மற்றொன்று விதவை மறுமணம். மகளிரைப் பற்றி பாடியவர்கள் சிலர். ஆனால் விதவை மறுமணத்தைப்பற்றித் தெளிவாக பாடியவர் ஒருவரே. அவரே பாவேந்தர்.

(இன்னும் வரும்)

# சிலம்பு-பெருங்கதை ஓர் ஒப்பாய்வு

இரா. காசிராசன் எம். ஏ.
ஆய்வாளர்
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக் கழகம்

1. 0. சிலப்பதிகாரம் பெருங்கதையாகிய இருபெருங் காப்பியங்களின் அறிமுகம், அமைப்புமுறை பண்பாடு பற்றியும் அவற்றில் ஆளப்படும் ஊழ்வினைக் கருத்துக்கள், கனவுகள் நிமித்தம் பார்க்கும் வழக்கம் குறித்தும் இருகாப்பியங்கட்கிடையே அமையும் வேறுபட்ட சொல்லாட்சிக் கூறுகளையும், இரண்டிற்குமுள்ள ஒப்புமைக் கூறுகளையும் ஓரளவு கட்டுரையில் வரையறுக்கப் படுகின்றது.

## 1. 1 இருகாப்பிய அறிமுகம்.

சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டம் அடியார்க்கு நல்லார் உரையுடன் முதன் முதல் 1880-ல் தி. க சுப்பராயச் செட்டியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1892-இல் உ வே.சா பதிப்பு அடியார்க்கு நல்லார் உரையுடன் வெளியிடப்பட்டு அதன் 8-வது பதிபு 1968-இல் வெளிவந்துள்ளது இதனைத் தொடர்ந்து கழகவெளியீடு, புதுமல் நிலையம் (கோவை), செல்விபதிப்பகம (காரைக்குடி), பாரிநிலையம் (சென்னை) முதலான பல வெளியீடுகள் வந்துள்ளன. பெருங்கதை 1924-ல் முதல் முதல் உ,வே.சா அவர்களால் பதிப்பிக்கப்பட்டு 1968இல் 4-வது பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது கழகவெளியீடு இரண்டு பெருங்கதைக்குஅமைந்துளது (உஞ் 1962 இலா 1956, மக 1962, வத் நர: 1963:— இவற்றைத் தொகுத்து இரண்டு தொகுதியாக 1970 இல் கழகம் வெளியிடடுள்ளது) வேறு வெளியீடுகள் பெருங்கதைக்கு இல்லை.

1. 2 சிலம்பிற்குப்பழைய உரையுடன் (அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை) நாட்டார், சோமசுந்தரனார், ஆர். கே சண்முகசுஞ்செட்டியார், புலியூர்க்கேசிகன் ஆகியவர்களின் உரைகளும் உள்ளன. பெருங்கதைக்கு உ. வே. சாவின் குறிப்புரையும் சோமசுந்தரனர் உரையுமே உள்ளன.

1. 3 பெருங்கதை பற்றிய திறனாய்வுகளாக 'உதயணன் சரித்திரச் சுருக்கம்' (உ. வே. சா) 'பெருங்கதை மகளிர்' (சோமசுந்தரனார்) சிலகட்டுரைகள் மட்டுமே அறியப்படுகின்றன, சிலம்பிற்கு நூற்றிற்கு மேற்பட்ட ஆய்வு நூற்களும் முன்னூறுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

1. 4 சிலப்பதிகாரம் ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி, மலையாளம், செக், ரஷ்யன், ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. பெருங்கதை எந்த மொழியிலும் மொழி பெயர்க்கப் பட்டதாகத் தெரியவில்லை.

1. 5 சிலப்பதிகாரத்தை பதிப்பித்த உ. வே. சா. அவர்கள், தனக்குக் கிடைத்த ஏட்டுப்பிரதிகள் 25, எனக் குறிப்பிடுகின்றார் (உரையோடுகூடிய பிரதி-14, மூலப்பிரதி 8 வே-3] பெருங்கதைக்கு ஒரு சில பிரதிகளே கிடைத்தனவென உ. வே. சா. குறிப்பிடுவர்.

1. 6. சிலப்பதிகாரத்தில் பல பாடபேதங்கள் இருந்தனவென்பது உ. வே. சா வால் எடுத்துக் காட்டப்படுகின்றது பெருங்கதைக்குப் பாட பேதம் மிகச் சிலவே காட்டப்படுகின்றது.

இங்கு காணப்பட்ட கருத்துக்களால், இவ்விருகாப்பியங்கள் தோனறியகாலம் முதல் இக்காலம்வரை, மக்கள் மத்தியில் நன்கு அறிமுகமான காவியம் சிலப்பதிகாரமே என்பது தெளிவாகின்றது.

## 2. இருகாப்பியங்களின் அமைப்பும் போக்கும்:—

2 : 1 சிலப்பதிகாரம் புகார், மதுரை, வஞ்சியாகிய தலைநகரின் பெயரால் மூக்காண்டங்களையமைத்து, மூன்று நாட்டிலும் நடந்த கதைநிகழ்ச்சியை உள்ளடக்குகிறது. பெருங்கதையின் முதலிரு காண்டம் (உஞ்சைக் காண்டம், இலாவாணகாண்டம்) தலைநகரின் பெயரிலும், இறுதிக்காண்டம் நரவாணகாண்டம்) உதயணன் மகன் நரவாகதத்தன் பெயரிலும், இடைநிற்கும் இருகாண்டம் (மகதகாண்டம் வத்தவகாண்டம்) நாட்டின் பெயரிலுமாக அமைகின்றன.

2. 2 சிலப்புக் காவியத்தின் சிற்றுறுப்புக்கள் முப்பது காதைகளாக அமையும் (புகார் 10, மதுரை.13, வஞ்சி-7) இவற்றில் 22 காதைகள் காதையெனப்பெயர் முடிவு பெறுவன. பெருங்கதையின் சிற்றுறுப்பும் 'காதையே' என்பது ஆகக்காண்டம் (இத்தனைக்குக்) கூடிய காதைகள் (இவ்வளவு) என்னும் இலாவண. மகத. வத்தவக் காண்ட இறுதிக் குறிப்புக்களும் வததவ காண்டத்து 13.14 வது காதைகள் (முகவெழுந்துக் காதை, மணம்படுகாதை) 'காதை' என்னும் பெயர் முடிவு பெறுதலானும் தெளிவுறும். மொத்தம் 99. காதைகள் கிடைத்துள்ளன. [உஞ் 27, இலா 20, மகத 26, வத் 17,

நர-9] உஞ்சைக் காண்டத்தின் முதல் 31-காதைகளும், 32வது காதையின் முற்பகுதியும் மகத காண்டத்தின் 11-வது காதையும் 12, 17வது காதைகளின் முற்பகுதியும் 10, 16வது காதைகளின் பிற்பகுதியும் நரவாண காண்டத்தின் 9 வதுகாதையின் பிற்பகுதியும் அதன் பின்னுள்ள காதைகளும் கிடைத்தில. காப்பிய அமைப்பினை நோக்கத் 'துறவுக்காண்டம' என ஒரு காண்டமும் இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது.

2 : 3 : 1 சிலம்பில் 'மங்கலவாழ்த்துப் பாடல்', 'கானல்வரி' 'வேட்டுவ வரி' 'ஆய்ச்சியர் குரவை' 'குன்றக் குரவை' 'வாழ்த்துக் காதை' முதலானகாதைகள் பாடுவதற்கென்றே அமைக்கப்பட்ட இசைப் பாக்களாக அமைகின்றன. இத்தகைய இசைப்பாவமைப்பு பெருங்கதையில் யாண்டும் இல்லை.

2 : 3 : 2 சிலம்பின் 2, 3, 4, 5; 6. 8, 10, 11, 13, 14, 15, 16, 22, 23, 25, 26, 27, 28, 30-ஆகிய எண்ணுடைய காதைகள் நிலைமண்டில ஆசிரியப்பாவிலமைவன. 'மங்கல வாழ்த்துப்பாடல்' ஆய்ச்சியர்குரவை, துன்பமாலை, மூன்றும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாலாகியன, குன்றக் குரவை. வாழ்த்துக்காதை. இரண்டும் கொச்சகக் கலிப்பாவில் அமைக்கப்பட்டுள்ளன 'கனாத் திறம் உரைத்தகாதையும்' 'வஞ்சினமாலை'யும் கலிவெண்பாட்டால் அமைகின்றன. 'ஊர்சூழ்வரி' அயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாலும், ''வேட்டுவ வரி'' பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பாவாலும் அமையும். இன்னோரன்ன பாவகைகளோடு, உரைப்பாட்டு கட்டுரை, சிந்தியல் வெண்பா தாழிசை முதலானவும் சிலம்பின் கண் விரவியமைகின்றன. பெருங்கதையின் 99-காதைகளு நிலைமண்டில ஆசிரியப் பாக்களாலேயே அமைகின்றன.

2 : 3 : 3 பெருங்கதையின் எல்லாக் காதைகளும் 'என்' என்னும் முடிப்புச் சொல்லோடு முற்றுப் பெறுகின்றன. சிலம்பின் நிலைமண்டில ஆசிரியப் பாவாலாகிய 19 காதைகள் மட்டுமே 'என்' முடிபு பெறுவன.

2 : 3 : 4 பெருங்கதையின் இறுதி அடி. சொல், சீர் இவற்றில் ஏதாவதொன்று அடுத்த காதையின் தொடக்க நிலையாக அமைகின்றது இத்தகைய தொடர்நிலையாப்பு சிலம்பில் யாண்டும் இல்லை.

2 : 3 5 பெருங்கதை—மகதகாண்ட இரண்டாவது காதையின் இறுதி அடி அடுத்த காதையின் தொடக்கமாக அமைகின்றது. உஞ்சைக்காண்டம், 43-வதுகாதையின் 167—வது அடியின் இறுதிச்சீரும், 6-வதுகாதையின் 115வது அடியிறுதிச் சீரும், 24 காதையின் 167-வது அடியிறுதிச் சீரும் அடுத்த அடியின் தொடக்கமாக அமைகின்றன. சிலம்பின் நிலைமண்டில ஆசிரியப் பாக்களில் இப்புணர்ப்பு இல்லை.

2: 3 : 6 இருகாவிய நிலைமண்டில ஆசிரியப் பாக்கள், முதல் சீரும் மூன்றும் சீரும் எதுகை அல்லது மோனைபடவும் அது போன்று அடி எதுகையும், அடிமோனையும் பெரும்பான்மையும் அமைகின்றன.

2 : 4 : 1 சிலப்பின் கதை தமிழ்நாட்டில் தமிழ்க்கதை. பெருங் கதை குணாட்டியர் பைசாசமொழியில் எழுதிய 'பிருஹத் கதா'வின் வடமொழி பெயர்ப்பான துர்விநிதனின் (கி. பி. 6-ம் நூ. ஆ) பிருஹத் கதா வின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

2 : 4 : 2 சிலம்பு குடிமக்களைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இயல்வது. பெருங்கதை முடிமகனைத் தலைவனாகக் கொண்டியல் வது. சிலம்பில் பெண்ணே காப்பியத் தலைமைபாத்திரம். பெருங் கதையில் ஆண்மகனே தலைமைப் பாத்திரமாக அமைகின்ருன.

2 : 5 : 1 சிலம்பின் பாவிகம், பதிகம் கூறுர் மூன்று எனவும் நடு கற்காதைபிற் கூறப்பெறும் மூன்று எனவும், வேறு பல எனவும் கொள்வர். பெருங்கதையின் பாவிகம் இன்னதெனத் தெளிவாக உணர முடியவில்லை.

2 : 5 : 2 நாடகப் பாங்கு சிலம்பின் கண் சிறப்புறவமைந்து காவியத்தைச் சுவைமிக்கதாக்குகின்றது. பின் நிகழ்வை முன் சுட்டு கின்ற இலக்கிய உத்தியும் முரணுடைச் சுவையை (அவலம் இன் பம்) அடுத்தடுத்து அமைத்துக் காட்டும் அழகும், கானல்வரி, குன்றக்குரவை போன்ற பகுதிகளை உள்ளுறை நயம்பட அமைத் துச் செல்லுகின்ற பாங்கும், சிலம்பின் காப்பியச்சுவையை மிகுதிப் படுத்துகின்றன. இத்தகைய சுவையூட்டும் பகுதிகள் பெருங்கதை யாப்பில் அமையாது முழுக்க முழுக்கக் கதையைத் தொகுத்துக் கூறுவதாகவே [Nanation] அமைகின்றது இலக்கிய உத்திகளைக் கையாண்டு காப்பியச்சுவையைப் பெருக்கும் நிலையில் [இளங்கோ வைப் போல்] கொங்குவேளிர் வெற்றி பெறவில்லை என்பது தெளி வாகத் தெரிகின்றது.

2 : 6 சிலம்பில் ஆசிரியர் கதை ஓட்டத்தில் இடை நுழைந்து பேசவில்லை. வரந்தருகாதையில் காப்பியப் பாத்திரங்களில் ஒன்ரு கத் தன்னையும் இணைத்துக் கொள்கின்ருர். 3 'பெருங்கதை' ஆசிரி யர் கொங்குவேளிர் ஏழு இடங்களில் இடைநுழைந்து பேசுகின் ருர். 4

2 : 7 பெருங்கதையில் காப்பியத்தலைவன் உதயணன் ஒவ் வொரு செயலையும் அறிவாராய்ச்சியோடு அணுகுவதும் (பெருங் 1 : 36 : 290-92, 1 : 46 : 29, 3 : 13 : 31-37) சிலபோது அறி வாராய்ச்சி செய்து அறிவின்படி செல்லாது உணர்ச்சி வழிச் செல் வதும் (3 : 10 : 10-14) ஆகிய போக்கு காணப்படுகின்றது. வாசவதத்தையும் ஒரிடத்து அறிவாராய்ச்சி செய்கின்ருள் [2 :17 :

155] இவ்வாறு அறிவாராய்ச்சி செய்கின்ற பாத்திரங்கள் அவர்களின் தகுதிக்கு ஏலாத செயல்களைச் செய்கின்றபோது, அப்படைப்புக்களின் மேல் படிப்போர்க்கு வெறுப்பு ஏற்படுதலன்றிப் படைப்பில் ஆசிரியர் வெற்றி பெறவில்லை என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கின்றது. இவ்வகைப்புணர்ப்பும், எண்ணமும் சிலம்பு கற்பார்க்குத் தோன்றுவதில்லை.

2 : 8 பெருங்கதையில் உஞ்சைக் காண்டத்து 38 முதல் 42 வரையுள்ள காதைகள் நீராட்டல் பற்றி வண்ணிப்பன். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவையரின் நீர் விளையாட்டு வண்ணனை காமச்சுவை மிக அமைகின்றது. இவ்விழா நாளில் உஞ்சை நகர்க்குக் தீ கொழுவி உதயணன் தத்தையைக் கவர்ந்து செல்கின்ற ஞான்று, மருதநிலங்கடந்தது (1, 48] முல்லை நிலங்கடத்து [1:49] குறிஞ்சி நிலங்கடந்தது (1:50) நருமதை கடந்து (1:51), பாலைநிலங்கடந்தது (1:52] எனக்காதைகளை அமைத்துச் செல்கின்றார். மகதக் காண்டத்து 2-வது காதை மருத குறிஞ்சிநில வண்ணனையாகவும் நாட்டு வண்ணனையாகவும் அமைகின்றது' இவை 'மலைகடல் நாடுவளநகர் வண்ணனை' என்னும் பெருங்காப்பிய இலக்கணம் நோக்கி அமைக்கப்பட்டதாகக் தோன்றுகிறது' வாசவதத்தைவதுவையை விரிக்கும் 'கடிக்கம்பலை கட்டிலேற்றியது. 'ஆருந்திங்கள் உடன் மயிர் களைந்தது' 'மண்ணுநீராட்டியது' என்னும் காதைகளும் 'பதுமாபதிவதுவை' 'மணம்படுகாதை 'விரிசிகை வதுவை' 'மதன மஞ்சிகை வதுவை' யாகிய காதைகளும் நன்மணம் புணர்தல் என்னும் காப்பிய இலக்கண அடிப்படையில் அமைந்தனவாகத் தோன்றுகின்றன இவ்வாறு வடமொழிக் காப்பிய இலக்கண நூலாகிய 'காவ்யாதர்சத்தை' நினைவிற் கொண்டு இலக்கியம் படைக்கும் பாங்கு பெருங்கதையில் வெளிப்படுகின்றது. சிலப்பதிகாரத்தின் எப்பகுதியும் இங்ஙனம் இலக்கணத்தை வைத்துக்கொண்டு படைக்கப் பட்டதாகத் தோன்றுவதில்லை.

இன்னும் வரும்

---

"நீண்டுயர் புகழ் சிறக்க
நிலவிடு மதுரை தன்னில்
ஈண்டிய புலவர் போற்றும்
இனிய செந்தமிழ்ச் சங்கத்தை
வேண்டியங் கமைத்தான் எங்கள்
வித்தகக் கலைஞர் வேந்தன்
பாண்டித்துரை யின் கீர்த்தி
பல்லாண்டு வாழ்க மாதோ!"

தவத்திரு. கவியோகி அவர்கள்

---

## பாண்டித்துரைத் தேவர் அறிவுக் கொத்து.

"தமிழ்மொழியின் ஆதி வரலாறு முழுவதும் அளந்தறிதல் அருமையான செய்கையாயினும் அம் முழுமங்கலான காலத்தின் நிலையை நாம் ஊகித்தறி தற்குப் பழந்தமிழ் நூல்களும் வேறுசில புறக்கருவி களும் சிறு சிறு நட்சத்திர வொளிபோல விருந்து உதவுகின்றன. மிக்க இருட்சி கொண்ட நள்ளிர வில் சிற்றுடுக்களின் உதவியால் உலகத்துப் பொருள்நிலை எவ்வளவு சிறுபான்மையாக அறியப் படுமோ, அவ்வளவே பழங்கால நிலையைப்பற்றி நாம் அறியக்கிடப்படும். ஆயினும், அவ்வொளியால் வெளியாகின்றவற்றை அதன் சிறுபான்மைகருதி விட்டொழியாது அவற்றை அறிவதற்கே நம்மனம் பேரவாக் கொண்டு முந்துதல் வழக்கே."

# தாயுமானவரின் பராபரக்கண்ணி.

பு. மு. சாந்தமூர்த்தி, எம். ஏ.
தமிழ்விரிவுரையாளர்
செளராட்டிரக் கல்லூரி
மதுரை–4.

(க) மனவேட்கை.

'புகலரிய விளையாட்டெடன்னே' என இறைவன் திருவருளை வியக்கின்ற தாயுமானவர் தம் மனவேட்கையைப் 'பராபரக்கண்ணி'யில் வெளியிட்டுள்ளார் என்றே கூறலாம். இறைவனிடம் தம் வேண்டுதல்களைக் கூறும் தாயுமானவரின் இறைப்பற்றுள்ளமும் அவ்வேட்கையினுல் வெளியாகிறது எனலாம்.

அன்பு நிலையே கடவுள்நிலை என்பர். 'அன்பே சிவமாவ தாரு மறிகிலார்' என்பார் திருமூலர்.

> 'என்புருகி நெஞ்ச மிளகிக் கரைந்துகரைந்
> தன்புருவாய் நிற்க அலந்தேன்'

என்கிருர் தாயுமானவர்.

தாண்டக வேந்தரான திருநாவுக்கரசரும்:

> 'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
> புக்கு நிற்பன் பொன்னூர்சடைப் புண்ணியன்'

என்பர். அன்புநிலையில் என்புருகி நெஞ்சிளகிக் கரைந்த போது, அன்புருவாகவே நிற்க விரும்பும் உள்ளம் கொள்கிருர்.

தம்மனம் கலக்கமற்ற அறிவுருவாகி ஆனந்தத்தை யடைந்தால்தான் தெளிவடையும் என்பதைச், 'சுத்தஅறி

வாய்ச் சுகம்பொருந்தி னல்லாலென்.'

சிந்தந் தெளியாதென் செய்வேன்' என்னும் கண்ணியில் கூறுகிறார். இங்குச் 'சுத்த அறிவாய்ச் சுகம் பொருந்தும் சித்தம்' வேண்டக்காணலாம். மேலும், இம் மனமயக்கம் தெளிவடைய வேண்டுமெனின், 'மாறா அனுபூதி' (வேறுபடாத சிவானுபவம்) வாய்க்க வேண்டுமென் கின்றார்.

இறைப்பெரும் ஆற்றலை மௌன நிலையினால் மட்டுமே அறியமுடியும் எனக்கருதும் தாயுமானவர்.

'சொல்லா லடங்காச் சுகக்கடல் வாய்மடுக்கின்
அல்லாலென் தாகம் அறுமோ' எனப்பாடித் தம் உள்ளம் 'சுகக்கடல்' வாய்மடுக்க வேண்டுமென எண்ணும் விழைவு கூறுகிறார். 'வாயால் விழுங்கி விட்டேனே' என இறையருளைப் பாடுவார் திருநாவுக்கரசர்.

கவலைகளுக்குள்ளே ஆழ்ந்து கிடக்கும் போது—வினைகளினால் துன்புறும்போது— 'ஓயாதோ என் கவலை?—உள்ளே ஆனந்த வெள்ளம் பாயாதோ' என இறைஞ்சுகிறார். ஆனந்த வெள்ளம் உள்பாய்ந்தால் உறுவது பேரின்ப நிலையல்லவா! பேரின்ப நிலை எய்துதற்கு நெஞ்சத்தின் செயல் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதையும் கூறிவிடுகிறார். மனம் ஒருமுகப்பட்டுச் சுந்தரர் 'ஐந்து பேரறிவுகளும் கண்களே கொள்ள' என்றிருந்த நிலை போலமைய வேண்டும் அவ்வாறின்றி வேண்டாதனவற்றை நினைப்பதால் நெஞ்சுபடும் துன்பம் வளரத்தான் செய்யும்.

இதனையே,

'எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணிஏழைநெஞ்சம் புண்ணாகச் செய்ததினிப் போதும்' என்னும் கண்ணி கூறுகிறது.

இறையருள் பெறும் முயற்சியில் போலித் தன்மைக்கு இடமில்லை என்னும் போது,

'கற்றவறி வாலுனைநான் கண்டவன்போல் கூத்தாடிற்
குற்றமென்றன் நெஞ்சே கொதிக்கும்' என்கிறார்.

'பொக்க மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே'

என்பார் திருநாவுக்கரசர். இக்கண்ணியால் எளிய உலகில் அறிவு ஒன்றினுல் மட்டுமே இறைவனைக் காண்பதாகக் கூறும் நிலைதமக்கு வேண்டியதில்லை என்கிருர். இதற்கு மாருகமுதலில் கண்டதுபோல் கண்ணீரால் இறைவனைக் காணத்துடிக்கின்ருர் தாயுமானவர். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்பாரன்ருே திருவாசக மணிவாசகர். தாயு மானவரும்—

'துன்பக் கண்ணீரில் துளைந்தேற்குன் ஞனந்த
இன்பக்கண் ணீர்வருவ தெந்நாள்' என்றுதான்
வேண்டுகிருர். திருநாவுக்கரசரும்,

'நகமெலாம் தேயக் கையால் நாள்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்தும்
.தொண்டர்
அகமலால் கோயி லில்லை ஐயன்ஐ யாற ஞர்க்கே'—
என்றிசைப்பார்.

கண்ணீர் வடித்துக் கடவுளருள் பெறும் வேட்கையே இங்கு விளக்கம் பெறுகிறது.

கண்ணீர் வழிபாடே கடவுளைத் தந்தது. 'ஈனமிகு வஞ்சனையால் வெல்வேன்' என்று வந்த அதிசூரன், பொய்த் தோற்றத்துடன் வந்த முத்தநாதன் போன்ருேர் நெறிக ளிலே வாய்மையில்லையாதலால், அவர்கள் திருநீறணிந்த போதும், திருவைந்தெழுத்தைச் சொன்ன போதும் பெரு மையுற்றிலர். இதனை வெளிப்படுத்துதல் போலவே, தாயுமானவரும்,

'வஞ்சனையும் பொய்யுமுள்ளே வைத்தழுக்கா ருயுளறு
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான்' என்கிருர்.

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்பது திருவருட்பா.

பல பிறவிகளில் துன்பங்களைத் தொடர்ந்து கண்ட நெஞ்சம், அந்நெடுநாள் உறவை நினைவூட்டித் தனக்கருள் புரிய வேண்டுகிறது.

'இன்று புதிதன்றே? எளியேன் படுந்துயரம்
ஒன்றுமறி யாயோ?' எனவினவித் தாம் படும் பிறவித் துயரிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டுகிறார்; பாசநீக்கம் வேண்டுகிறார். எடுத்த பிறவிகளிலெல்லாம் இறைவனை உற்று உற்றுப் பார்த்தும் அருள் கிடைக்கப் பெறுமையால் அடைந்த மருட்சியை நீக்கவும் கோருகிறார்.

'உற்றுற்று நாடி உளமருண்ட பாவியைநீ
சற்றிரங்கி ஆளத் தகாதோ? — எனக் கேட்பதன் வாயிலாகத் தம்மைத் தடுத்தாட் கொண்டு பேரருள் பொழிய வேண்டுகிறார்.

இறைவனை எண்ணி எண்ணி உலகியலை முற்றும் மறந்த களங்கமற்ற 'சமாதி' நிலையில்தான் அன்பு உண்டன்றிப் பிறிதில் இல்லை என்பதை,

'நேச நிருவிகற்ற நிட்டையல்லால் உன்னடிமைக்
காசை புண்டோ?' என்னுங் கண்ணியில் பாடுகிறார். 'பரத்தை மறைத்த பார்முதற் பூதங்கள்' ஆட்கொண்டால் சமாதிநிலை இல்லை; ஆதலால். அவற்றை மறந்த நினைவே வேண்டுகிறார். அருள்நிலை என்னும் உயர்விற்குச் செல்லும் போது இறையடியாரையே உள்ளம் பெரிதும் விரும்பும். அவ்விருப்பமும் அருளுக்கு வழிகாண்பதாகும்.

'கண்ணுவா ரேனுமுனைக் கைகுவிய ராயினந்த
மண்ணுவார் நட்பை மதியேன்'
என்று பாடித் தம் நெஞ்சுறுதியைப் பாடுகிறார்.

'சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்:
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுடிலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே' —
என்பார் திருநாவுக்கரசர்.

இவ்வுறுதி நெஞ்சம் வளர்ந்த பின், தாயுமானவரின் விருப்பம் இன்னும் வளர்கிறது. 'யான்பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்' என்பதுபோலவே, இறை விருப்பத் தன்மையால்

'கொல்லா விரதம் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை' என்கிறார். அன்பு நிலையே ஆண்டவன் நிலை என்பதை இக் கண்ணி பாடுகிறது
'கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிருந் தொழும்' என்பது வள்ளுவமன்றோ!
'வாயினாற் பேசா மௌனத்தை வைத்திருந்தும்
தாயிலார் போல்நான் தளர்ந்தேன்' எனத் தம் இயல்பைக் கூறிய தாயுமானவர்,

'உற்றுநினைக் கில்துயரம் உள்ளுள்ளே செந்தீயாய்ப்
பற்றநொந்தேன்; என்னைமுகம் பார்' எனப்பாடுகிறார்.

தாயருள் நாடும் குழந்தையெனத் தம் நிலையைக் கூறுகிறார் 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்தென் ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி' என்றுவரும் திருவாசக உண்மை போலத் தாயன்புநிலையில் தம் வேட்கையைத் தருகிறார்.

மாணிக்கவாசகர், 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே' என்பார். இறைவனைப் பிடித்தபின் இவ்வுலகப் பிடிப்பு இல்லையாகும். மாணிக்கவாசகரின் இக் கருத்தையே,

'உன்னைநினைந் துன்னிறைவி னுள்ளே உலாவுமென்னை
அன்னைவயிற் றின்னமடைக் காதே' என்னும் கண்ணியில் கூறுகிறார் இவ்வேட்கை மேலும் ஒருபடிவளரும் போது

'வந்தித்து நின்னை மறவாக் கடனுகச்
சிந்திக்க நின்னருள் செய்யாய்' என்ற கண்ணி

தோற்றம் பெறுகிறது.

'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும் மறவாமை வேண்டும்' என்று

தான் பெரியபுராணமும் பாடும்.

இறைவனை நினைத்து நினைத்து உயிர் வளரும் போது எவ்வுயிரையும் தன்னுயிர் போலவே எண்ணுகின்ற பேரின்பப் பெருநிலை தோன்றும். அத்தோற்றம் வளர்ந்த நிலையில் உயிர்,

'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுன்
தெய்வ அருட்கருணை செய்யாய்' என வேண்டக் காணலாம். 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே, வழுவா திருக்க வரம்தர வேண்டும்' எனப் பாடவில்லையா திருநாவுக்கரசர்? எவ்வுயிரையும் தம் முயிராய் நினைக்கும்போது, எல்லா அடியார்களுடன் கலந்து ஒன்றுகி விளங்கவேண்டும் என்னும் நினைப்பு வருதலும் இயற்கையே 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' எனச் சுந்தரர் பாடிப் பெருமை பெறவில்லையா? அவ்வாறே, கள்ளமற்ற உள்ளமுடன் வாழும் தூம்மை, இறையடியார்க் கூட்டத்துடன் சேர்த்து வைக்க வேண்டுகிறார்.

வெட்டவெளிப் பேதையான்; வேறுகப டொன்றறியேன்
சிட்டருடன் சேர்; அனந்த தெண்டம்'

என்னுங் கண்ணியில்.

அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பேரானந்தப் பேரொளியே இறைவன் என்பது அடியார் உள்ளம்.

'எப்பொருளும் நீயெனவே எண்ணிநான் தோன்றுத
வைப்பையழி யாநிலையா வையாய்'

என்னும் கண்ணியில் அவ்வுள்ளம் காணலாம்.

'பண்ணேன் உனக்கான பூசை; ஒருவடிவிலே
பாவித்தி றைஞ்சவாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தியப்
பனிமல ரெடுக்க மனமும் நண்ணேன்'

எனத் தாயுமானவரே கூறுகிறார். பட்டினத்தாரும்,

'சொல்லிலும் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
மல்லிலும் மாசற்ற ஆகாயந் தன்னிலு மாய்ந்துவிட்டோர்

இல்லிலும் அன்ப ரிடத்திலும் ஈசன் இருக்குமிடம் கல்லிலும் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே' என்றிசைப்பார். இச்சூழலில் 'நான்' என்னும் ஆணவச் செருக்குத் தமக்கு வரக் கூடாது என வேண்டுகிறார்.

இச்சூழலே,

'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ யன்றோ!

என மீண்டும் கூறக்காணலாம்.

'சொல்லாடா ஊமரைப்போல் சொல்லிறந்து நீயாகின்
அல்லால் எனக்குமுத்தி யாமோ?'

என்னும் கண்ணியில், இறைத்தன்மையைத் தாம் பெற வேண்டும் என்றும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறார். இறைவன் தன்னைத்தரும் நிலையில்தானே வரும் போது உயிர் இருளுள் மூழ்கினால் பயனில்லை. ஆதலால், மாயை என்னும் இருளுள் மூழ்கக் கூடாது என்பதை

'காட்ட அருளிருக்கக் காணா திருள்மலத்து
நாட்ட மெனக்குவரல் நன்றோ'

என்னும் கண்ணியில் கூறுகிறார். 'காரிட்ட ஆணவக் கரு வறை' என்றிவரே கூறியிருத்தல் எண்ணத்தக்கது. இருள் மாயைக்குள் மூழ்கி விடுகிறதே என்பதைக் காணும் தாய் வந்தருகிருந்து தன் சேயைக் காத்தல் இயற்கை இந்நிலையில் தவறுபடும் தம்மைக் காக்க வேண்டுகிறார்.

'எத்தன்மைக் குற்றம் இயற்றிடினும் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளு மன்றோ'

என்பதில் நினைப்பென்றும் மறப்பென்றும் நிகழ்வனயாவும் இறைச்செயல்களே. அவை அவ்வாறாயின், உயிர்க்கென்று ஒருநிலை இல்லை. இதனை,

நின்போதத் தாலே நினைப்பு மறப்புமென்றால்
எனபோத மெங்கே'

என்ற கண்ணியில் கூறுகிறார். யாவும் அவனே என்றறிந்த நிலையில், தாயுமானவர் 'இறைவன் திருவருள் அடியேன் மனத்தினை நேராகக் கொண்டுவிட்டால், பிறபொருள் ஒன்றினையும் காணேன்; சிவஆனந்தத்தை அடைவேன்' என்று கூறித் தம் மனத்தை நேராகக் கொள்ள வேண்டுகிறார். அடியவரது இவ்வேட்கை,

'நேரே நினதருளென் னெஞ்சைக் கவரினென்றும்
பாரேன்; சுகமும் படைப்பேன்'

என்பதில் கூறுகிறார். அவ்வின்பம் அடையும் வேளையில் 'மாயா காரியமாகிய உலகம் எனக்குத் தோன்றாதிருக்கு மேல் எனக்கு வேறு பற்றும் இல்லையாகும்; அப்பற்று இல்லையாகவே, இறைவனைப் பற்றிக் கொண்டு நீயே நானென்று வந்துநிற்பேன்' என்னும் விருப்பமும் சிறப்புற வெளிப்படுவதையும் தெளிவாகக் காணலாம்.

'மாயா சகமிலையேல் மற்றெனக்கோர் பற்றுமிலை
நீயேநா னென்றுவந்து நிற்பேன்'

என்னுங்கண்ணி இதனைக்கூறும் 'மற்றுப்பற்றெனக்கில்லை' என்பது அடியாரது சொல்.

உயிருக்குப் பிறர் எவர் இருந்தாலும் இல்லாதிருந் தாலும் நன்மையோ தீமையோ இல்லை. ஆனால் 'இறைவா உன்னருட்சீர் இருந்தால் நான் உய்வேன்' என்று கூறி உய்திதரும் இறையருளை,

ஆரிருந்தென்? ஆ.போயென் ஆரமுதா நின்னருளின்
சீரிருந்தால் உய்வேன்'

என்னுங் கண்ணியால் விளக்குகிறார். இவ்வருளும் எத் தகையதாய் இருக்க வேண்டும் என்பதையுங் கூறுங்கால் தாயுமானவர்

'அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும்'

என்கிறார். அடியார்க்காகத் தொண்டாற்றும் தூயமனநிலை இங்கு வேண்டக்காணலாம். பெரியபுராணமாகச் சிறந்தி லங்கும் அடியார்கள் யாவருமே அன்பர்பணி செய்ய ஆளானவரன்றோ!

அன்பர்பணி செய்ய வருவார் வினைகளால் சூழப்பட டக் கூடாது. வினைகளால் அழுந்தப்பெறின், பணிகள் தடைப்படும். ஆதலால்,

என்னைக் கெடுக்க இசைந்த இருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ?'

எனப்பாடி வினைகளைக் கெடுக்க வேண்டுகிறார். ஏனெனில் மாணிக்கவாசகரும் தம்மரிய திருவாசகத் தொடர்களில்,

'வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் **வினைக்கேடன்** என்பாய் போல'

என இறைவனை 'வினைக் கேடன்' என அறிவித்தல் நோக்கத்தக்கது.

இவ்வினைகளே மயக்கத்திற்குக்காரணமாக அமைவன. இவ்வினை மயக்கத்தைப் போக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்வதே உய்திக்கு வழி என்றறிகிறார் அறியவே,

'தேடினேன் திக்கனைத்தும் தெண்டமிட்டேன்
சிந்தைநைந்து வாடினேன் என்மயக்கம் மாற்றாய்'

என வேண்டுகிறார். 'அப்பா நான் கேட்டது தந்தருள வேண்டும்' எனவேண்டுவதன்றோ அடியாருள்ளம்! மயக்கத்தைப் போக்குவதுடன், பாசமாகிய சோம்பலையும் தடுத்தாள வேண்டும் என்பதையும் தாயுமானவர்,

'மடிமையெனு மொன்றை மறுத்தன்றோ என்னை
அடிமைகொளல் வேண்டும்'

என்னும் கண்ணியில் பாடுகிறார். வினைகளையும் பாசத்தையும் நீக்கிய உயிர் இறைவனைச் சரணடைகிறது. சரணடைகின்ற உயிரைக் காக்க வேண்டுகின்றபோது,

'நின்னைச் சரண்புகுந்தால் நீகாக்கல் வேண்டுமல்லால்
என்னைப் புறம்விடுதல் என்னே'

என்னும் வேட்கை வெளிப்படுகிறது. சரணடைந்த உயிருக்குச் 'சொல்லும்' தரவேண்டுகின்ற தாயுமானவர். முன்பு தந்த வழக்கத்தை நினைவூட்டிக் கேட்கிறார்.

'அன்றந்த நால்வருக்கும் அற்புதமாய் நீயுரைத்த
தொன்றந்த வார்த்தையெனக் குண்டோ?'

என்ற கண்ணி அவ்வேட்கையைக் கூறுகிறது. நச்சுவார்க்கினியனன்றோ இறைவன்!

வேட்கைப்பற்று மீதூரும் போது, உரிமையும் எழுந்து விடுகிறது. இவ்வுரிமையினால்

'ஏங்கி இடையுநெஞ்ச ஏழையைநீ வாவென்றே
பாங்குபெறச் செய்வதுன்மேல் பாரம்'

என்றே கூறிவிடுகிறார். இந்நிலைக்குக் காரணமும் காட்டி விடுகிறார்.

'ஓராமல் எல்லாம் மொழிந்தேற்குன் தெய்வவருள்
தாரா திருக்கத் தகுமோ?'

எனக்கேட்பதன்மூலம் தாம் உலகநிலைகளை மறந்து இறை நிலையை எண்ணிய தொழில் கூறுகிறார். கூறவே அவ் வேட்கை,

'மோனம் தருஞான மூட்டி எனக்குவட்டா
வானந்த வாழ்க்கை அருளாய்'

என்று வேண்டுகிறது. இறையருளைக் காணவேண்டி

'உள்ளம் குழைய உடல்குழைய உள்ளிருந்த
கள்ளம் குழைய'

வேண்டுகிறார். வேண்டிய தாயுமானவர் தம்மைக் காக்கக் கூறும் போது,

'என்னைப் புறப்பதரு ளின்கடனும்; என் கடனும்
நின்னிள் பணியறவே நிற்கை' —என்கிறார்.

'என்க டன்பணி செய்து கிடப்பதே
தன்க டனடி யாரையும் தாங்குதல்'

என்றன்றே திருநாவுக்கரசர் மொழிந்தார்.

உண்மையான தூய திருவருள் யாதென எண்ணு கிறார் அடியார். தம் எண்ணத்தை இறைவனிடமே கேட் பதுபோல்,

'நித்திரையும் பாழ்த்த நினைவுமற்று நிற்பதுவோ
சுத்த அருள்நிலை? நீ சொல்லாய்'

என வினவித் தமக்கு அந்தச் 'சுத்த நிலை' தர வேண்டு கிறார். இவ்வுண்மை அருள்நிலை அடைந்தக்கால் வேட்கை யால் முந்துறும் உள்ளம் அடையும் பேரின்பப் பெருமகிழ்ச்சிகளையும் கூறுகிறார் தாயுமானவர்.

'இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய்'

என்பது முழுமை நிலையின் வேட்கையாகும் 'ஏகாந்தசிவ ராஜ யோகம்' என்னும் தனிநிலையருள் தமக்குத் தந்தருள வேண்டுகிறார். அந்தத் 'திருக்கருணை' தந்தருளும் இறைமையால் தாயுமானவர் உள்ளம் மிகவும் விரிந்து,

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்'

என்று கூறும் வண்ணம் உயர்ந்து விடுகிறது.

'நீராய்க் கசிந்துருகி நெட்டுயிர்த்து நின்றேனைப்
பாராத தென்னே'

எனப்பாடிப் பின் இறையருளைப் பெற்ற தாயுமானவர்.

இறைவன் பார்த்தருள் செய்த தன்மையை வியந்து வியந்து

'தாரா அருளையெல்லாம் தந்தெனையும் நின்னருளில்
வாராயோ என்றனைநீ வாழி'

என உயிரார வாழ்த்துகிறார்.

அருள்பொழிந்த இறையன்பை வியந்த நெஞ்சம் அருளிலேயே மூழ்குவதால்.

'சந்ததமும் நின்கருணை சாற்றுவதல் லால்வேறு
சிந்தையறி யேன்; உன் சித்தம்'

என்று 'அவனை'யே எண்ணும் உறுதியையும்

'நானா னெனக்குளறு நாட்டத்தால் என்னைவிட்டுப்
போனாலும் உன்னைவிட்டுப் போகேன்'

என்று 'அவனே' வாழ்வென்னும் துணிவையும் தந்து விடுகின்றார்.

இதன் விளைவு என்ன?

'சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்றவுன்னைத்
தந்தவுனக் கென்னையுநான் தந்தேன்'

என்றன்றோ உயிர் கூறுகிறது.

'தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்'

எனமாணிக்கவாசகர் பாடும்போதும் தாம் இறைவனைப் பெற்ற பேரின்பத்தை எண்ணி வியக்கக் காணலாம்.

'சித்திநெறி கேட்டல் செகமயக்கம்; சன்மமற
முத்திநெறி கேட்டேன் முறைகாண்'

என முத்திநெறி கேட்டு அதனைப் பெற்றதால் தாயுமான வரின் நெஞ்சம் வழிபாடு நடத்துகிறது.

'நெஞ்சகமே கோயில்நினை வேசுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய்'.

இறைவனுக்குத் தாம்தரும் பூசையை—வழிபாட்டை ஏற்க வேண்டுகிறது தாயுமானவர் அன்புள்ளம்!

---

"உருவிலே கவர்ச்சி மிக்கான்
உள்ளத்திலே யன்பு மிக்கான்
கருவிலே திருவு கொண்டான்
கலையிலே புலமை மிக்கான்
பெருமைசால் பாண்டித் தேவன்
பெருந்தகைச் சங்கங் கண்டு
பருவமா மழை போலிங்கே
பைந்தமிழ்க் குதவினனே"

தவத்திரு. கவியோகி அவர்கள்

# கம்பனுக்கு முன்

**பா. கங்காபரமேஸ்வரன் எம். ஏ.**
தமிழ் விரிவுரையாளர்,
பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி, பழனி.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்'' என்பது வள்ளுவர் வாய்மொழி. அறநெறி துலவாது, குடிபுரங்காத்தோம்பிக் கோலோச்சும் கொற்ற வெண்குடைக் கோமகனைக்கடவுளாகக் கருதிக் கழல்பணிந்து வந்தனர் பண்டைத் தமிழகத்துப் பெருமக்கள். 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்று கூறி ஏத்தி வணங்கினர்.

சங்கத்துச் சான்றோர்களோ தெய்வநிலை பெற்றுத் திகழ்ந்த திண்டிறல் வேந்தனை மன்னுயிர்க் குயிரென எண்ணிக் கவியாத்துப் புவிவேந்தனிடம் பொருள் பெற்றுப் பலரும் போற்ற வாழ்ந்தனர். 'மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' என்பது அவர்தம் துணிபு. அன்பின் அவயத்திருந்து ஆளும் அரசனை ஆருயிர்த் தொகுதியின் இன்னுயிராக மதித்து இணையடி இறைஞ்சி இன்புற்றனர் அன்று இருந்தோர். முரசு முழங்குதானை முடி மன்னனுடைய வழியே உலகின் வழியாக-உலகமக்களின் வழியாக உணரப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. குடி, படை, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய அனைத்தையும் கொண்டவன் இறை முறை பிறழா நெறி நின்றாலன்றி நீளுலகில் வாழும் உயிர்களுக்கு வாழ்வில்லை; வளமில்லை; ஏன் வளர்ச்சியே இல்லை என்ற எண்ணம் — முடிவு மக்கள் மனத்திலே ஆழப்பதிந்திருந்தது. நிலைதருகலைவல்லாரும், புகழ்தரு பொருள் வல்லாரும், அவையில்லாரும் அரசன் எவ்வழியோ அவ்வழிதான் மக்களின் வழி என்பதில் மாறுபட்டு நின்றவர்கள் எவருமே இல்லை என்னலாம். உயிர்க் குலத்தின் செயிர்தீர் வாழ்வு செழுமை பெறச்சிறந்த துணை

யாக இருக்கின்ற பிறபொருட்களையெல்லாம் மன்னனுக்குப் பின்வைத்தே பார்த்தது அவர்கள் மனம்.

உடலை வளர்த்து, அதன் மூலமாக உயிரை வளர்த்து வாழும் இவ்வைய வாழ்விற்கு மிக மிக இன்றியமையாத பொருட்கள் இரண்டு. ஒன்று நீர்; மற்றொன்று உணவு. இவையிரண்டும் இல்லையேல் இவ்வுலகமே இல்லாததாகி விடும். அதனை உணர்ந்திருந்த காரணத்தால்தான் தமிழ் மக்கள் நீரையும் உணவையும் இருமருந்தெனக் குறித்தனர். உணவினும் நீர் மிக உயர்ந்தது, சிறந்தது. அது இல்லையேல் எதுவுமே இல்லை. இதனை நன்குணர்ந்திருந்தமையால்தான் அறம் பாடிய அருந்தமிழ்ப் பாவலரும் ''நீரின் றமையா துலகெ'ன அருளிச் சென்றார். உணவின் தேவைப்பாடு ''பசி வந்திடப் பத்தும் பறந்து போம்'' என்னும் பழமொழியால் அறியக் கிடக்கின்றது.

நீரையும் நெல்லையும் நீர்க்கோல வாழ்விற்கு நிலைக்களனுகக் கருதிய உள்ளம்தான் அவ்விரண்டையும் ஆழிசூழ் உலகாள் அரசனுக்கு அடுத்தே வைத்து எண்ணியது. இதனை

''நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனல் யானுயி ரென்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே''

எனவரும் மோசிகீரனாரின் பாடலால் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

புறம்வகுத்த இம்மரபினையே பிற்காலத்துத் தோன்றிய பெருமக்களும் பேணியொழுகலாயினர். 'மன்னுயிர் ஞாலக் கின்னுயி ரொக்கு மிறை' எனப் பெருங்கதை பேசுகிறது. மாமன்னன் குலோத்துங்கனை 'உலகினுக்குயிராயிருந்தன னிறை' எனத் திருவிளையாடற் புராணம் பாராட்டுகிறது. சீவகசிந்தாமணி, சூளாமணி போன்ற இலக்கிய மணிமாளிகைகளிலெல்லாம் மன்னன் மக்களின உயிராகவே உறைகின்றான்.

இவ்வாறு மன்னனை மன்னுயிர்க் குயிராக எண்ணி ஏத்திய மனப்பான்மை இடைக் காலத்திலே மாறத்

தொடங்கியது. மன்னவன் இன்றெனில் மன்னுயிர் இல்லை; மாநிலக் காவலும் இல்லை என்னும் மனப்பான்மை மறைய மக்கள் இல்லையேல் மெளலி புனைந்த மன்னவன் இல்லை. என்னும் மனப்பான்மை வளரத்தலைப்பட்டது. தெய்வப் பேற்றிலிருந்து, உயிராக உலவிய ஒளிறுவாள் வெண்குடை ஒப்பிலான் உலக மக்களின் பிரதிநிதியாக மாற்றப்பட்டான் அவனை—அவனது அரசை— அவனது அழியாதபழியில் புகழை நிலைபெறச் செய்பவை மக்களின் சீரிய சிந்தனையும் செம்மைநிறை செயலுமே என்ற உறுதி மக்களின் உள்ளத்திலே உருவாகியது. உயிராகத் திகழ்ந்த மன்னனை உயிர்கள் எல்லாம் சென்று நின்று வாழுதற் கேற்ற உடலாகக் கண்டது அறிவுலகம். அரசன் என்பவன் வெறும் உடல்தான்; அந்தவுடல் பொலிவும் வலிவும் பெறவும் பொன்றாத புகழ்பெறவும் மக்களாகிய உயிர் வேண்டும் என்று உலகம் உணர்ந்தது. மக்களாகிய உயிரின் வளர்ச்சிக்கு ஊறுநேரின் மன்னனாகிய உடல் மண்புக்கு மாய்வது திண்ணம் என எண்ணினர் சான்றோர். முடியரசிலும் குடியரசு முகிழ்த்தது அன்றுதான்.

நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த மரபை மன்னனே உயிர் என்ற நிலையை மாற்றியது யார்?

கல்வியில் பெரியவனாகிய கம்பநாடன்தான் என்பது அறிவுலகம் ஒருசேர இதுவரை ஒப்புக்கொண்ட உண்மை. இப்படி மக்களை மன்னுயிர்களை உயிராக்கி உலகுபுரந் தரும் ஒருவனை உடலாக்கிய கருத்து அவனுக்கே உரியது என்பர். வெற்றிவேல் வேந்தனைக் குற்றமில் குடிமக்களின் உடலாக அவன் கண்ட காட்சியே கம்பன் செய்த புதுமை—புரட்சி என்பது அவர்களுடைய நம்பிக்கை. கம்பனுக்கு முன் தோன்றிய எவரும் இத்தகைய கருத்தினை எடுத்தியம்பவில்லை என்பது அவர்களது முடிவு. அவர்களின் அறிவின் முடிவுக்கு அரணாக

"வயிரவாள் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஒப்பலால்
செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்"

என்ற பாடலைக் காட்டுகின்றனர்.

பெருமக்கள் பலர் பேசுவதைப் போல கம்பன்தான் இப்புதிய கருத்தைப் புகுத்தியவனு? அவனுக்கு முன் தோன்றிய எவருக்குமே இத்தகைய தொரு எண்ணம் எழவே இல்லையா?

கம்பனுடைய உள்ளத்தை-உயர்ந்த கருத்தை-உட்கிடக்கையைப் புலப்படுத்தும் இப்பாடலில் பொதிந்துள்ள பொருள் யாது? உலக உயிர்க்குலம் முழுவதையும் தன்னுயிரெனக் கருதித் தனக்கொப்பக் காத்தவன் தயரதன், அதனுல் உயிரின் தொகுதி சென்று நின்று வாழ்வதற்குரிய உடலாகவும் அவன் இருந்தான் என்பதே.

பலரும் கூறுவதுபோல நெடும் பண்டைக் காலந் தொட்டுத் தொடர்ந்து வந்த மன்னன்தான் உயிர் என்ற மரபைக் கம்பன் ஒதுக்கி விடவில்லை என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. 'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினுன்' .என அவன் பாடியதிலிருந்தே மன்னனே உயிர் என்ற கருத்தை அவன் மறுக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. எனவே கவிச்சக்கரவர்த்தி மன்னனை உயிர், உடல் என்ற இரண்டு நிலைகளிலேயும் வைத்துப் பார்த்துள்ளான் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பழமையோடு புதுமையையும் இணைத்துப் பார்த்து இன்புற்ற புலமை கம்பனுடைய புலமை எனப் போற்றிப் புகழ்வதில் தவறேதுமில்லை. அதே வேளையில் 'மன்னன் உடல்' என்ற ஒரு எண்ணத்தை அவன்தான் முதன் முதலாகத் தோற்றுவித்தவன் என்பதை ஏற்றுக் கொள்வது இயலாததொன்று. காரணம்?

சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்கிய மாபெரும் பத்தினி மகள் மணிமேகலையின் வரலாற்றைத் தமிழ் உலகிற்கு வழங்கியவர் சீத்தலைச் சாத்தனுர். அவர் கம்பனைப் போல இருவேறு நிலைகளில் மன்னனைக் கண்டதாகத் தெரியவில்லை. மன்னனே உயிர் என்ற கருத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. கம்பன் தோன்றுவதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய அவருக்கு ஆளும் வேந்தன் வீழும் உடல்தான் என்ற எண்ணமே இருந்திருக்கிறது. அதனுல்தான் மன்னனை உடலாக்கி மாயா உயிராக மக்களை உருவாக்கி அரசை இயக்க வைத்துப் பாடி மகிழ்கிருர். மன்னனே உயிர் என்ற மரபை மாற்றிய

துணிபு அவருக்கே இருந்தது. அதனைக் காணும் அறிவும் ஆற்றலும் பெற்றவராகவே அவர்காட்சியளிக்கிறார். இதனைத் தனது காப்பியத்தின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

பாத்திரம் பெற்ற பைந்தமிழ்ப்பாவையின் வரலாற்றுப் படைப்பில் துயில் எழுப்பிய காதையில் சாத்தனாரின் அறிவின் செறிவை உள்ளத்தின் ஒளியை நாம் காணலாம்.

''கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங்கூரும்
மாரிவரங் கூறின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்''

என்பது அவர் பாடிய பாட்டு.

இந்தப் பாட்டு எதனை வலியுறுத்துகிறது? செங்கோல் கொடுங்கோலாக மாறுமாயின் கோள்நிலை மாற, மழை வளங்காக்க, வையத்து உயிர்கள் வாழும் வகையின்றி உயிர் துறக்க நேரிடும். அவ்வுயிர்கள் வாழவில்லையேல் அவை மண்ணையாளுகின்ற வேந்தனது உயிர் என்ற தகுதியினையும் இழந்து விடும். இக்கருத்தினையே வலியுறுத்துகிறது பாட்டு.

இங்கு பொதிந்துள்ள புதுமை என்ன? மன்னுயிர் தான் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்; அவ்வுயிர் இல்லையேல் மன்னனுக்கு இயக்கமில்லை; இனிய அரசுமில்லை. அதனால் மன்னன் வாழ மன்னுயிர் தேவை. இக் கருத்தினையே நாம் சங்க இலக்கியத்தில் காணாத புதிய கருத்தாகக் காண்கிறோம். நேரடியாக மன்னனை உடல் எனக் கூறவில்லையென்றாலும் மண்ணாள் வேந்தன் தன்னுயிர் என்பதால் மன்னன் வெறும் உடல்தான் என்பதை உய்த்துணரவைக்கிறார் புலவர்.

எனவே, கம்பன் செய்த புரட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து மணிமேகலையின் வரலாறு எழுதப் பெற்ற அன்றே சாத்தனாரால் கூறப்பட்ட கருத்து என்பதை ஒத்துக் கொள்ளாமலிருக்க முடியாது. கவிச்சக்கரவர்த்தி சாத்தனாரின் கருத்தை ஏற்று, அதற்கு மெருகு கொடுத்தான் எனக் கொள்வதனால் அவனுக்கு எவ்விதக் குறையும் நேர்ந்து விடாது என்பது திண்ணம்.

# கோத்த மொழியில் பாலெண் இன இயைபு[1]

கோ. சுப்பையா
இந்திய மொழிகளின் நடுவண் நிலையம்,
மைசூர்-570006.

நிலகிரிமலைத் தொடரில் பேசப்படுகின்ற கோத்தமொழி தென்திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். 2இக் கோத்தமொழி பழந்தமிழோடு மிகவும் நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளது. இம்மொழியில் காணும் இலக் கணக்கூறுகளில் ஒன்றான பாலெண் இன இயைபு (Gender-Number Concord) தனித்தன்மை பெற்று விளங்கு கிறது. இவ்விலக்கணக்கூறு ஏனைய திராவிடமொழிகளில் காண்பதைக் காட்டிலும் அமைப்பிலும் (Structure) தன் மையிலும் [Characteristic] வேறுபட்டு நிற்கிறது. இத னைப்பற்றி ஆய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

தமிழைப் போன்று3 கோத்தமொழி மூவிடப்பெயர் களில் [Personal Pronouns] எண் வேறுபாட்டையும் (Number distinction); உயிர்திணைச் சுட்டுப்பெயர்களில் பாலெண் வேறுபாட்டையும் [Gender-Number distinction] தெளிவாக உணர்த்துகிறது. தன்மை இடப்பெயர்

1. இக் கட்டுரையின் ஒரு பகுதி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ''திராவிட மொழியியல் கருத்தரங்கு-IIIல்'' படிக்கப் பெற்றது.
2. கோ. சுப்பையா 1970; தமிழும்-கோத்தமும்-ஓர் ஒப்பியல்பு. செந்தமிழ, மதுரை.
3. கோ. சுப்பையா 1970; கோத்த மொழியில் மூவிடப் பெயர்கள், தமிழ்ப் பொழில், கரந்தை, தஞ்சாவூர்.

பன்மையில் உளப்படுபன்மை (Inclusive), உளப்படாப் பன்மை (Exclusive) என இருபாகுபாடுகளுண்டு. இப் பாகுபாடு உருபேற்கும் சொல்லடியிலும் [ObliqueBase] பாலெண்காட்டும் விகுதிகளிலும் (Personal Endings) தான் காணப்படுகிறது. ஆனால் தமிழில் இப்பாகுபாடு இயற்சொல்லடியிலும் (Nominative Base), உருபேற்கும் சொல்லடியிலும்தான் வழங்கப்படுகிறது. இதைக் கீழ் காணும் அட்டவணை தெளிவாக விளக்கும்.

| மொழி | இயற்சொல்லடி | உருபேற்கும் சொல்லடி | பாலெண்காட்டும் விகுதி |
| --- | --- | --- | --- |
| தமிழ் | நாம்<br>நாங்கள் | நம்—<br>எங்கள்— | —ஓம் |
| கோத்தம் | ஆம் | அம்—<br>எம்— | —ஓம்<br>—ஏம் |

பாலெண் இன இயைபை மூன்று வகைகளாகப் பிரித்து உணரலாம். இதனைக் கீழ்க்காணும் கிளைப்படம் காட்டும்.

| | | |
| --- | --- | --- |
| எழுவாய்-பயனிலைத் தொடர் இயைபு (எண் இணை இயைபு) | உயர்திணைச்சுட்டுப்பெயர்-உறவுமுறைப் பெயர் இயைபு (பால் இணை இயைபு) | மூன்றனுருபுடை எழுவாய்-பயனிலைத் தொடர் இயைபு |

1) எழுவாய்—*பயனிலைத்தொடர் இயைபு:—

திராவிடமொழிகளில் மலையாளமும், பிராகூயியும் எழுவாய் பயனிலைத்தொடர் இயைபைப் (Subiect-Verb prebicate Concord) பெற்றிருக்கவில்லை. கோத்த மொழியில் சாதாதொடரன்களில் (Affirmative Sentenccs) முதவிரு இடப்பெயர்களுடன் வினைத்தொடர் இயைந்து வழங்கப்படுகின்றது. ஆனால் படர்க்கை இடப்பெயரும் [Reflexive Pronoun], உயர்திணைச்சுட்டு /வினைப்பெயர்களுடன் பயனிலைத்தொடர் இணக்கம் காண்பதில்லை. அதாவது பயனிலைத்தொடரைக்கொண்டு, அத்தொடரனின் எழுவாய் இன்னது என அறுதியிட்டுக்கூற இயலாது. இவ்வகையில் மலையாளத்துடன் கோத்தம் ஒற்றுமைப் பெற்றிருக்கிறது.

1. ஆன் பாச்பேன் 'நான் பாடினேன்'
2. a. ஆம் பாச்பேம் 'நாங்கள் பாடினோம்'
2. b. ஆம் பாச்போம் 'நாம் பாடினோம்'
3. னீ பாச்பீ 'நீ பாடினாய்'
4. னீம் பாச்பீம் 'நீங்கள் பாடினீர்கள்'
5. a. அவ்ன் பாச்கோ 'அவன் பாடினான்'
5. b. அவ்ள் பாச்கோ 'அவள் பாடினாள்'
5. c. அவ்ர் பாச்கோ ''அவர்கள் பாடினார்கள்'
5. d. அத் பாச்கே 'அது / அவை பாடியது / பாடின'
6. மல்ன் பாச்கோ 'மல்லன் பாடினான்'
7. மாத்ய் பாச்கோ 'மாதி பாடினாள்'
8. ஆள்கூள் பாச்கோ 'மனிதர்கள் பாடினார்கள்'

எதிர்மறைத்தொடரன்களில் (Negative Sentences) வரும் உயர்திணைப்பெயருடன், வினைத்தொடர் எண் வேறுபாட்டை ஒருமை / பன்மை—உணர்த்தி இணைந்து வழங்கப்பெறுகிறது. ஆனால் பால்வேறுபாட்டை உணர்த்ாது.

---

* பயனிலைத் தொடர் என்றாலும், வினைத்தொடர் (Verbpredicate) என்றாலும் ஒரே பொருளைத்தான் உணர்த்தும். எனவே பயனிலைத் தொடர் என்று பயன்படுத்துமிடத்தில் வினைத் தொடர் எனப்பயன் படுத்தலாம்.

9. a. அவ்ன் தினா 'அவன் சாப்பிடவில்லை'
9. b. அவ்ள் தினா 'அவள் சாப்பிடவில்லை'
10. அவ்ர் தினாம் 'அவர்கள் சாப்பிடவில்லை'
11. a. ஆள் தினா 'மனிதன் சாப்பிடவில்லை'
11. b. ஆள்கூள் தினாம் 'மனிதர்கள் சாப்பிடவில்லை'

சாதா தொடரன்களில் வினை இடவிகுதியைப் பெற்றுள்ளது; பாலெண் வேறுபாட்டை உணர்த்துவது இடையாது. ஆனால் எதிர்மறைத்தொடரன்களில் வினை எண் வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டுகிறது இதைக் கீழ் காணும் அட்டவணையில் பாலெண் [இஉ] விகுதிகளுடன் காட்டலாம்.

### இயற்தொடரன்

| சாதா தொடரன் | | | எண் | எதிர்மறைத்தொடரன் | | |
|---|---|---|---|---|---|---|
| ப. இ.பெ. | மு. இ. பெ. | த. இ பெ | | த. இ பெ. | மு இ. பெ. | ப. இ. பெ. |
| —கோ | —ஈ | —ஏன் | ஒருமை | —ஏன் | —ஈ | —ஆ |
| | —ஈம் | —ஏம்<br>—ஓம் | பன்மை | —ஏம்<br>—ஓம் | —ஈம் | —ஆம் |

**2) மூன்றனுருபுடை எழுவாய்- பயனிலைத் தொடர் இயைபு:-** கோத்த மொழியில் காணும் தொடரன் வகையில் மூன்றனுருபுடைத் தொடரனும் ஒன்றாகும் இவ்வகை தொடரனைத்தவிர எல்லாவகைத் தொடரன் களிலும் எழுவாய் வினை இயைபைக் காணலாம். மூன்றனுருபுடைத் தொடரனில் உருபேற்ற எழுவாயும் பயனிலைத்தொடரும் இணக்கம் கொண்டுள்ளது வேறெந்த இலக்கிய வளமிக்க மொழிகளான தமிழ், மலையாளம் போன்றவைகளில் காணப்படாமை இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

ப. இ பெ: படர்க்கை இடப்பெயர்; மு. இ பெ: முன்னிலை இடப்பெயர்; த. இ. பெ: தன்மை இடப்பெயர்.

12. ஆன் புஜ் [ன்] தவிர்ச்பேன் 'நான்புலியைக் கொன்றேன்'
13. னீ இம் (ன்) சச்பீ 'நீ எருமையை வெட்டினுய்'
14. ஊன் செல்க் (ன்)மூர்ச்கோ 'இவன் குச்சியை உடைத்தான்'
15. புஜ எனலால் தவிர்ச்பேன்
 'புலி என்னுல் [*கொல்லப்பட்டது] கொன்றேன்'
16. இம் னினால் சச்பீ
 'எருமை உன்னுல் (*வெட்டப்பட்டது) வெட்டினுய்'
17. செல்க் ஊளால் மூர்ச்கோ
 'குச்சி இவனுல் [*உடைந்தது] உடைத்தான்'
18. கடாச் எனால் திற்கோ
 'தங்கை என்னுல் தின்ருள்'
19. அண் கராள்ன் கெக் கெய்க்ச்கோ
 'அண்ணன் தம்பியை வேலை செய்வித்தான்'

மாற்றுவிதி முறையால் (Transformational Ruel) சாதா தொடரனை எதிர்மறைத் தொடரனுகவும் (Negative Sentence), செயபாட்டுவினைத் தொடரனுகவும் (Passive Voice Sentence), கிரியைவினைத் தொடரனுகவும் (Causal Sentence) மாற்றி அமைக்கலாம். இம்முறையில் மூன்றனுருபுடை மாற்றுவிதியால் [Instrumental Transfor--matiom] சாதா தொடரனை மூன்றனுருபுடைத் தொடரனுகவும் மாற்றி அமைக்கலாம்.

தொடரன்கள் [15], [16], (17) என்பன முறையாக மூன்றனுருபுடை மாற்றுவிதியினுல் தொடரன்கள் (12), [13], [14] விருந்து பெற்றப்பட்டவைகளாகும்.

மொழிகளில் சாதா தொடரன்களிலும், ஏனையவகை தொடரன்களிலும் வினைத்தொடரன்களிலுள்ள இலக்கண எழுவாயுடன் (Grammatical Subject) ஆன் (12), னீ (13] ஊன் (14), கடாச் [18], அண் [19] இணங்கிவருவது இயல்பேயாகும்.

ஆனல் கோத்தமொழியில் இவ்வமைப்பு சற்று மாறுபட்டு விளங்குகிறது. கோத்தமொழியின் மூன்றனுருபுடைத்தொடரன்களைத் (15), (16), [17]—தவிர, எல்லாவகை தொடரன்களும் எழுவாய் வினைத்தொடர் இயைபைப்

பெற்றிருக்கின்றன. அதாவது இவ்வியைபு இலக்கண எழுவாய்-வினைத்தொடர் இயைபு என மொழிஇயல் அறிஞர்கள் கூறுவர்.

மூன்றனுருபுடைத்தொடரனில் உருபேற்கும் எழுவாய் தர்க்கஎழுவாய் தன்மையைக் கொண்டுள்ளது. அதாவது இத்தொடரன்கள் (15), [16], (17) இலக்கண எழுவாய் **புஜ்** (15), **இம்** (16), **செல்க்** [17]—எனவும்; தர்க்க எழுவாய் **எனால்** [15], **னினால்** (16), **ஊனால்** (17)-எனவும் இருவகை எழுவாய்களைப் பெற்றிருக்கின்றன. இத்தொடரன்களில், இவ்விருவகை எழுவாய்களில் தர்க்க எழுவாயும் (Logical Subject) வினைத்தொரும் தம்மில் இணக்கம் பெற்று விளங்குகின்றன. இத்தகைய [Structure] வேறெந்த தொடரன்களில் காணா. மேலும் இத்தொடரனமைப்பு (Sentence Structure) இலக்கியவளம் மிக்க திராவிடமொழிகளில் காணப்படாமை இங்கு நினைவு கூரத்தக்கது. இவ்வமைப்பு தொடரனியல் அமைப்பு முறையில் (Syntactic Structural Studies) மேலும் ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

### 3) உயர்திணைச் சுட்டுப்பெயர்—உறவு முறைப்பெயர் இயைபு:-

உயர்திணைச்சுட்டுப்பெயர், உறவுமுறைப் பெயருக்கு அடையாக (possessive) வரும்போது, உறவு முறைப்பெயரில் காணும்பால் தன்மைக்கேற்ப, தன்பால் தன்மையை மாற்றி அமைத்துக்கொள்ளப்படும். உறவுமுறைப் பெயர் ஆண்பால் தன்மை பெற்று, உயர்திணைப் பெயர் பெண்பால் தன்மையைக் கொண்டிருந்தால், இப்பெண்பால்ஆண்பாலாகத் திரிந்து வழக்கில் வழங்கப்பெறும்.

20. *அவள்–அய்ன் > அவ்ன் அய்ன்
[நே. பொ: அவனுடைய அப்பா] 'அவளுடைய அப்பா'
21. *அவள்—அண் > அவ்ன் அண்
(நே பொ: அவனுடைய அண்ணன்) 'அவளுடைய அண்ணன்'

---

*நே. பொ: நேரிடைப் பொருள் (Literary Meaning)

22. *அவ்ள்-கராள் > அவ்ன்கராள்
(நே. பொ: அவனுடையதம்பி) 'அவளுடையதம்பி'
23. *அவ்ன்-அவ் > அவ்ள்அவ்
[நே. பொ: அவளுடையஅம்மா] 'அவனுடையஅம்மா'
24. *அவ்ன்-அக்ள் > அவ்ள்அக்ன்
(நே. பொ: அவளுடையஅக்கா) 'அவனுடைய அக்கா'
25. *அவ்ன்-கடாச் > அவ்ள்கடாச்
(நே. பொ: அவளுடையதங்கை) 'அவனுடையதங்கை'
26 *ஊள்-ஆள் > ஊனாள் 'அவளுடையகணவன்'
27. *ஊன்-பெட் > ஊள்பெட் 'அவனுடையமனைவி'

மேலேயுள்ள சான்றுகளில் தொடர் (26), (27) தவிர ஏனைய தொடர்களில் பொருள் மயக்கத்தைப் [ambiguous] பொருள்கொள்ளும்போது காணலாம். ஆனால் இத்தொடர்கள் இணைத்தொடரன்களில் [Coordinative Sentences] அமையும் போது இம்மயக்கத்தைத் தருவதுஇல்லை.

28. *அவ்ன்மே அவ்ன்-கடாச்மே பாச்கோ >
அவ்ள்மே அவ்ள்காடச்மே பாச்கோ
அவனும் அவனுடைய தங்கையும் பாடினார்கள்'

உயர்திணைக் குறிப்புப்பெயர் (Human Proper Noun) உறவு முறைப் பெயருடன் வரும்போது, இவ்வித மாற்றம் பெறுவது கிடையாது.

29. மாத்ய்—அய்ன் > மாத்ய்அய்ன் 'மாதியுடையஅப்பா'
30. கம்பட்ன்-அவ் > கம்பட்ன்அவ் 'கம்பட்டனுடைய அம்மா'

# பாடொல்லாக் கண்கள்

— பண்டித வித்துவான் —
**கி. பொன்னுராமன்**

புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு பால் நிலா வெண்கதிரைப் பாவைமேற் சொரிகின்ற வேளை அது! அவ்வேளையில் வலம்புரிப் புறத்தெழு நலந்திகழ் மதியென வதியும் தாமரை முகத்தாள் தன்னந்தனியே செழுமையற்ற மரத்தினடியிலே அமர்ந்திருந்தாள். இன்னுயிர் இழந்த யாக்கையையுடையவன் போன்று தென்பட்டாள். காதள வோடிய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வந்த வண்ணம் இருந்தது. அவளுடைய கஞ்சனக் கதுப்புகளிலே துயரக்கோடுகள் படர்ந்திருந்தன. பிறைபழி நுதலின் கண் சோகத்தை வெளிப்படுத்தும் பல சுருக்கங்கள் தென்பட்டன. காந்தள் காட்டும் கைவிரல்கள் துடிப்பின்றிச் செயலற்றுக் காணப்பட்டன. 'பட்டேன் படாத துயரம், படுகாலை உற்றேன் உறுதது உறுவனே' என்று கூறுகின்றவள்போல் தென்பட்டாள். அவள் இன்னலைத் தீர்த்து இன்பத்தையூட்ட எவருமில்லை அதுபோழ்து. உலகமே தூங்குகின்றது. ஆனால் அவள் மட்டும் உறங்கவில்லை. இத்தனை இன்னலையும் அவள் ஏற்று இன்பத்தை இழந்ததற்கு யார்பொறுப்பு? காதற் கள்வனா? அல்லது அரும்பெறல் கணவனா? அல்லது அழுங்கல் ஊரா? இல்லை. இவற்றில் எதையும் குறிப்பிடமுடியாது அவளைப்பொறுத்த மட்டில். அவள் உயிர் தவச் சிறிது; காமமோ பெரிது என்பதை அது போழ்து உணராதவள். என்றாலும் பெருமூச்சோடு கண்ணீரும் கம்பலையுமாகத் தென்பட்டாள் என்றால் அதற்குக் காரணமென்ன என்பதை ஆராயக் கடமைப்பட்டிருக்கின்றோமன்றோ! மூட்டுவேன் கொல், ஒல்லெனக் கூவுவேன் கொல், என்று ஒரு நங்கை அரற்றினால் அவளுக்குக் காதல் நோய் என்ற முடிவிற்கு வரலாம். என்னைக்காட்டிலும் பொன்னைப் பெரிதும் மதித்துச் சென்றுவிட்டாயே என்று ஒரு நங்கை இரங்கினால் பொருள் வயிற்பிரிந்த அரும்பெறல் கணவனைப் பிரிந்ததால் வந்த

துன்பம் என்கின்ற முடிவிற்கு வரலாம். பெற்றுரே பெற்ருர்கு பெருதார் யாது பெற்ருர்? என்று ஒரு நங்கை வருந்திஞல், கணவன் பிரிதலினுல் ஏற்படும் துனிகூர்வெப்பத்தை போக்க முகிழ்நகையூட்டி முத்தமிடும் ஆண்மகவு அவளுக்கில்லை போலும்; அதனுலேதான் அவள் இவ்வாறு வருந்துகின்ருள் என்ற முடிவிற்கு வந்துவிடலாம். 'கணவனை பிழந்தோர்க்கு காட்டுவதில்' என்ருெருத்தி கூறித் துடித்துப் பதைத்தாள் என்ருல், அவளுடைய கணவன் இறந்துவிட்டானுகையால் இத்தகைய துயரம் அவளுக்கு வந்துள்ளது என்ற முடிவிற்கு வரலாம். ஆனல் நாம் குறிப்பிடுகின்ற, பால்நிலாவில் வருந்துகின்ற 'அவளைப் பற்றி' எம்முடிவிற்கும் வரமுடியாத நிலையில் உள்ளது. காரணம் அவள் காதலிக்கவில்லை; பிரிவினுல் வருந்துவதற்கு. எனவே அவள், காதலிக்கவில்லையாதலால், கற்பு வழி அமைகின்ற கணவனுமில்லை அவளுக்கு. பிள்ளையில்லை என்ற ஏக்கமும் அவளுக்கு ஏற்பட வழியில்லை. அப்படியிருந்தும் அவள் ஏங்குகின்ருள், துடிக்கின்ருள், துயரினை வெளிப்படுத்த முடியாமல் பெருமூச்சு விடுகின்ருள். ஆம்! அவள் வருந்துதற்குரிய ஒரே காரணம் அவள் தன்னுடைய தாய்நாட்டை இழந்ததுதான், அன்றியும் அவள் தன் தந்தையையும் இழந்தவள் என்பதாம்! குழவிப் பருவம் நழுவுங்காலை களிமிகு கன்னியர் உளமும் வாக்கும் புளியம் பழமும் தோடும் போலாம்' என்ற வாக்கினைப் பொய்ப்பிப்பது போல் அவள் எண்ணமெல்லாம் தன்னுடைய தாய்நாட்டைப் பற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அவளுடைய நாடு என்ருல் சாதாரணமானதா? இல்லை குன்றின் கண் அமைந்த நாடு. எந்திரத் தகைப்பின் அம்புடைய வாயிலையும், கோள்வில் முதலிய குண்டு கண்ண கழியையும் உடைய அரண்மிக்க உடைய பறம்பு மலையாகும். ''வாரார் ஆயினும் இரவலர் வேண்டிதேரின் தந்து, அவர்க்கு ஆர்பதன் நல்கும் நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல் ஆட்சி புரிந்த நாடாகும். 'ஒளிநுதல் மகளிர் துளித்த கண்ணினும் இரவலர் புன்கண் அஞ்சும் பெற்றியான் வாழ்ந்த நாடாகும். வான் முகிலிலும் கருமுகிற் போல் வரையாது வழங்கும் வள்ளன்மையுடையவன் ஆண்ட நாடாகும். பல் கேள்வித்துறை போகிய தொல்லாணை நல்லாசிரியர்கள் கொடிகட்டி வாழ்ந்த பெருமையுடைய நாடாகும் நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தரினை

யுடைய நாடாகும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி ஆறு முட்டுறுது அறம்புரிந்து ஒழுகிய அறிவாற்றலுடையான் ஆண்ட நாடாகும். நட்டோர்க்கல்லது கண்ணஞ்சாதவன் ஆண்ட நாடாகும். நிலத்திறம் பெயருங் காலையாயினும், தான் கிளர்ந்த சொல் பொய்ப்பு அறியாதவன் ஆண்ட நாடாகும். பாணர் புரவலன் என்றும், பரிசிலர் வெறுக்கை யென்றும், பூண் அணிந்து விளங்கிய புகழ்சால் மார்பன் என்றும் புலவர்களால் ஏத்தப்பட்ட, குடிதழீஇ நின்று கோலோச்சிய மன்னன் ஆண்ட நாடு ஆகும். தமிழ்ச் சுவையை உணர்த்தும் பொருட்டு ஆரிய அரசனுகிய பிர கதத்தனுக்காகக் குறிஞ்சிப் பாட்டைப் பாடிய கபிலர் வாழ்ந்த நாடாகும்.

அத்தகைய நல்நாட்டை ஆண்ட மன்னன் பாரி, ''மக்கள் உயிர், மன்னன் உடல்'' என்ற உயரிய கருத்தை உள்ளத்திலே நாள்தோறும் இருத்தி செங்கோல்செலுத்திய வனுவன். மேலும் அம்மன்னன் ''பொய் வண்ணம் மனத்து அகற்றிப், புலன் ஐந்து செலவைத்து மெய் வண்ணம் நினைந்தவர்க்கு-மெய் நின்ற வித்தகன் தோன்று வான்' என்ற உயரிய கருத்தில் மனப்பூர்வமான நம்பிக்கை கொண்டவனுவன். எவ்வுயிர்க்காயினும் இரங்குதல் வேண்டும் என்ற கொள்கையையும் தம்மால் இயன்றவரை மேற்கொண்டான். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினுன் மன்னன். அதனுலன்றே முல்லைக்குத் தேரீந்து மனிதன் தெய்வமாகலாம் என்பதை நிலைநாட்டினுன். மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும், உடையும், உறையுளும் அளிப்பதே சிறந்த அறம் என்பதை நன்குணர்ந்து அதன் படி செயலாற்றினுன். ''சாவது எளிது; அரிது சான் ருண்மை; நல்லது மேவல் எளிது; அரிது மெய் போற்றல் என்ற தத்துவத்தை அறிந்தவனுகையால் அத்தத்துவத் திற்கு விதிவிலக்குப் போன்று உயர்ந்தோர்மாட்டு நிற்கின்ற உலகத்தில் தனக்கென ஒரு தலையாய இடத்தைப் பெற் ருன். சங்கமலி தமிழைக் காக்கத்தான் ஓர் அங்கம் போல இருந்தான். உயர் மதில் கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழிலே முதுபெரும் புலவராக விளங்கிய கபிலரை நண்பராகக் கொண்டான்.

அம்மன்னனின் கீழ் வாழ்ந்த குடிமக்களோ ''மணி யாலும், பொன்னுலும், முத்தாலும், ஆகிய அணிகலன்கள் குறைபட்டால் விரைவிலே நிறை செய்துவிடலாம். ஆனல்

மனிதப் பண்பு சிதைவுற்ருல், அதற்கு வேறு மாற்றமே இல்லை" என்பதையுணர்ந்து மனைக்கு விளக்கம் மடவார்; மடவார் தனக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய காதற் புலவர்க்குக் கல்வியே; கல்விக்கும் ஓதின் புகழ்சால் உணர்வு" என்ற உயரிய தத்துவங்களையும் மேற்கொண்டு நற்குடி மக்களாகத் திகழ்ந்தனர் என்பதாம். தேனுக்குள் இன்பம் செறிந்தாற்போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்துள் ளான் என்பதை நம்பி, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயரிய கோட்பாட்டோடு விளங்கினர்கள். நன்றி யுணர்ச்சியுடனும், பொறுமையுடனும், எவரிடத்தும் இன் சொல் பேசும் இயல்புடனும், பிறன்மனை விரும்பாப் பேராண்மையுடனும், சான்றோர் பழிக்கும்—எவ்வினையை யும் மேற்கொள்ளாமலும் வாழ்ந்தனர் என்பதாம்.

ஓங்கு புகழ் எய்தியிருந்த நாட்டையும் அதனைச் செம்மையுடன் ஆட்சி புரிந்த தந்தையாகிய பாரியையும் இழந்த துயரத்தால் தான் அவளுடைய கண்கள் பாடொல்லாதனவாகக் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி யளித்தன. "பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்ற உயரிய கொள்கை யுடையவளாதலால் இதயம் நொந்தாள். ஒரு திங்களில் 'சொக்க வெள்ளிப் பாற்குடமோ' என்று கூறத்தக்க 'பால் நிலா' வெண் கதிரை வீசிய போழ்து அவளுடைய தாய்த் திருநாட்டை எவரும் கைப்பற்றவில்லை. ஓங்கு புகழ் எய்திப் பொலிவுடன் காணப்பட்டது. அதேபோல் அவளுடைய தந்தையும் அந்நாட்டின் மன்னனுமான பாரியும் தமிழ்ப் பண்பின் மணிமுடியாய்த் தலைவணங்கா அடலேருய் வாழ்ந்திருந்தான். அதனுல் அவளும் மகிழ்ச்சியோடிருந் தாள் அதுபோழ்து. ஆனல் மற்ருெரு திங்களில் தோன்றிய முழுமதியின் போது அவளது நாடாகிய பறம்பு மலையும் அதனைச் சார்ந்த பகுதிகளும் பகைவர்வசமாயின. அவ ளுடைய அரும் பெருந்தந்தையும் மாண்டான். தாங்குதற் கியலாத அவ்விழப்புக்களை யெண்ணித்தான்,

"அற்றைத் திங்க ளவ் வெண் ணிலவின்
எந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே"

(புறம்: 112)

என்ற இரங்கற் பாவையும் பாடியுள்ளாள். அவள் தான் பாரிமகள்; பாடொல்லாக் கண்களையுடையவளாகக் காட்சியளித்தவள்.

---

# காலமும் கோலமும்

(புதிய புதினம் New Novel)

கவியோகி. சுத்தானந்த பாரதியாரின் தொடர்கதை

## முன்னுரை.

மதுரைத் தமிழ்ச் சங்கம் எனது தாயகம் போன்றது. நான் மதுரையில் வளர்ந்தேன். என் மாமாக்கள் பெருஞ்செல்வர். தானப்ப முதலித் தெருவில் அவர்கள் பெரிய மாளிகையில் வசித்தனர். பெரியமாமா வழக்கறிஞர் சின்னமாமா பாஸ்கரசேதுபதியின் அன்பைப்பெற்ற செல்வச்சீமான். நான் அந்தச் செல்வ மாளிகையில் உலகின் இயல்பைக்கண்டேன். மாளிகையில் புகுந்தால் மனக்கவலை தான். எனக்கு மதுரையில் ஆறுதல் தந்தவை இரண்டு. ஒன்று மீனாட்சி சந்நிதி இரண்டு தமிழ்ச்சங்கம். தமிழ்ச் சங்கம், 1901-ல் எழுந்தது வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இந்தச்சங்கத்தை நாட்டி சங்க நூல்களையெல்லாம் பாதுகாத்து பைந்தமிழ்ச் சோலையைப் போற்றி வளர்த்து புலவர்கற்பகமாக விளங்கினர். அந்தக்காலம் இச்சங்கத்தில் நடந்த விழாக்கள் என் முன் நிலவுகின்றன. அவ்விழாக் களில், பாண்டித்துரையின் சிங்கநாதம் எனது நினைவில் இன்றும் கர்ஜிக்கிறது. அந்தக்காலம் திரு நாராயண ஐயங்கார். இராகவ ஐயங்கார், கோபாலகிருஷ்ண ஐயர், உலகநாதபிள்ளை முதலிய பலபுலவர்கள் இங்கே தமிழ்த்தொண்டு செய்தனர். பெரும் பேராசிரியர் சாமிநாதையர் சங்க விழாக்களில் கலந்து பேசினர். ஒருமுறை, தலைக்காவேரி நாட்டார் சங்கத்தேர்வில் முதன்மைபெற்று பாண்டித் துரை கையால் தோடா அணிந்தகாட்சி இன்றும் உள்ளத் திற் சிலிர்க்கிறது. நான் ஃஜம்ப்ரோ(Zembro)விடம் ஆங்கிலம் பயின்றேன், மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் தமிழை வளர்த்தேன். வாராவாரம் வந்து அரியநூல்களைப் படிப்பதுண்டு. என் தமிழ்ப்படிப்பை ஊக்கியவர் பண்டிதகோபால கிருஷ்ணஐயர். கவி சுப்பிரமணிய பாரதியார் சங்கத்திற்கு வருவதுண்டு. 'பாண்டியா என்ன படிக்கிறாய்?' என்று அவர் வினவுவார். நான் என்ன படிக்கிறேன், என்னையே படிக்கிறேன்; எந்தநூலை எடுத்தாலும் அது என்னுள்ளிருந்துபேசுகிறது'' என்பேன். பாரதியார், ''பாண்டியா,

உனக்குள் கலைவாணியின் அருள் வீசுகிறது'' என்பார். தமிழ்ச்சங்கத்திற்குள் நுழைந்தாலே கவலை தீரும். அமைதி சேரும். திரு நாராயண ஐயங்கார், இராகவ ஐயங்கார் ஆகிய இருவரும் கம்பஇராமாயணத்தைப் படித்து உரையாடு வார்கள். அவர்கள் உரையாடலில் சங்கத் தமிழ் வெற்றி நடம் புரியும். நான் கருத்துடன் கேட்டுப் பயன் பெறு வேன். அடக்கமாக இருந்தே நான் அறிவை வளர்த்த தாயகம் தமிழ்ச்சங்கமே. ஒருநாள் இச்சங்கத்தில் தீப் பிடித்தது பல நூல்கள் எரிந்து சாம்பலாயின ''திரை கொண்ட தென்மொழியை தீக்கொண்டதையையோ'' என்றுநான் குமுறி அழுதேன். அழுதென்ன? செந்தமிழ்க் கருவூலங்கள் வெந்து சாம்பலாயின.

காலம் ஓடியது. நானும் எங்கெங்கோ ஓடித்திரிந்து, நீண்டநாளைக்குப் பிறகு தமிழ்ச்சங்கவிழா ஒன்றில் பேச அழைக்கப்பட்டேன். பேசினேன். எனது நண்பர் சோம சுந்தரபாரதியார் என்னை மன்றத்திற்கு அறிமுகப் படுத் தினர். சில மாதங்கள் கழித்து, நான் சங்கத்திற்கு வந் தேன். எனது நூல்கள் ஒரு அடுக்கு தந்தேன். சுற்றிப் பார்த்தேன். அங்கே மாணவிகள் புகுமுகவகுப்பு (P.U.C) படித்துக் கொண்டிருந்தார்கள். தமிழ்ச்சங்கம் ஆங்கிலச்சங் கமானது ''தமிழ் எங்கே'' என்று தேடினேன். இன்னும் சில ஆண்டுகள் கழித்து சங்கத்திற்கு வந்தேன். தலைவர் என்னை வரவேற்றூர் அரியநண்பரைக்கண்டேன். உள்ளத் தைத் தொட்டுப்பேசும் உண்மைத் தமிழரைக் கண்டேன். ஆனுல் நான் கொடுத்த நூல்களில் பல மறைந்தன—முதன் மையாக பாரதசக்தி மகாகாவியம். மீண்டும் எனது நூல் களைத் தந்துள்ளேன். பாண்டித்துரை வரலாற்றை எழுது வதற்கு வேண்டிய கருவிநூல்களைத் தேடினேன். சங்கப் புலவர்களை நாடினேன். அவர்கள் தேடி அனுப்புவதாகச் சொன்னூர்கள் தமிழ்ச்சங்கம் இப்பொழுது புத்துயிர் பெற் றது. அது சேதுபதி மன்னரைத் தலைவராகக் கொண்டு நடப்பது மிகப்பொருத்தமானது. ''தமிழ்வளர்ச்சியில் கருத் தூன்றியிருக்கிறோம். தங்களையும் சங்க இதழான ''செந் தமிழ்'' ஆசிரியர் குழுவிற் சேர்த்துக் கொள்ளுகிறோம். பாண்டித்துரையின் உருவச்சிலை அமைப்புக் குழுவிலும் தங்கள் பெயரைப் போடுகிறோம். தாங்கள் செந்தமிழுக்கு எழுதிவரவேண்டும். தங்கள் எழுத்தோவியத்தை நூலாக் குகிறோம்'' என்று ஊக்கினர். ஊக்கம் எனக்கு ஆக்கமளித்

தது. நான் பலமொழிகளிலும் 1500 நூல்கள் எழுதி மூட்டைகட்டித் தாலாட்டிக் கொண்டிருக்கிறேன்!

தமிழில் புதுப்புது கவிகளும், கட்டுரைகளும் நாடகங்களும் அறிவியல் நூல்களும் வந்து உலவவேண்டும். என்று நான் நீள நினைத்ததுண்டு. அந்தநினைவு இன்று பழுத்தது. செந்தமிழ் ஆசிரியர் வேண்டுகோளின்படி **"காலமும் கோலமும்"** என்ற புதினக் கதையைத் தொடங்குகின்றேன்.

இந்தக்கதை இன்றுலகைப் படம் பிடித்துக்காட்டி இனிவரும் நல்லுலகை விளக்குகிறது. இதில்வரும் பெயர்களெல்லாம் தத்துவப் பெயர்கள். இதில் நகைச்சுவை, பகைச்சுவை காதல், கற்பொழுக்கம், சகுனி வேலைகள், கூனிவேலைகள், ஐயாகோ வேலைகள் ஒதெல்லோ கொடுமை செல்வத்திமிரின் அழிநாடகம், ஒழுக்கத்தின் உயர்வு சாதுக்களுக்கு வரும் இடர்கள் இடர்களினால் வரும் அறிவுணர்ச்சி அறிவால்வரும் அமைதி, விஞ்ஞானத்தின் வியன்கள், மெய்ஞானத்தின் தெளிவு எல்லாம் சங்கிலிக்கோவையாக வரும். இனி நேராக மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் செல்வோம்.

"டாண் டாண் டாண்.........." மணியடிக்கிறது.

**அடுத்த இதழில் புதினம் வரும்**

---

## சூத்திரர்

● "அடிமைத் தொழிலன்றி வேறெவ்வித மேம்பட்ட தன்மைக்கும் அவர் உரியல்லரென்றும் ஆரியர் விதித்தனர் இவர்கள். ஆரியருடைய அறிவாற்றலுடன் மாறுபட முடியாதனராய் அவரிட்ட சட்டத்திற்கெல்லாம் உள்ளாயினர் போலும். ஆரியர்க்குப் பணியாமலும், அவரது அறிவு வலிமைகளுக்கு ஆற்றாமலும் ஓடி ஒளிந்த பூர்வகுடிகளாய தமிழரும் அவர் தலைவர்களும் முடிவில் ஆரியர் அறியாதிருந்த, விந்தியமலையின் தென்பாகத்தேயடைந்து அங்கே தமக்கு வேண்டிய தாளங்களையமைத்து தம் தலைவரின் கீழ் அமைதியுடனிருந்தனர்."

# பழம் ஈந்த பரிசில்

தமிழ்த்தொண்டன்

ஆ. ஆண்டியப்பன்

"ஓங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் மின்னேர் தனியாளி வெண்கதிரோன் ஏனையது தன்னேரிலாத தமிழ்"

● உலகிடையே பல்லாயிரக்கணக்கான மொழிகள் உலவி வருகின்றன. அவை பல்வேறு மக்களால், பல்வேறு இடங்களில் வழங்கப்பட்டு வருகின்றன என்றாலும்கூட, அவை அனைத்தும் 'ஆரியம்', 'செமிடிக்' 'துரானியம்' என மூன்று பெரும் பிரிவுகளாகவே பகுக்கப்பட்டுள்ளன.

வடமொழி, கிரீக், லாடின், ஆரியர்மொழி எனவும்; 'ஆயிரமெயிக்', ஹீபுரு, அரபி, செமிடிக்மொழி எனவும்; தமிழ், மங்கோலியம் பின்னியம், போதியம், மலேயாம், துரானியமொழி என மூன்று பெரும் பிரிவுகளாகும் என்பதை அழகுறச் சான்று காட்டியுள்ளார் நூலாய்வில் நுன்மாண் நுழைபுலம் பெற்ற, பெருமணச்செம்மல், வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள்.

அத்துணை மொழிகளுள் உலகோர் பலரையும் தம்பால் ஈர்க்கும் உயர்தனிச் செம்மொழியாம் நம்தமிழ் மொழி. பிற எம்மொழிக்கும் இல்லாத இலக்கியவளமும், இலக்கண வரம்பும் ஒருங்கே அமைந்தமொழி. ஒலியிலே இனிமையும், விரிவடிவிலே அழகும்மிளிரும் மொழி. குன்று எழிலும், சீரிளமையும் பொருந்திய தொன்மைச்சிறப்பு வாய்ந்த தென்மொழி. தெய்வத்தமிழ்மொழி. தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகளையெல்லாம் சேய்மொழியாகக் கொண்ட தாய்மொழியாம் நம் தமிழ்மொழி.

அத்தகு சிறப்பினைப் பெற்ற தமிழ் மொழியாகிய நம் தாய் மொழியைப் பேணிப் போற்றிப் புரந்த தண்டமிழ்க் கிழவர் மூவர். எனவே அவர்கள் நாடும் முப்பெரும் பிரிவினவாய் விளங்கிவந்தன. அவைகளுள் 'பாண்டிநாடு' தெற்கே இருந்ததால் 'தென்னகம்' தென்பாண்டிநாடு' என்று அழைக்கப்பட்டது. செந்தமிழ் மொழியின் சிறப்பிட மட்டுமல்ல அம்மொழி பிறப்பிடமாகவும் விளங்கி வந்தது தென்னகம்.

அத் தென்பாண்டி நாட்டின் அங்கமாக விளங்கிவந்தது. சேதுநாடு. பல்லாற்ருனும் மேம்பாடுற்று விளங்கி வந்தது. சங்கப் புலவர்களும், சான்ருேர் பல்லோர்களும் பிறந்த பொன்னுடு. சைவப் பெரியார்களும், சமயக்குரவர்களும் பொலிந்து தவழ்ந்த திருநாடு. 'முகவை' என்று இலக்கியப் பெயர் பெற்று விளங்கிவந்தது. 'தமிழ்கூறும் நல்லுலகம்' முழுவதையும், அரியணை ஏறித்திருமுடி சூடிச் செங்கோல் ஏந்தித் தமிழன்னை ஆட்சிபுரிந்த சங்ககாலமாம் பொற்காலத்திற்குப்பின், அவ்வழியில் தொன்றுதொட்டு பெரும்புகழ் ஈட்டித்தந்தது சேதுபதிச் சீமை. நாற்றிசையும் நறுமணம் பரப்பி நந்தமிழணங்கு பல்லூழிக் காலம் வாழ ஓயா உழைப்பினை ஈந்து வந்தனர் அரசோச்சிய சேதுபதிகள்.

மன்னவராய்ச் செந்தமிழ்ப்பா வாணராய்ச் செந்தமிழ்க் கலைகள் ஆய்ந்து நற்றமிழை வளர்த்திடும் பணியில் நாளும் முயன்றனர். நாடாளும் நற்றிறன் மட்டுமின்றி, ஏடாண்ட எண்ணமாண்ட ஏந்தல்கள்; இலக்கியச் செம்மல்கள் அன்னவர்கள்; அருங்கலை வளர்த்த பெருங்கொடை வள்ளல்கள், அறவளர்ச்சிக்கும் புறவளர்ச்சிக்கும் அளவற்ற பொன்னும், பொருளும் வரையாது வாரி வழங்கிய வண்டமிழ்க் குடியினர் என்பதை இலக்கியச் சுவைஞர்கள் அறிவர்.

புலவர்கள் வறுமை நீங்கிட அவர்வளமும், நலமும் பெருகிட, வரையாப் பொருள் ஈந்து வண்டமிழ்ப் பேணிய தண்டமிழ்க் காவலர்கள். இலக்கியத்தேர்ச்சி பெற்றுயர்ந்த கவிஞர்களையும், நுழைபுலம் பெற்ற நல்லறிஞர்களையும் தேடிச்சென்று அவர் திறனறிந்து பரிசில்களும் பாராட்டுக்களும் நல்குவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள் சேதுபதிகள் என்பதைப் பகரும் ஏடுகள் எண்ணிலடங்கா. எடுத்துரைப்பின் விரியுமன்ருே!

அவ்வழியிலே 19-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பெரும்புகழுடன் விளங்கியவர்கள் மன்னர் முத்துராமலிங்கச் சேதுகாவலரும், அவரது அருமைச் சகோதரர் மேதகு அமைச்சர் பொன்னுச்சாமித் தேவரவர்களுமாவர்.

புலவர்க்கு உற்றுழி உதவியும், உறுபொளீந்தும் பருவமழை போல் பைந்தமிழுக் குதவிய அச்சேது காவலர், பூவேந்தரான மன்னர் முத்துராமலிங்கச் சேதுபதியவர்களது சிறப்பியல்புகளையும், அவர்தம் தமிழ்வளர்த்த மாண்பினையும்; அருந்தமிழ்க் கவிமலரின் நறுந்தேனும் பாவின்பத்தால் நாளும் ஈர்க்கப்பட்ட குருசிவேல் மாறன், கருங்கொண்டல் நாணும்படி வயக்குமொழிப் புலவர்க்கு வழங்கிய வண்டமிழ்வள்ளல், நாவேந்தன் அமைச்சர்பொன்னுச்சாமித் தேவரவர்களது கொடைத்திறனையும் ஏட்டிலே தீட்டிப் பரிசில் பெறுதல் பொருட்டு முகவை வந்தார், விசுவநாத பாரதியார் என்ற வடநாட்டுத் தமிழறிஞர்.

நாளெல்லாம் நந்தமிழன்னைக்கு நல்லணி செய்து, பெருங்கொடை ஈந்த அருந்தமிழ்க் களஞ்சியமாம் அமைச்சர் பொன்னுச்சாமித் தேவரவர்களைக் கண்டார் விசுவநாத பாரதியார். புலவர்பால் தேடிச்சென்று பரிசில் வழங்கும் வள்ளல், தம்பால் நாடிவந்த புலவர் பாரதியாருக்கு விற்பன்னருக்கே உரிய விருந்தோம்பினை நல்கினர்.

பேரவையில் அரங்கேற்றம் செய்யவிருக்கும் புதிய பாக்கள் அனைத்தும் அருங்கலை விற்பன்னர் அமைச்சர் பொன்னுச்சாமித் தேவரவர்களது பரிந்துரை பெறுதல் அக்கால மரபாக இருந்தது. எனவே பாரதியார் அமைச்சர் அவர்களைக் கண்டார். தமது எண்ணத்தை விண்டார். முறையான இசைவும் பெற்ருர்.

குறித்த காலத்திலே பேரவை தொடங்கியது. நாவன்மையுடையோரும், பாவன்மையுடையோரும் அற்றைய பாவேந்தர் பழனி மாம்பழக் கவிராயரும் அணிசெய்தார். பூவேந்தர் சேதுகுலச் செந்தமிழ் ஞாயிறு மன்னர் முத்துராமலிங்கச்சேது காவலரும், புலமை நலமிக்க நாவேந்தர் அமைச்சர் பொன்னுச்சாமித் தேவரவர்களும் வீற்றிருந்தனர்.

முதற்கண் எழுந்தார் பாரதியார். முறையான தமிழ் வணக்கம் செய்தார் உற்று நோக்கினர் சொற்பெருங் கொண்டல்.

மறுகணம்? அகலவிரிந்தன அவரது கண்கள்! நெற்றி சுருங்கியது. தயங்கினர், தன்னையறியாமலேயே தன் உடல் தளர்வது கண்டார் பாரதியார்.

''பாரதியாரே! தொடங்கலாமே''! என்றனர் பேரவைப் புலவர் பெருமக்கள்.

ஒருவாறு தேற்றிக் கொண்டு ''அவை.........'' நாஎழவில்லை, தொடர்ந்து நவில பாரதியாருக்கு.

''நன்றாகத்தானே இருக்கிறது அவை'' என்றனர் அவையோர்.

''மங்கலமாக இருந்தால் நல்லது'' குரல் தளர்ந்தது பாரதியாருக்கு.

''மங்கலமாகத்தானே இருக்கிறது'' என்றனர், பாரதியாரின் கள்ளக்கருத்தினை அறிய இயலாத அவையோர்.

''ஆமாம்'' ''ஆமாம்'' மங்கலமாகத்தான் இருக்கிறது அவை என்றார் அருந்தமிழ்க் களஞ்சியமாம் அமைச்சர் பொன்னுச்சாமித் தேவரவர்கள்.

மின்வேகத்தில் தோன்றிய தமது உள்ளக் கிடக்கையினை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள இயலவில்லை பாரதியாரால். அமைச்சரின் ஆணையும் வந்துவிட்டது. ஒருவாறு துணிவை வரவழைத்துக் கொண்டார். தொடங்கினர். தங்குதடையின்றி பாக்கள் முழுவதையும் பாடினர். பின் பொருளுரைக்க முயன்றார்.

''நிறுத்துங்கள்'' ''நிறுத்துங்கள்''

''.........................................''

எழுந்தார் பாவேந்தர் பழனி மாம்பழக் கவிச்சிங்கநாவலர்.

வியப்பும், திகைப்பும் அடைந்தனர் அவையோர். என்ருலும், அடுத்து நடக்க இருக்கும் நிகழ்ச்சியைக்காண அமைதியாகவே இருந்தனர்.

“கொடுமை!” “கொடுமை!” தென்னுடுய்யத் தோன்றிய சேதுகுலச் செம்மலே! தாதூண்பறவை போல் புலவரின் நெஞ்சை அள்ளித்திறை கொண்ட அருந்தமிழ் வள்ளல்களே! பெருந்தமிழ்ப் புலவர் பெருமக்களே!

பல ஆண்டுகளுக்குமுன் பாடி பரிசில் பெற்ற எமது பாக்களே அச்சம் எதுவுமின்றி அரங்கேற்றம் செய்ய அரசவை நாடிவந்துள்ளார் விசுவநாதபாரதியார். யான் இங்கிருப்பதை அறியாரோ?

“...............”

“நாற்றிசையும் போற்றும் நறுந்தமிழ் வள்ளல்களே! பன்னூல் ஆய்ந்த நன்னூற் பெருமானே! பழையபாக்களில் பெயர்கள் மட்டும் சில மாற்றம் செய்தால் புதிய பாக்களாகி விடுமோ அவை?” கவிச்சிங்கம் சொற்கள் திடமாகவும், உறுதியாகவும் இருந்தன.

இடியுண்ட நாகம் போலானுர் பாரதியார். சிந்தனே சிறகடித்துப் பின் நோக்கிச் சென்றது.

‘மூச்சுவிடும் முன்னே முன்னூறு நானூறு என்று தமது பேராற்றல் முழுவதையும் பாடிக் காட்டியவர் கவி காளமேகம்; மூவாண்டிலே தேவாரப் பாடல்கள் பாடியவர் சீர்காழி ஞானசம்பந்தர், இளமையிலேயே கவிகள் பாடி எழுச்சி யூட்டியவர் புரட்சிக்கவிஞர் பாரதியார்; 12–ஆம் பிராயத்திலேயே ஆங்கிலக்கவிகள் இயற்றியவர் அறிஞர் மில்ட்டன்போப்; அமெரிக்கக் கவியரசு அரியட்மன்ரூே. வடமொழிக் கவிஞர் காளிதாசரும், தாய்த்தமிழில் கம்பரும் போன்ற பேரறிஞர்களுக்கு இணையாக 12-ஆம் ஆண்டிலே தமிழ் கற்றும், கவிபாடும் திறமையும், பெருமையும் பெற்றும்; 19ஆம் நூற்ருண்டிலே திகழ்ந்த கவிஞர்களில் தலையாய இடத்தைப் பெற்றவரும் ‘தமிழ்ச் சக்கரவர்த்தி’ ‘கலைஞானபீடம்’ என்ற பல பட்டங்களும் பாராட்டுக்களும் பெற்றுயர்ந்த அம் மாம்பழக் கவிராயர் அருந்தமிழ்க்

கருவூலமாம் அமைச்சர் மேதகு. பொன்னுச்சாமித் தேவ ரவர்களால் வழங்கப்பட்ட "கவிச்சிங்கம்" என்ற அரிய. பெரிய சிறப்புப் பட்டத்தையும் பெற்றுயர்ந்தவரல்லவா?

புறக்கண்ணொளி இழந்தவராயினும், தமிழ்த் தெய் வம் தண்டபாணியின் தண்ணருளால் அகக் கண்ணொளி பெற்றவர்; முத்தமிழ்த் தெய்வம் பழனி முருகனை ஞான சிரியராகப் பெற்றவர்; கற்றோரும், மற்றோரும் காமுறு வண்ணம் கன்னித்தமிழில் இன்னிசைபாடிய கவிச்சிங்கம். அன்னாரின் அருமையும், பெருமையும் அறிந்திருந்தும் ஆண வத்தால் அறிவை இழந்தேன். விழி இருந்தும் ஒளி இழந் தேன். என்று தமது நெஞ்சத்திரையில் நினைத்தவாறு சிலை யாகிவிட்டார் விசுவநாத பாரதியார். எத்துணை நேரம் நின் றாரோ அறியாரவர்.

"பாரதியாரே" அமைச்சரின் குரல் கேட்டதும் திடுக் கிட்டார். தடுமாறினார் பாரதியார். தன்னுணர்வு பெற்றார் தேற்றிக் கொண்டார். என்றாலும் அச்சம் அவருள்ளத்தே ஓங்கியே இருந்தது. மீண்டும் அகல நோக்கினார் பேரவை பால். உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டார் ஒருவாறு.

இல்லை! இல்லை! துணிவை வரவழைத்துக் கொண் டார் விசுவநாதபாரதியார். கவிச்சிங்க நாவலர் அருகிலே சென்றார்.

"கவிச்சிங்க.............. நாவலரவர்களே! இப்பாக்கள் முழுவதும்...........? பாரதியாரின் வார்த்தை முடியவில்லை. "பாடியதற்குச் சான்றுகள் தானே! இதோ"! என்று தொடர்ந்தார் மாம்பழக் கவிராயரவர்கள்.

"ஐவகை நிலங்களையும் தன்னுள்ளடக்கிப் பெருமை பெற்ற பாண்டிவள நாட்டின் பைந்தமிழ்ச் செஞ்ஞாயிறே, செந்நாப் புலவர்களைச் சீராகப்போற்றிப் புரக்கும் தென் தமிழ்க் கோமான்களே! நாவலர்களே! பாவலர்களே! பாக் கள் முழுவதையுமே பாடிக்காட்டுகிறேன் நான்" என்று இடித்துப் பெய்யும் முகில்போல் பாக்கள் அனைத்தையும் பாடினார்.

ஆனால்........! சொற்கள் மட்டும் சிலமாற்றம் செய் யப்பட்டிருந்தன அப்பாக்களில், "தெய்வப் புலவனுக்கு நா உணரும்" அல்லவா!

விந்தை! விந்தை! என்ற அவையோரின் கையொலி விண்ணை எட்டியது!

விசுவநாதபாரதியார்..........? குலைசாய்ந்த வாழை போலானார் அவையில்.

'கவிச்சிங்கம் அவர்களே,' என்றார் அருங்கலை ஆய்ந்த பெருந்தமிழமுதமாம் நாவேந்தன் அமைச்சர் பொன்னுச்சாமித்தேவரவர்கள். 'பாம்பின்காலை பாம்புதானே அறியும்''

உள்ளத்தே ஒளிந்துள்ள உண்மை நிலையினை தமது வாயிலாகவே வெளியிட வேண்டும் என்ற அமைச்சரவர்களின் உள்ளக்கருத்தினை அறிந்து கொண்டார் கவிச்சிங்கம் அவர்கள்.

''தென்னாடுய்யத் தோன்றிய சேதுகுலச் செங்கதிரே! வண்டமிழ்ப் புலமைசால் தண்டமிழ்க் காவலர்களே! அருங்கலைகள் ஆய்ந்த நறுந்தமிழ்ப் புலவர்களே! சுவை பொங்கும் இப்பாக்கள் முழுவதையும் இயற்றியவர் விசுவநாதபாரதியாரேதான். ஐயமில்லை.

ஆனால் ........!

'ஆனால் என்ன'? விளக்கம் தரவேண்டும் என்றனர் பேரவைப் புலவர்கள்.

பைந்தமிழ்ப் புலமை ஓங்கிப் பாங்குறத்திகழும் சிந்தனைத் திலகமாம் சேதுகுலக் கொற்றவரே! பேரவைப் பெருந்தலைவரவர்களே! பாரதியாரின் ஆணவத்தை அடக்க வேண்டும் என்றே எமது சிந்தனைத் திறனை எடுத்துக் காட்டினோம் யாம். 'அவை மங்கலமாக இருந்தால் நல்லது' என்ற பாரதியாரின் வார்த்தைகள் எம்மைச் சுட்டிக் காட்டியதேயாகும். கொற்றவரும், மற்றவரும் குற்றமாகக் கருதா தொன்றைச் சுட்டிக்காட்டினார். அவைத் தொடக்கத்திலே. ஊனக்கண் இழந்தவர்கள் அவையில் இடம் பெறக்கூடாது என்ற பாரதியாரின் கள்ளக்கருத்தினை அறிந்தேன்; ஆனால் உடல் தளர்ச்சியையும் கண்டேன். எனவே பரிசில்கள் அனைத்தையும் விசுவநாத பாரதியாருக்கே வழங்க வேண்டுகிறேன்' என்று பரிந்துரை வழங்கினார் பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள்.

அகமும், முகமும் மலர்ந்த பாரதியார் கட்டித் தழுவிக் கொண்டார் கவிச்சிங்கம் அவர்களை.

இரந்துவரும் புலவர்க்கு அருள் சுரந்து அவர் வேண்டும் பொருள் வரையாது வழங்கிய வள்ளியோன் வாழ்க! வாழ்க! என்ற வாழ்த்தொலிகள் முழங்கின பேரவையிலே.

**கவிதை:- 1.**

# தமிழவேள் வாழி!

**கவிஞர். தொண்டன்**

அப்பர்தம் தப்பாத திருநீற் றின்மெய்!
அருந்தமிழன் மறைமலையின் புலமை சால்வாய்!
ஒப்பில்லாச் சேதுவேந்தர் தமிழின் தொண்டே!
உயர்வுடைய திருவிகவின் அகன்ற பண்பு!
தப்பறியார்ச் சிதம்பரனார் நாட்டுப் பற்று!
தரமிக்கப் பசும்பொன்னார் தியாக ஊற்று!
செப்பரிய செயல்வீரர் உமாம கேசர்
செந்தமிழர் சிந்தைகவர் வடிவம் ஈதே!

வெள்ளம்போல் நல்லுள்ளம்! கன்னல் செந்நெல்
விளைகின்ற வளமிக்க தஞ்சை நஞ்செய்!
உள்ளமெலாம் தமிழமுதம்! புகழில் கீரன்:
உயர்ந்தோரும் வியந்திடும்பல் செயலில் சேரன்!
எள்ளவும் பொல்லாமை இல்லா நல்லோன்!
இன்றமிழின் அன்பருக்கோர் அதியன்! ஏழ்மைப்
பள்ளத்தின் உள்ளிருக்கும் தமிழர் வாழ்வைப்
பார்போற்ற ஆரூர்த்தேர் போலு ழைத்தோன்!

தமிழ்பேசல் தமிழிசைத்தல் தாழ்வென் றெண்ணும்
தமியர்கள் உமியர்கள் வாழ்ந்த அன்று
தமிழொன்றே மூச்சோடு பேச்சாய்க் கொண்டு
தமிழகத்தில் உலாவந்த நிலவு! தென்றல்!
தமிழ்மொழியை உயர்விழியைக் கலையைப் பண்பைத்
தமிழ்மண்ணில் அமிழ்த்திட்ட கயவர் முன்னர்
அமிழ்தநிகர் உடல்பொருள்மெய் அனைத்தும் ஒன்றாய்
அருந்தமிழர் பெருமைக்கே தந்த சான்றோன்!

கருவேல மரஞ்செறிந்த கரந்தை தன்னில்
கவிவேந்தன் தாகூரின் 'நிகேதன்' போன்றே
அருந்தமிழை இருநிலமே அறிய வேண்டி
அருள்மாறர் நறுஞ்சங்கம் வளர்த்தல் போன்றே

அருங்கலைகள் பெருக்கலைப்போல் போற்றி உண்மை
ஆர்பிராஞ்சின் அமைப்பினைப்போல்! இமைபோல்
நன்மை
பெரும்புலமைக் கல்லூரி! நூலக கங்கள்
பேர்பள்ளி தொழிலகமும் தோற்றிக் காத்தான்!

மொழிவாழின் வழியுண்டு! வளமு முண்டு!
மூத்தபெரும் திருநாடும் முதன்மை காணும்!
'பொழில்'கண்டே அழியாத ஓவி யம்போல்
புதைபொருள்போல் விதைச்சொற்கள் கலைநற்
சொற்கள்
எழில் நூல்கள் ஒளிர் உரைகள் தமிழர் காண
ஏற்றஞ்சால் வரலாறும் எண்ணில் கண்டான்!
நெளிபாம்பாய் ஒளிந்துவந்த இந்திப் பேயை
நொறுக்கிடவே வரிந்துகட்டி வீர ரானான்!

பஞ்சமென வந்தோருக்குத் தஞ்சந் தந்து
மஞ்சமென்ன விளங்கிடும்நல் தஞ்சை மன்றின்
விஞ்சுபுகழ்த் தலைமையேற்றுப் பொன்னி போன்றே
விரிபாதை! நிழல்மரமும் பரக்க நட்டான்!
கொஞ்சிடும்மெல் பிஞ்சுளங்கள் மஞ்சைப் போன்று
கோதற்ற கலையுணரப் பள்ளி கண்டான்!
நஞ்சனைய நோய்நீக்கும் மருந்து மன்றும்
நாளெல்லாம் தாய்போலப் பேணிக் காத்தான்!

எத்தனையோ பணியேற்றான்! கங்கை கொண்ட
ஏறுராசேந் திரனைப்போல் புகழைக் கொண்டான்
புத்தரைப்போல்! புதுமலர்போல்! புகுந்தோர்க் கெல்லாம்
புகழிடமாய் அகமலரப் போற்றி வந்தான்!
சித்தரைப்போல்! இத்தரையில் ஐயாற் றில்நல்
செந்தமிழர் முந்திநிற்க வழிகள் கண்டான்!
சித்தமது தத்துகடல் போல்ப ரந்து
செய்தசெயல் எய்துபயன் செப்ப ஒண்ணா!

தமிழுக்கோர் புத்தமுதாய்! புலமைக் காவாய்!
தமிழ்ப்பகைவர் தமைத்தகர்க்கும் அறிவு வாளாய்!
தமிழ்வல்லோர் தமைத்தாங்கும் கொடைமை ஆவாய்!
தமிழருக்கோர் உணர்வூட்டும் உணர்வு வேலாய்!

தமிழ்நாட்டின் திருவிழாவாய்! புதுமை நாளாய்!
தமிழ்க்கழகம் துவங்கிவைத்தி முருக வேளாய்!
தமிழ்வேளே! உமாமகேச அண்ணல்! நீயே
தமிழாக வாழுகின்றாய்! வாழி! வாழி!

---

கவிதை - 2.

# இரங்கல் இருபது

மேதகு ந. மு. கோவிந்தராய நாட்டார் பி. ஏ. எல். டி.
தஞ்சை.

தமிழிற் பிறமொழிச் சொல் சாரா வணஞ்சொற்
பொழிவம் எனவே பொழிவர் — தமிழ்ச் சொல்லாம்
கேள்வி தனை 'பிரச்னை' என்று இளத்தலேன்
1கேள்வி முறையின்றோ கேள்?

இனியாம் எதுவரினும் எப்போதும் யாண்டும்
தனித்தமிழிற் பேசுவம் என்றே — துணிந்தபின்
சாரெனச் சாற்றுவர் 2ஐயா அறியாரே
வேறென்ன சொல்வேன் விளம்பு.

சலமுடனெப் போதும் சலம்தீர்த்தம் என்பர்
நலஞ்சார் 3தமிழ்நீர் நவிலார் — பலகால்
எழுதுவர் அவ்வாறே எள்ளீர் இதுவே
தொழுகுலத்தோர் தூயதமிழ்த் துப்பு.

எதுகையும் மோனையும் ஏற்றி எழுதின்
மதுகை தெரியுமென்று மாண — மதித்தே
உரைநடை ஓர்த்தெழுதும் மாணவ ஒல்லும்
பொருள்வேண்டா வோநீ புகல்.

4மேலிடத்தார் கூறும் வெறுமொழியை மெச்சுகின்றார்
நாவிரண் டோரா மனிதரே — பாவிதோ
ஊழையும் வெல்லும் உயர்மொழி கூறினும்
பீழை தருமேழை பேச்சு.

புவிவேந்தர் போர்த்தினர் பொன்னுடை யந்நாள்
கவிவேந்தர்க் கிந்நாளில் காசில் — தவலிலர்
எல்லோரும் யாவர்க்கும் போர்த்துமப் பொன்னுடை
நல்லாடை யாமோ நவில்.

பரிமே லழகன் உரையைப் பழித்தால்
சரியான வித்தகர்தா மென்று — தருக்கியே
வந்தனவே பேசும் மதியிலரை என்சொல்லி
5நந்துவரோ கற்றார் நயந்து?

திரைப்படக் காட்சித் திறமெல்லாம் செப்பின்
அரையாடை மங்கையர் ஆடல் — வரையின்றி
ஊளையிடு மோரிகள் போன்ற உரையாடும்
காளையர் வீண்கதற லாம்.

'குமுதம்' 'விகடமெனக்' கோடி யிருந்தும்
அமுதத் தமிழாய் அயராள் — தமிழென
அவ்விதழ்க ளேற்காள் அருஞ்சொற் பொருளின்மை
செவ்விதின் சீர்தூக்கித் தேர்ந்து.

நால்வரும் பாடிய நந்தமிழ்ப் பண்ணிசை
சால்புடைத் தாகாகோ சாற்றீரே — ஏல்புடைத்தா
ஒப்பாரி யன்ன வடநாட்டின் ஓலத்தை
இப்பாரில் கொண்ட தெதற்கு?

6எழுத்தாளர் என்னும் பெயரினை இந்நாள்
முழுமக்கள் சூடல் முறையே — பழுதில்
விழுமிய சொல்லாளா வெள்ளறி வாரை
வழுத்துவ தென்ன வழக்கு?

முத்தமிழைப் போற்றி வளர்த்த முடிமன்னர்
இத்தருணம் இங்கே எழுந்திடில் — வித்தை
மறுமலர்ச்சி யோர்ந்து மனம் வெதும்பாரோ
நறுமலர்க் கோதாய் நவில்.

'அடடா' மொழியில் அறிஞரும் பாடித்
தடபுடல் செய்தல் தகுமோ — நடையிற்
7பிடியன்ன பைந்தமிழ்ப் பேதைக்கோ இந்த
இடிநிகர்ப் பாட்டின் இழுக்கு.

வள்ளுவரை வாயார வாழ்த்துஞ் சிலரிந்நாள்
கள்ளம் இலார்போல் கருத்தினில் — கொள்ளார்
தொடங்கும் அதிகாரம் தூயோனைப் போற்றும்
கடவுள்வாழ்த் தாகலான் காண்.

கம்பனைத் தூற்றும் 8கணக்காயர் அப்பெரியோன்
செம்பொற் கவிச்சீர் தெளியாமல் — வம்பர்தம்
பேச்சைச் செவிமடுத்துப் பின்னிசை கொட்டின்வே
றேச்சென்ன வேண்டும் இவர்க்கு.

செஞ்சொற் கவியின்பம் சீதையெனத் தீட்டியே
அஞ்சொ லமுதூட்டும் சொன்முகிற்கு — நெஞ்சமே
என்னூற்று மிவ்வுல கென்றுநீ எண்ணியே
உன்னூற்றிக் கொள்வாய் உவந்து.

உலகிற்குத் தெய்வ உணர்ச்சியை ஊட்டும்
அலகிற் பெருமைத் தமிழன் — அலவுதான்
கொண்டிந்நாள் கோதமது கூறுங்கவ் வைநிலை
கண்டிரங்கும் என்னெஞ்சங் காண்.

செம்தமிழும் செம்பொருளும் ஒன்றென்றார் சீரியர்
இந்நாள் பாடுவோர் ஏற்றமாய்த் — தந்தம்
புரட்சிக் கவியெனப் போற்றுவ தெய்வ
மருட்சி யலவோ மதி.

ஆன்ற தமிழாம் ஆய்ந்த அரும்புலமைச்
சான்றோர் மறைந்தனர் சான்றுண்மை—என்றுகொள்ளாப்
போலிப் புலவரிருந் தென்ன பொறையாகும்
ஆலிப்பவர் தன்மை அறி.

இல்லையெனக் கூறுகின்றோம் இல்லேம் இயவுளின்
தொல்லை எதற்கெனச் சொல்கின்றோம் — நல்லோயே

கேளென்பார்க் கென்சொல்வேன் கேலி கலைதானே
கேளாரே நீயிதனைக் கூறு.

---

குறிப்பு:—

1. இருபொருள்
2. விளி, Sir என்பதன் மொழி பெயர்ப்பு
3. தமிழ்ச் சொல்லாம்
4. பெரிய பதவிகளில் இருப்பவர்
5. மெலித்தல் விகாரம்
6. **Writer, Clerk** இதனை நூலாசிரியர், கதையாசிரியர் முதலியோருக்கு வழங்குவது பெருந்தவறு.
7. இருபொருள் .
8. ஆசிரியர் (தமிழ்) பின்னிசை கொட்டல். உண்மையறியாது கல்லார் சொல்லைப் பின்பற்றுதல்.

---

## நானிலம்

● "தமிழர் தாம் ஆதிபிற்றென்னுட்டிற் குடியேறித் தம்கியதற்கேற்பக் குறிஞ்சி நில மக்கள், முல்லை நில மக்கள், மருதநில மக்கள், நெய்தனில மக்கள் என நான்கு பிரிவினராயினர். இப்பூமி முழுதும் இந்நான்கு வகுப்பில் அடங்குதல் கண்டவரும் அத்தன்மை பற்றி 'நானிலம்' என்னும் பெயர்க்குறியை இந்நிலவுலகுக்கு இட்டு வழங்கினவருந் தமிழரொருவரே. 'பாலை' என்பதையுஞ்சேர்த்துப் பிற்காலத்தார் 5நிலமைந்தெனக் கொண்டனரேனும், அந்நிலம் முல்லையுங் குறிஞ்சியுங் கலந்ததொன்றுதலால், பழந்தமிழர் அதை ஒன்றாகக் கருதினரில்லை."

# கவிராயர் கூத்து

கவியோகி. சுத்தானந்த பாரதியார்

(பாண்டி வள்ளலும், பாஸ்கர சேதுபதியும் இணை பிரியாதவர்கள். இவர்களைச் சுற்றி புலவர் கூட்டம்மொய்த்துக் கொண்டிருக்கும் புலவர் போட்டி பொறாமையில் இறங்கி ஒருவரைப்பற்றி ஒருவர் அரசரிடம் கோளேற்றுவதுண்டு. நரி வேலை செய்வதுண்டு. ஒருமுறை புலவர் பொறாமை கொழுந்துவிட்டெறிந்தது. சேதுபதியும், வள்ளலும் புலவருக்கு உணர்ச்சி வரத்தக்க ஒரு கதையைச் சொல்லும்படி புலவரையே வேண்டினர். அந்தக்கதையில் மனிதர் பெயரே வரக்கூடாது என்று பாண்டி வள்ளல் கட்டளையிட்டார். சேதுபதி, கதை நகைச்சுவையுடன் இருக்க வேண்டும்; பொறாமை கூட புன்னகைக்க வேண்டும் என்றார். நான், நீ என்று முந்திக் கொண்டு ஐந்தாறு புலவர்கள் நக்கீரர் நடைபிற் பேசினர். எனது தமிழாசிரியர் தெய்வ சிகாமணி புலவர் இனிய குரலில் முகமலர்ச்சியுடன் ''கவிராயர் கூத்தைக் கேளுங்கள்'' என்று ஆரம்பித்தார். அவரிடம் யாருக்கும் பொறாமை கிடையாது. அதனால் எல்லாரும் அவர்கதையை ஆவலாகக்கேட்டனர்.)

சிங்கராஜன் கொலு வீற்றிருக்கிறார்; நாலுகால் மந்திரிகள் அவரைச் சுற்றி வீற்றிருக்கின்றனர். விலங்குகளெல்லாம் அங்குமிங்கும் நடை போட்டுக் கொண்டிருக்கின்றன. ஒற்றநரி அவர்களைக் கண்காணித்து அரசர் காதில் மெல்ல ஊளையிடுகிறது. கரடி, குரங்கு, ஆடு, மாடு, எல்லாம் கூடிப் பேசுகின்றன. குரங்கிற்கு கவி என்றுபெயர். கவிக்குரங்கும், கரடியும் ஏதோ மறைவாகப் பேசிக்கொண்டு சிங்க மன்னனைப் பார்க்கின்றன. திடீரென்று குரங்கு மூக்கைப் பிடித்துக்கொண்டு ''அரகரா-அரகரா'' என்று கூத்தாடியது. உடனே ஒற்றநரி சிங்கத்தின் காதில் ''அதோ அந்தக் கவிராயர் கரடியுடன் சூழ்ச்சி செய்கிறார்'' என்றது. சிங்கம் குரங்கையும், கரடியையும் தீயெழப் பார்த்தது.

நரி:- "அரசே, இவன் வாலை நறுக்கவேண்டும். இந்தக் கவிராயன் பயங்கரமான புரட்சியைக்கிளப்புகிறான். இவன் மூக்கைப் பிடித்ததன் பொருள் தெரியுமா?"

கரடி:- அரசர், மூக்குப்பிடிக்க சாப்பாடு போடுகிறார் என்பதுதான் பொருள்.

நரி:- அரசே! இவன் சூழ்ச்சிக்காரன்; உண்மையை ஒழிக்கிறான். அரசர் ஆடு மாடுகளை எல்லாம கொன்று மூக்குப் பிடிக்கச் சாப்பிடுகிறார். இங்கே எலும்பும், ஊனும் நாறுகின்றன என்று மூக்கைப் பிடித்தான்.

சிங்கம்:- நமது குகையா நாறுகிறது? வம்பன்; பொய்யன் நீ என்ன நினைக்கிறாய்?

நரி:- அரசே! இங்கே எல்லாம் "கமகமா" என்றிருக்கிறதே! காற்று மல்லிகைப்பூப்போல் மணக்கிறது.

சிங்கம்:- இந்த வம்புக் குரங்கையும், கரடியையும் என்ன செய்யலாம்?

நரி:- அரசே! இவர்கள் 'அரகரா' 'அரகரா' என்றதன் பொருள் தெரியுமா?

சிங்கம்:- 'அரகரா' என்று சிவபக்தர் சொல்வார்கள்.

நரி:- அப்படியில்லை அரசே. **அர** என்றால் அரசன் **கரா** என்றால் முதலை. இந்த அரசனை குளிக்கப் போகும்போது முதலை வாயில் திணிக்கவேண்டும் என்று சூழ்ச்சி செய்கிறார்கள். அரசர் ஆற்றிற்குப் போகாமல் இருப்பது நல்லது.

இப்போது குருவி, காக்காய்கள் மரத்தின் மேலிருந்து கூவின. குரங்கு அவற்றைப் பார்த்து கையை உயர்த்தியது.

நரி:- அதைச் சுட்டி, மகராஜா இந்தக் குரங்கு காக்கைக் குருவிகளைப் பார்த்துக் கைநீட்டியதின் பொருள் தெரியுமா?

சிங்கம்:- காக்கைகள் இப்போது அதிகமாக வருவதில்லையே, ஏன்?

**நரி:–** அரசே! இந்தக் கவிராயன் அத்தனைக் காக்காய்களை யும், குருவிகளையும் மலையாளம் ஊட்டுப்புரைக்கு அனுப்பி விட்டான். இங்கே இருந்தால் மகராஜா தின்றுவிடுவீராம் அரசனை ஒருகை பார்த்துவிடுவோம் என்று கை ஓங்கியது குரங்கு.

இந்தச் சமயம் கரடியும், குரங்கும் கட்டிக் கொண்டன நரி அதைக்காட்டி "அரசே பாருங்கள் எல்லா விலங்குக ளும் கட்டுப்பாடுடன் ஒன்றுபடவேண்டுமாம்; அரசனை எதிர்க்க வேண்டுமாம். கட்டிக் கொண்டபொருள் இதுவே.

**சிங்கம்:–** ஒருவேளை ஆடுமாடுகளை நான் தனியே அழைத்து இதே மாதிரிதான் அணைந்து பிறகு கிழித்து உண்பது வழக்கம். அதைக் குறிக்கிறார்களோ?

**நரி:–** அப்படித்தான் இருக்க வேண்டும்.

இந்தச் சமயம் குரங்கு 'அங்ஙங்ஙங்ஙே' என்றது.

**நரி:-** கேட்டீரா? அரசே! தங்களைப்பார்த்து அருவைப் பட்டு 'அங்ஙங்ஙங்ஙே' என்கிறார் கவிராயர். 'ஙஞணநமன' என்ற மெல்லினங்களைக் கூட்டித் தாங்கள் அஞ்ஞானியாம். தங்கள்குகை 'நிணம்' நாறுகிறதாம் என்று கேலி செய் கிறது குரங்கு.

**சிங்கம்:–** ஒற்ற நரியே! உனக்கு இவ்வளவு ஊகம் எப்படி வந்தது? அங்ஙே என்பதற்கு நுட்பமாகப் பொருள் கூறி னாயே!

**நரி:–** அரசே! எனக்கு மலையாளம் பழக்கம் உண்டு. நான் என்பதை மலையாளிகள் ஞான் என்பார்கள். கஞ்சி என் பதை கஞ்ஞி என்பர். மூஞ்சியை மூஞ்ஞி என்பர். அதே மாதிரி இவன் அஞ்ஞே என்பது அஞ்சேல் என்பதாகும். அரசனுக்கு அஞ்சாதே என்று பொருளாகும். செய் புரட்சி என்று கவிராயர் தூண்டிவிடுகிறான். அஞ்ஞன் என்றால் முட்டாள் என்றும் பொருள். அரசனை முட்டாள் என்கிறான் இவனைச் சும்மா விடுவதா?

**சிங்கம்:–** (உருமியது) இந்தக் கரடியையும், கவிராயனை யும் சிறையில் அடைத்து விடுங்கள். அவைகள் வெளியே

தப்பிஓடாமல் பார்த்துக் கொள்ளுங்கள், நமது மாளிகை நாறுகிறதாம்; நாம் கொன்று உண்கிறோமாம்; பழி சுமர்த்து கிறார்கள். விலங்குகளை எனக்கு எதிராகத் தூண்டிவிடு கிறார்கள்.

குரங்கும், கரடியும் சிறையில் தள்ளிக் குதித்தன. நரியார் காவல் இருந்தார். இருவரையும் பற்றி என்னன்னமோ கோள் கூறினர்

இந்தச் சமயம் ஒரு பெரிய எருமைக் கடாயைச் சிங்கம் உரித்துச் சாப்பிட்டது. அஜீரணத்தால், அது செரிக்காத தனால் நோய்வாய்ப்பட்டது. மருத்துவர்கள் கைவிட்டனர்.

கரடி:- நான் ஒரு பச்சிலைதந்தால் அரசருக்குக் குணமாகும் பச்சிலையும் என் கையில் இருக்கிறது.

குரங்கு:- அந்தப் பச்சிலையின் பெயர் என்ன?
கரடி, குரங்கின் காதுக்குள் ஏதோ சொன்னது. குரங்கு கூத்தாடியது

நரி:- ஏய் கவிராயா! அரசனுக்கு உடல் நலமில்லை; நீ கூத்தாடுகிறாயா? இதோ அரசனிடம் சொல்லுகிறேன் என்று ஓடியது நரி.

நரி:- அரசே! இந்த நன்றி கெட்ட கவிராயன் கூத்தாடு கிறான். தங்களைக் கேலி செய்கிறான். இந்தக் கரடி அவன் காதில் ஏதோ ஓதுகிறது. இந்த இரண்டுபேரையும் ஒழித்துவிட வேண்டும். மேலும் ஆடு மாடுகளை இந்தப் பக்கமே வராது இவர்கள் தடுக்கிறார்கள்.

இதைக் கேட்டதும் சிங்கம் வெகுண்டெழுந்தது, சினம் பறக்க ஓடிவந்தது, "குரங்கே! ஏன் குதிக்கிறாய்? நான் வருந்துவது உனக்கு மகிழ்ச்சியா? உன்னைக் கிழித்து இரத்தம் குடிப்பேன்" என்று வீறிட்டது.

குரங்கு:- அரசே! பணிவுடன் சொல்லுகிறேன். தாங்கள் பொறுமையாகக் கேட்க வேண்டும். எனது நண்பர் கரடி யார் நல்லமருத்துவர். அவருக்குப்பல மூலிகைகள் தெரியும். தங்கள் நோய்க்கு ஒருநல்ல மூலிகை மருந்தைச் சொன்னார். அந்த மகிழ்ச்சியால் குதிக்கிறேன். அந்த மருந்தை

உடனே சாப்பிட்டால் நோய்தீரும். ஆனுல் அதைத்தனி மையில் காதுடன் சொல்ல வேண்டும் அரசியாரும் தாங் களும் அதைக் கேட்க வேண்டும்.

அரசியார் கரடியையும் குரங்கையும் தனியாக அழைத்து மருந்தின் வகையைக் கேட்டது அரசன் படுக் கையில் சோர்ந்து கிடந்தான்

குரங்கு:– அரசியே! என துநண்பர்கரடியார்சித்தவைத்தியப் புலவர் அவர் சொல்லும் மருந்தை அவர் வாயினுலேயே கேட்கவேண்டும். பிறகு நான் விளக்குகிறேன்.

பெண்சிங்கம்:– அரசன் மயங்கிக் கிடக்கிருன் மருந்தை விரைவில் சொல்லுங்கள்.

கரடி:– அரசியே! நான் சொல்லும் மூலிகை 'நரிமகுடம்' என்பது. அதை எப்படி அடைவது தெரியுமா?

அரசி:– எப்படியாயினும் உடனே சொல். எங்கிருந்தாலும் கொண்டு வருவோம்.

கரடி:– அரசியே! மூலிகை அதோ அந்த மூலையில்தான் இருக்கிறது,

இந்தச் சமயம் நரி ஊ......என்று ஊளையிட்டது.

குரங்கு:– அரசியே! அதோ அந்த வஞ்சநரி. ஊ......என் கிறது. பொருள் தெரியுமா? அரசனுடைய ஊழ் முடிந்து போனதாம். ஊழ் என்ருல் விதி. தெரியாதா? அவன் விதி முடிந்தது. அவன் சாகப்போகிருன் என்று சாபமி டுகிறது. நரிமகுடம் உடனே வேண்டும்.

பெண்சிங்கம்:– இந்த நரியிடத்தில் எனக்கு நம்பிக்கையே இல்லை. வஞ்சநரி. நீதான் நல்லவன். சொல்லு.

கரடி:- அரசியே! அந்த வஞ்ச நரியின் கழுத்தைக் கடித்து இரத்தத்தை உறிஞ்ச வேண்டும். பிறகு அதன் தோலை உரித்து குல்லா போலச் செய்து அரசன் முடியில் சூட்ட வேண்டும். இதற்குத் தான் நரிமகுடம் என்ற மூலிகை.

உடனே பெண்சிங்கம் அரசனைத் தூண்டியது. இரண்டும் சேர்ந்து நரியைக் கொன்று இரத்தத்தைக் குடித்துத் தோலைத் தொப்பியாக்கி தலையில் சூட்டிக் கொண்டன.

**குரங்கு**:- அரசே! இனித் தங்களுக்கு நோயே இல்லை. இந்த வஞ்சநரிதான் தங்கள் நோய்க்குக் காரணம். நரிமகுடத்தால் தங்கள் மூளை இனி நேர்மையாக நினைக்கும்.

"வஞ்சநரி தோலுரித்து
மகுடம்சூட்டி மனக்கவலையில்லாது
வாழ் வீராக வஞ்சக் கோளேற்றிய நரி ஒழிந்தது.

புலவர் மன்றம் அமைதியாக நடந்தது-
தை தா தைதா ததிங்கிணத் தோம்
சைத்தான் சைத்தான் அழுக்காறு"

**சிங்கம்**:- மெய்தான் மெய்தான் கவிராய!
பொய்தான் விட்டு புகழுடைவோம்!

இந்தக் கதையைக் கேட்டதும் பாண்டித்துரை "வஞ்சநரி வேலை" என்று அடியெடுத்துக் கொடுத்துப் புலவர்களை நோக்கினார்; தெய்வசிகாமணிப்புலவர் வாயிலிருந்து ஒரு வெண்பாப் புறப்பட்டது.

வஞ்ச நரிவேலை வாழ்வைக் கெடுக்காதே
நஞ்சப் பொருமை நலிக்காதே—நெஞ்சுருகப்
பாடுகவே மெய்ப்புலவர் பைந்தமிழை முன்னேற
நாடுகவே நாற்கவியினால்

---

● பழங்காலத்தே திராவிடரெல்லாம் ஒரே மக்களால் ஒரே மொழியை வழங்கினராயினும் காலாந்தரத்தில் அவர்மொழி தெலுங்கு, கன்னடம், மலையாளந்துளு எனச் சில வேற்றுமை பெற்றுப் பிரியலாயின. ஆயினும், அவை தமிழின் உருவத்தையே தம் ஆதியுருவமாகக் கொண்டிருக்கின்றன.

— பாண்டித்துரைத்தேவர்.

# ஆறுவதறிவு மனம்

ப. இராமன் எம். ஏ.
தமிழ்த்துணைப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி, சென்னை.

இவ்வுலகம் சித்து, அசித்து என இருவகைப் படும். சித்து அறிவாகிய பொருள். அசித்து அறிவில்லாத பொருள். இவ்வுலகத்தின் ஐம்பூதங்களும் அறிவற்ற பொருள்களே.

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போல"

(புறம் : க)

என்ற புறப்பாடலும், மண், விசும்பு, வளி, தீ, நீர் ஆகியவை ஐம்பெரும் பூதங்கள் எனக்கூறுகின்றன. இவற்றுள் மண்ணில் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனும் ஐவகை நிகழ்ச்சிகளும் தோன்றும். நீரில் ஓசை, ஊறு, ஒளி, சுவை எனும் நான்கும் தோன்றும், தீயில் ஓசை, ஊறு, ஒளி மூன்றும் தோன்றும். வளியில், ஓசையும், ஊறும் ஆகிய இரண்டு தோன்றும். விசும்பில் ஓசை எனும் ஒன்று மட்டுமே தோன்றும். இவை ஐந்தும் தோன்றும் நிலைக்களனாக விளங்குபவை இவ்வைவகைபெரும்பூதங்களே யன்றி இவற்றை அறிபவையல்ல. யாழில் இசை பிறக்கினும் யாழ் அறியாதது போன்றென்க. உயிர்களின் உடம்புகள் ஐம்பூதச் சேர்க்கையான் அமைந்தவையே எனினும் அவ்வுயிர்களும் இப் பூதங்களுள் தோன்றும் ஒன்றோ, பலவோ ஆகிய நிகழ்ச்சிகளையே அறியத்தக்கனவாக அமைந்துள. தொல்காப்பியரும் இதனை மரபியலில் விளங்கக் கூறுவாரயினர்.

புல், மரம் எனப்படும் தாவரங்கள் 'உற்றறிதல்' எனும் ஓரறிவின. நத்தை இப்பி என்னும் ஊர்வன உற்றறிதல், சுவை எனும் ஈரறிவின. சிதல் (கறையான்), எறும்பு முதலானவை, ஊறு, சுவை, நாற்றம் எனும் மூவறிவின. நண்டு, தும்பி (வண்டு) ஆகியவை ஊறு, சுவை, நாற்றம் ஒளி எனும் நான்கறிவின. விலங்கினங்களும் மாக்களும் இவ்வினமும் ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை எனும் ஐந்தறிவினவாம். மாக்கள் பிறப்பால் மக்களே எனினும் மக்கட்குரிய அறிவும் செய்கையும் இல்லாது விலங்குகள் போன்ற வாழ்வினராதவின் அவரை விலங்கினத்தோடு ஒப்ப எண்ணினர் 'செவியிற் சுவையுணராவாயுணர்வின் மாக்கள்' எனத் திருவள்ளுவரும் செவியிற்சுவையுணர்ந்து கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் எனும் பண்புகளால் சிறிதும் வளர்ச்சி பெறாது, வாய்ச்சுவையை மட்டுமே வளர்த்த மக்கள் மாக்களே எனக் குறித்தமை காண்க.

இச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐவகைப் பொறியுணர்வுகளும் ஒன்றும் பலவும் பெற்ற உயிர்களுள் விலங்குகளும் மாக்களும் ஐந்தறிவுடையன என எல்லை கூறினர். இதற்குமேல் ஐம்பூதங்களின்றும் தோன்றத்தக்க தொன்றின்மையான். ஐம்பூதங்களின் சேர்க்கையால் அமைந்த யாக்கைகளுள் விலங்குகளும், மாக்களும் ஐவகைப் பொறியுணர்வுகளைப் பெற்ற நிறைவுடையனவே எனினும், உண்ணுதல், உறங்குதல், இனப்பெருக்கம் செய்தல், இடப்பெயர்தல் எனுஞ் செயல்களையன்றி வேறு மிக்குயர்ந்த செயல்கள் புரியும் அறிவுபெறாதவையாகின்றன செயலால் உயரும் அறிவு பெறாமையாற்றான் 'மாவும் மாக்களும் ஐயறிவினவே' என விலங்கிற்குரிய அஃறிணை வினை முடிபு கொண்டார். இதனால் மக்களாகப் பிறந்தும் அறிவின்மையால் நிலையிற்றாழ்ந்து விலங்கெனக் கருதும் தன்மை எய்தினமை காண்க. [''மாவும் புள்ளும் ஐயறிவினவே'' என்ற பாடமும் உண்டு]

ஐயறிவுடன் ஆறாவது அறிவும் ஒன்று உண்டெனத் தொலகாப்பியர் கூறுவது கண்டின்புறத்தக்கது. இவ்வகை அறிவுகளைத் தான்கூறவில்லை 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே' எனத் தொன்மை கூறியமை வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே!

இனி ஐம்பூதங்களின் சேர்கையான் அமைந்த இம் மனிதயாக்கையில் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளும் ஐம்பூதங்களை நிலைக்களனாகக் கொண்டெழும் ஐவகை நிகழ்வுகளை அறியும் இயல்பினராயிருக்க, இப்பெரும் பூதங்களோடும், பொறிகளோடும் தொடர்பின்றி இயங்கும் ஓர் அறிவு உண்டென்றும் அதுவே மனம் என்றும் கட்புலனாகப் பொறியொன்றைப் புலப்படுத்து நம்மை இறும்பூது எய்தச் செய்கின்றார் என்க. 'ஆறறி வதுவே அவற்றொடு மனனே' என்பது தொல்காப்பிய மரபியல் நூற்பா.

யாக்கையின் அமைந்த பொறிகள் ஒருபொருளை நுகரும் பொழுது. நுகருமாறு தூண்டுவது மனமாகவே இருக்கின்றது. நுகரப்படுபொருளின் நன்மைதீமைகளை முதற்கண் அறிந்து நுகரத் தூண்டினால் அதனை நல்ல மனம் எனவும் அல்லால் தீய மனம் எனவும் கூறுகின்றோம். நல்லதன் நலனும் தீயதன் தீமையும் அறிதற்குப் பொறிகள் வன்மையுடையன அல்ல என்பது இதனால் தெளிவாகின்றது. தூண்டியவாறு அறிதலினால் தான் உடம்பும் உடம்பிலமைந்த ஐம்பொறிகளும் அசித்து அதாவது அறிவற்றவை எனக் கூறப்பெற்றன. அவ்வாறாயின் ஐம்பொறிகளை அறியத் தூண்டுகின்ற மனம் ஏனைய சித்தம், புத்தி, அகங்காரம் எனும் அந்தக்காரணங்களுள் ஒன்றே. மனம் நினைப்பதும், சித்தம் வினவுவதும் புத்தி உறுதி செய்தும், அகங்காரம் எழுச்சியுறுதலும் செய்யுமாதலால் 'மனத்தால் நினைத்தேன், சித்தத்தால் வினவினேன், புத்தியால் உறுதிசெய்தேன், அகங்காரத்தால் துணிந்தேன்' என்று உணரும் **அறிவு** வேறு இருத்தல் தெளிவு. ஆகையால் மனம் அறிவுப் பொருளன்று அதுவும் அறிவற்ற பொருளே எனத் துணியலாம். அறிவற்ற பொருள் ஏனைய அறிவற்ற பொருள்களை அறியுமாறு தூண்டுவது எங்ஙனம்? உடம்பின் உட்பொறியாகிய கட்புலனாகா மனம் எனும் அசித்துப் பொருள் தன்னைத் தூண்டியவாறு, செயல்படுகின்றதென்க. மின்னாற்றல் இல்லாத மின்கம்பிகளில் மின்னாற்றல் ஓடிச் செயல்பட்டுப் பல்வித ஆற்றல்களுக்குப் பயன்படுமாய் போல் மனம் எனும் அசித்தும் முதற்கண் சித்தான பொருளால் செயல்படுத்தப்படுகின்றது. நமது பருவுடலைப் புழுக்குரம்பை என்பர். நுண்ணணுக்களையே இங்குப்

புழுக்கள் என்ருர். இவ்வணுக்களுள் ஒன்ருக மனம் எனும் பொறியமைமயவில்லை! 'மலர்மிசை ஏகினன்' எனும் திருக்குறளுக்கு உரையெழுதப் புகுந்த பரிமேலழகர், அன்பான் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவில் விரைந்து சேறலின், 'ஏகினன்' என இறந்த காலத்தாற் கூறினர்' என்ருர். இங்கு உள்ளத்தைக் கமலமாக உருவகித்துள்ளார். அருணகிரியார் 'நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக' எனத்தான் நெஞ்சைக் கனகல்லாக உருவகித்துள்ளார். 'கரமலர் மொட்டித்து இருதயம் மலர' என மணிவாசகர் மொழிந்தார். இவையன்றி, வஞ்சமனத்தான் படிற்ருெழுக்கம், நெஞ்சிற்றுறவார், அகங்குன்றி மூக்கிற்கரியார், மனத்துக்கண் மாசிலனுதல், உட்கோட்டமின்மைபெறின், அகனமர்ந்து, தன்னெஞ்சம் நடுவொரீஇ, நெஞ்சத்துக் கோடாமை, உள்ளத்தால் உள்ளலும் தீதே, நெஞ்சிற்கரவு, நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல், அஞ்சுதும் வேபாக் கறிந்து, மாதர்கொல்மாலும் என் நெஞ்சு, எனத் திருவள்ளுவரும் சினமிறக்கக் கற்ருலும், சித்தி மிகப் பெற்ருலும், மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே எனத் தாயுமானுரும், ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு, அன்பிலை என்புருகப் பாடுகின்றிலை, பதைப்பதுஞ் செய்கிலை, பணிகிலை, பாதமலர் சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணி நெஞ்சே, யானேபொய் என் நெஞ்சம் பொய் என மணிவாசகரும், மற்றும் பல பிதற்றவேண்டா மட நெஞ்சே என நக்கீரர் தம் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியிலும், பார்த்து நடுக்குற்றுப் பதைத்து மனஞ்சுழன் றுஎனக்கண்ணப்பர் திருமறத்திலும் இங்ஙன் மனத்தைப் பற்றிப் பலபடப்புனைந்துரைத்துள்ளமை காண்க. இம்மனமோ அறிவற்ற பொருளாயிருக்க, ஆன்ருேரும் சான்ருேரும் இம்மனத்தையே நம்பினராய், நெறிப்படுத்த முனைந்தவராயுள்ளனர் என்னும் உண்மை நந்தம் தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் காணக்கிடப்பதாம் எனில் மறுப்பார் யாரே? என் நெஞ்சத்தினும் வஞ்சமற்ற ஓர் இடம் இறைவன் குடிபுக என்னிடம் இல்லையென ஆழ்வார்களும் பாடியுள்ளனர். சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனல் சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான், என மணிவாசகரும் சிவன் சிந்தையுள் நிற்பதாகவே பரவியுள்ளார். இங்குக் கூறியுள்ளவை சில சான்றுகளே. விரிவஞ்சி மேலும் கூருது விடுத்தாம்.

இவண் கூறிய மனத்தைப் போற்றும் பாங்கினை உன்னுங்கால், நன்மையும் தீமையும் எனும் அனைத்துக்குணங்களும் உணர்வுகளும் மனப்பொறியின் வழியிலே தூண்டப் பெற்று ஐம்பொறிகளில் வெளிப்பட்டு நன்மையும் தீமையும் விளைக்கின்றன என அறியலாம். மாணிக்கவாசகர் உட்பட எல்லோரும் அறிவற்ற நெஞ்சை வேண்டி நிற்பதன் மூலம் அறிவான பொருள் முதற்கண் செயல் படுத்துவது மனத்தையே என்பது புலனும். இவ்வறிவான பொருள் இன்ப துன்ப நுகர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது. வாலறிவுடன் விளங்குவது; அழியாத் தன்மையது. உடம்பின் உள்ளும் அதன் புறத்துமாக எங்கும் பரவியிருப்பது. நீரில் மூழ்கியவன் அதன் தண்மையைத் தன் உள்ளும் புறமும் உற்றறிதலாற்காணல்போன்றென்க. உடம்பினுள்ளிருப்பது சீவாத்மா வெளியிலிருப்பது பரமாத்மா என்ற இருபெயர் கொண்ட ஒருபொருள். இங்ஙன் அறிவுப்பொருளாய் விளங்கும் அவனே ஆட்டுவிக்கின்றான். ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே. அவ்வாறே உலகம் இயங்குகின்றது. அறிவற்ற பொருளாகிய மக்களும் இவ்வாறே இயக்கப்படுகின்றனர். தொல்காப்பியர் கூறும் மனம் என்ற பொறி, ஏனைய ஐம்பொறிகட்கும் தலைமையுடைத்தாதல் பற்றி, ஏனைய பொறிகள் ஒன்றை மற்றொன்று உணராமலிருக்க, மனம் அனைத்துப்பொறிகளையும் அறிதல், அப்பொறிகள் இல்லாமல் இயங்குவது எனும் சிறப்புப் பற்றி மனத்தை உயர்வாகக் கூறினர். இஃது ஒன்றை அடக்கினால் ஏனைய பொறிகளை அடக்குவது எளிது. ஆயின் அடக்குவது யார்? 'நான்' என்பது உறுப்புக்களடங்கிய புன்புலால் யாக்கை இல்லை என்றறியும்பொழுது மனத்தை அடக்குவது யார்? உடம்பினுக்கு அப்பாற்பட்டும் அதனுள்ளுமாகக் கண்டவர் விண்டிலாத வாலறிவனே. ஆன்மா என்பதும் இதுவே.

சூக்கும தேகி யாகித் தூலரு பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள அவத்தையுள் தங்கியெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்க ளெல்லாம் அருந்தியும் நிற்கு மான்மா.

— சிவஞான சித்தியார்-212.

இவ்வாலறிவின்றி வேறு அறிவுடைப்பொருள் நமது யாக்கையில் இல்லையாகையான் மனம் எல்லாவற்றையும் அறியும் சித்துப் பொருளன்று, அதுவும் அசித்தே என்பது வெள்ளிடைமலை.

அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோனை யாண்டது
அறிவ லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னேஅல்ல னேஅருள் ஈசனே.

— திருவாசகம் : 50

## செந்தமிழ் ஏடு!

சங்ககாலச்சிறப்பனைத்தும் பிற்காலத்தில் பெற்று, குமரி முதல் இமயம் வரையிலும் பெரும்புகழ் ஈட்டித் தந்த தண்ணார் தமிழ்க் காவலன், நற்றமிழ்ப் பாவலன் கொடைவள்ளல் மேதகு. பாண்டித்துரைத் தேவரவர்களால் தொடங்கப் பெற்றது **''செந்தமிழ் இதழ்''**.

கடந்த அறுபத்தெட்டு ஆண்டுகளாகத் தனித் தமிழால் உணர்வூட்டி தரணியெங்கும் தமிழ்மணம் பரப்பி வருகிறது என்பதை அறியாதார் இலர்.

தமிழ்ப் பண்பு நிறைந்த வயங்கு மொழிப் புலவர்களும், குன்றாத் தமிழுணர்வுடைய நற்றமிழ்ச் சான்றோர்களும், தண்ணார் தமிழன்பர்களும், செந்தமிழ் உறுப்பினராகி, விரைவில் திங்கள் இதழாக வெளிவரும் வண்ணம் ஒல்லும் வழியில் ஆக்கமும், ஊக்கமும் தந்துதவ வேண்டுகிறோம்.

# திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும் வரலாற்று அமைப்பும்

இரா. கோதண்டராமன்
எம். ஏ. (தமிழ்) எம். ஏ. (மொழியியல்)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

## முன்னுரை.

குறிப்புரை :

*திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும் வரலாற்று அமைப்பும்* (Descriptive and Historical Structures in Dravidian Languages) என்னும் இக் கட்டுரை தமிழிலும், வேறுசில திராவிட மொழிகளிலும் காணப்படும் சில வினைமுற்று அமைப்புக்களும், வேறு சொல்வடிவங்களும் எங்ஙனம் படிப்படியாகத் தோற்றம் கொண்டன என்பதை ஆராய்கின்றது. இக்கட்டுரையில் அமைந்த ஆய்வு திராவிடமொழிகளின் சொல்லமைப்புக் களில் ஐயத்திற்கிடமில்லாமல் நிகழ்ந்த ஒலித்திரிபுகள், உயிரொலி மற்றும் மெய்யொலியாகிய மெல்லொலி வீழ்ச் சிகள், போன்றவை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒலித்திரிபுகள் என்பவை யகரத்தின் முன்நிகழும் பல்லின ஒலிகள் (—ந்த்—, —த்த்—) அண்ண ஒலிகளாதல் (—ஞ்ச்— —ச்ச்—), உயிர்களிடையே மிகாமல் நிகழும் அலேயொலி [Voiced Sound] யாகிய பகரம் வகரமாதல், மெல்லொலி களின் பின் நிகழும் இனவல்லொலிகள் மெல்லொலிகளா தல் (மலையாளம்: பந்த்ரீராண்டு*. தமிழ்: பன்னிராண்டு (> ?* பந்நீராண்டு]; கன்னடம்: பொம்பெ [bombe]. தமிழ்: பொம்மை; தமிழ்: தம்பி. கன்னடம்: தம்ம)

---

* நாயுடெ வாலு பந்தீராண்டு காலம் குழலில் இட்டாலும் வளஞ்ஞே இரிக்கூ என்பது மலையாளப் பழமொழி. நாயின் வாலைப்பன்னிராண்டு காலம் குழாயில்வைத்து நீட்டினாலும் வளைந்தே இருக்கும் என்பது இப் பழமொழியின் பொருள்.

1. செந்தமிழ் [1–23] தொகுதி 67 பகுதி 1 செப்டம்பர் 1971

போன்றவையாகும். செய்யும் வாய்பாட்டுவினைகள் செய்ம் வாய்பாட்டு வடிவினவாக ஒடுங்கும்போது உம்மைக்கிளவியில் நிகழும் உகரம் கெட்டு நிற்றல் உயிரொலி வீழ்ச்சியாகும். உயிர்க்குறில்கள் வீழ்ந்துபடும் நிலையைக் கன்னடத்திலும், பெருவாரியாக கோத்தம், தொதுவம் ஆகிய மொழிகளிலும் காணலாம். திராவிடமொழிகளில் சொற்களின் இடையில் நிகழும் மெல்லொலிகள் அனைத்தும் உம்மைக்கிளவியின் சுவடுகளாகக் கொள்ளத்தக்கனவாகும் என்பது நமது துணிபு. வல்லொலிகளின் முன் நிகழும் மெல்லொலிகள் உதிர்ந்து போதலும், வல்லொலி தொடர்ந்தும் தொடராமலும் நிகழும் மெல்லொலிகளின் முன்பும் மிகுந்து நிற்கும் வல்லொற்றுக்களின் முன்பும், ஈற்றிலும் நிகழும் யகரம் கெட்டுநிற்றலும் மெய்யொலி வீழ்ச்சியின் பாற்படும். **தமிழ்க்கிளவி** என்னும் கட்டுரையில் இது விரிவாக ஆராயப்பெற்றுள்ளது 1 மேற்படி மாறுதல்கள் அனைத்தும் திராவிடமொழிகளில் நிகழ்ந்தமைக்குச் சான்றுகள் இருப்பதால், இவற்றைப் புறக்கணித்த நிலையில் மேற்கொள்ளப்படும் எந்த வரலாறு ஆய்வும் சொற்களின் உண்மையான வளர்ச்சியைப் புலப்படுத்துவதாக அமைய முடியாது.

ஒரு மூலமொழியில் இருந்து கிளைமொழிகள் தோன்றி தனிமொழிகளாக அமையும்போது நிகழும் மாறுதல்கள் பலவாகும். இம்மாறுதல்கள் ஒவ்வொருமொழியிலும் அளவில் மிகுந்தும், குறைந்தும் காணப்படலாம். எடுத்துக்காட்டாக மெல்லொலிகளின் பின் நிகழும் வல்லொலிகள் மெல்லொலிகளாகத்திரியும் போக்கு மலையாளத்தில் மிகுதியாகவும், தெலுங்கில் குறைந்தும் காணப்படுகின்றது. மலையாளத்தில் மேற்படி மாறுதல் மிகுதியாக இருப்பதால் அம்மாறுதல் மலையாளம் தனிமொழியாகப் பிரிந்த பின்னர் நிகழத் தொடங்கியது என்று கூறிவிட முடியாது. இம்மாறுதல் மூலமொழியிலேயே தொடங்கியிருக்க வேண்டும். இதேபோல் உயிரொலி வீழ்ச்சி, மெல்லொலி வீழ்ச்சி ஆகியவையும் மூல மொழியிலேயே நிகழத் தொடங்கியதாகக் கருதலாம். இத்தகைய சில மாறுதல்களை மூல மொழிக்கே கொண்டு செல்வதன்மூலம் தனிமொழிகளில் வழங்கும் சொற்களின் வரலாற்று அமைப்பை ஆராயவும் அவற்றின் மூலவடிவங்களை உருவமைக்கும் சில **நம்பகமான ஊகங்களை** நம்மால் மேற்கொள்ள முடிகின்றது.

தனி மொழியில் நிகழும் சில மாறுதல்களுக்கும் மூல மொழிக்கும் சிறிதும் தொடர்பில்லை என்று கூறி விட முடியாது. மூலமொழி என்பது தனிமொழிகளைப் போலவே தனக்கென ஒருநீண்ட வரலாற்றினையுடையது. ஒரு குறிப்பிட்ட பொருண்மையை உணர்த்தும் ஒன்றுக்கு மேற்பட்ட மூலவடிவங்கள் அமைக்கநேரும்போது, அம்மூல வடிவங்கள் மூலமொழியில் வெவ்வேறு காலக்கட்டங்களில் தோற்றம் கொண்டனவாகக் கருதலாம். ஒன்றுக்கு மேற்பட்ட மூலவடிவங்கள் என்று இங்கே குறிக்கப்பெறுபவை ஒருவேர்ச் சொல்லின் அடியாகத் தோன்றி அமைந்தவைகளேயாகும். எடுத்துக்காட்டாக **கால், காற்று** இரண்டும் மூலமொழியில் வழங்கியதாக வைத்துக்கொள்வோம். இவ்விரண்டனுள் ஓரசைச் சொல்லாகிய **கால்** முன்னரும் அதன் அடியாகத் தோன்றிய **காற்று** [> *கால்—து] பின்னரும் மூலமொழியில் வழங்கத் தொடங்கியிருக்க வேண்டும். இவ்விரண்டு சொற்களுக்கும் இடைப்பட்ட கால அளவுபற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லையென்றாலும் ஒரே பொழுதில் இரண்டும் தோன்றியிருக்க முடியாது என்ற அளவுக்கு ஊகிக்கலாம். வரலாற்றுப் போக்கில் மூலமொழியில் நிகழ்ந்த மாறுதல்களையே அதினின்றும் தோன்றிய தனிமொழிகளும் வெவ்வேறு அளவில் தன்வயப்படுத்திக் கொண்டனவாகக் கருதலாம். ஆனால் தனி மொழிகளில் காணப்படும் எல்லா மாறுதல்களும் மூலமொழியிலும் நிகழ்ந்திருக்குமா என்பது குறித்துத் திட்டவட்டமாக ஏதும் கூறுவதற்கில்லை.

**வண்ணனை அமைப்பும் வரலாற்று அமைப்பும்:** இவ்விரு அமைப்புக்களும் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டே அமையும்நிலை காணப்படுகின்றது எடுத்துக்காட்டாக **நன்மை, தீமை** ஆகிய இரு சொற்களும் **நல்-மை, தீ-மை** என்று ஆராயப் பெற்றால் அவை வண்ணனை அமைப்பினவாகக் கருதப்பெறும். ஆனால் வரலாற்று நிலையில் இவற்றின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டதாகும். இவ்விரு சொற்களின் வரலாற்று அமைப்பும் ***நல்—உம்—அய், *தீய்—உம்—அய்*** என்று அமையும். இதேபோல் **கால்கள்** என்ற சொல் **கால்—கள்** என்று வண்ணனைநிலையில் ஆராயப்பெறும். வரலாற்று நிலையில் இதன் அமைப்பு ***கால்—உம்—கு—அள்*** என அமையும். இவ்வரலாற்று அமைப்பு நமக்கு எப்படிக்

கிடைத்தது? தமிழகத்தின் வடமாவட்டங்களில் **காலுங்க** என்னும் சொல் **கால்கள்** என்ற சொல்லுக்கு நிகராக வழங்குகின்றது. இச்சொல் மெல்லொலியை இழந்து **காலுக** என அமைகின்றது நெல்லைமாவட்டத்தமிழில் இதேபோல் **கால்கள்** என்ற சொல் ***காலுங்கள்** என்ற தொன்மை வடிவினதாகக்கொண்டு அதில் நிகழ்ந்த மாற்றங்களைப்படிப்படியாக விளக்கலாம். **காலுங்க** என்ற சொல் மெல்லொலியை இழந்து எங்ஙனம் **காலுக** என்று அமைந்ததோ அங்ஙனமே ***காலுங்கள்** என்ற தொன்மை வடிவமும் மெல்லொலியை இழந்து ***காலுகள்** என்று அமையும்.1 வேர்ச்சொல்லின் மீது நிகழும் உகரம் வீழ்ச்சியுற்ற நிலையில் ***காலுகள்** என்ற வடிவம் **கால்கள்** என அமைந்து. **கால்கள்** என்ற சொல்லின் மூல அமைப்பை ***கால்—உம் கள்** என்று கொள்ளாமல் ஏன் ***கால்—உம்—கு—அள்** என்று கொள்ளவேண்டும் என்ற கேள்வி எழலாம். இதுபற்றி இங்கு விரிவாகக் குறிப்பிடுவதற்கில்லையென்றாலும் இரண்டு காரணங்களை மட்டும் கருத்தில் கொள்ளலாம். 1. மூலமொழியில் உயிர் முதலாகிய விகுதிகள் என்றும் மெய்முதலாகிய விகுதிகள் என்றும் இருவகை விகுதிகள் காணப்படுகின்றன. இவற்றுள் மெய் முதலாகிய விகுதிகளாக அமைபவை **பு, து, கு** ஆகிய மூன்று மட்டுமேயாகும். இவற்றை அடுத்து உயிர் முதலாகிய விகுதிகள் நிகழலாம்; அல்லது நிகழாமலும் போகலாம். ***காலுங்கள்** என்ற வடிவத்தில் மெல்லொலியை அடுத்து நிகழும் ககரம் **கு** விகுதியின் நிகழ்ச்சியைப் புலப்படுத்துவதாகும். எனவே இவ்விகுதியை அடுத்து ஒரு கிளைமொழியில் அகர விகுதியும் [***கால்—உம் - கு—அ**], இன்னொருகிளை மொழியில் **—அள்** விகுதியும் (***கால்—உம்—கு—அள்**) பொருந்திய வாகக் கருதலாம் 2. மத்திபதிராவிடமொழிகளாகிய கோண்டி, (Gondi), கோயா (Koya), கொண்டா (Konda), பெங்கோ (Pengo), நைக்கி [Naiki] ஆகியவற்றுள் காணப்படும் சில பன்மை ஆகியவறறுள் காணப்படும் சில பன்மை விகுதிகள் வரலாற்று நிலையில் **—கள்** என்பதனை ஓர் விகுதியாகக் கொள்பதற்குத் துணை புரியவில்லை.

வண்ணனை அமைப்பும் வரலாற்று அமைப்பும் ஒத்துப்போகும் இடங்களும் உண்டு எடுத்துக்காட்டாக **செயல்** என்னும்சொல் வண்ணனை நிலையிலும் வரலாற்று

நிலையிலும் **செய்—அல்** என்ற அமைப்பினதாகவே கொள்ளப்பெறும்.

***திராவிடமொழிகளில் வண்ணனை அமைப்பும் வரலாற்று அமைப்பும்*** என்னும் இக்கட்டுரையில் நிகழ்த்தப்பெற்றுள்ள ஆய்வுகள் அனைத்தும் நம்பகமான சான்றுகளின் அடிப்படையில் அமைந்த ஊகங்களைப் பின் புலமாகக்கொண்டு அமைந்தவையாகும். மொழிகளை வரலாற்று நிலையில் ஆராய்வதற்கு நடைமுறையில் சிலகோட்பாடுகள் உள்ளன இக்கோட்பாடுகள் மொழியின் படிப்படியான வளர்ச்சிகளை உருப்படியாக ஆராய்வதற்கு ஓரளவுக்குத்தான் துணைபுரிகின்றன இக்கோட்பாடுகளை மட்டுமே கருதில் கொண்டு மொழியின்கண் நிகழும் வரலாற்று மாறுதல்களை ஆராய்தல் வேண்டும் என்று கருதுவோர்க்கு இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஆய்வுமுறை அதிர்ச்சியூட்டத்தக்கதாகவும், முடிபுகள் கற்பனையில் விளைந்தனவாகவும் தோன்றும்.

## நூல்களின் தலைப்புச் சுருக்கம்

1. HGOK. Historical Grammar of old Kannada-Govind swamirao Gai (Deccan college Dissertation Sevies. Deccan college Post Graduate ant Research Institute Poona-1946)
2. HKL. History Kannada Language R. Narasi-mhacharya. (Prsavanga, univevsity of Mysore-1969)
3. DN. Dravidian Nouns.— S. V. Shanmugam. (Annamalai university Publication-1971)
4. HGT. Historical Grammar of Telugu-K. Mahadeva sastri. [Venkateswara university Publication.]
5. DED Dravidian Etymological Dictionary
   DEDS. Dravidian Etymological Dictionary Supplement.

———

## சங்கச் செய்திகள்.

### கலைமகள் விழா

5—10—73ஆம் நாள் வெள்ளியன்று மாலை 5 மணியளவில் வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பட்ட நானகாம் தமிழ்ச்சங்கத்தில் கலைமகள் விழா, சங்கத் துணைத்தலைவர் திருமிகு. ஆர். செல்லத்தேவர் பி. ஏ ; பி எல். அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அதுபோழ்து சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்களும், செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்களும், மாணவ, மாணவிகளும், சங்கப் பணியாளர்களும் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர் தமிழ் வழிபாட்டு முறையில் நடத்தப்பட்டு விழா இனிதாக நிறைவெய்தியது.

## 1974ம் ஆண்டு உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளி கல்லூரிகள் ஆகியவற்றிக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்த் தேர்வு பற்றிய அறிக்கைகள்.

### தமிழன்பர்களுக்கு வேண்டுகோள்.

*அன்புடையீர், வணக்கம்!*

வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யும் நோக்கமுடன் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினர்கள். அன்று ஆட்சி புரிந்த ஆங்கில அரசும், பல்கலைக் கழகங்களும் தமிழைப் புறக்கணித்த காலம். கன்னித்தமிழ் காக்க "தமிழ்க் கலாசாலை" ஒன்றைத் தேவரவர்கள் அன்றே அமைத்தார்கள். மாணவர்களுக்கு

இனியதமிழை இலவசமாகக் கற்பித்தார்கள். "செந்தமிழ்" என்னும் திங்களிதழ் வாயிலாகவும், நற்றமிழ் நூல் பல வெளியிடுதல் மூலமாகவும் தமிழறிவை உலகெங்கும் பரப்பினார்கள். திரு டாக்டர் உ. வே. சாமிநாதையர், நாவலர், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. அரசஞ்சண்முகனார், திரு. நாவலர், சோமசுந்தரபாரதியார், திரு. மு. ராவக அய்யங்கார், ரா. ராகவையங்கார், திரு. கார்மேகக் கோனார் முதலிய தமிழ் அறிஞர்களை இங்கு அமரச்செய்து சங்க காலத் தமிழாராய்ச்சியை வளர்த்தார்கள். இவ்வாறு அல்லும் பகலும் அயராது உழைத்து அருந்தமிழ் வளர்த்த வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கு மதுரை மாநகரில் சிலையொன்று எழுப்பிச் சிறப்புச்செய்ய முடிவு செய்துள்ளோம். மேலும் தேவரவர்களுடைய தொண்டு தடையின்றி நடைபெறத் தமிழ் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும் திட்டங்கள்பல தீட்டியுள்ளோம்.

நற்றமிழை நாள்தோறும் பரப்பும் நற்பணியில் ஈடுபட்டுள்ள செந்தமிழ்வல்ல சான்றோர்களே, கல்லூரி முதல்வர்களே, பேராசிரியர்களே, பயிற்சிப்பள்ளி, உயர்நிலைப் பள்ளித் தலைமையாசியரியர்களே, தமிழாசிரியர்களே, நீவீர் அனைவரும் மேற்கண்ட எங்கள் பணிக்கு உங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்குமாறு வேண்டுகின்றோம். மிகப் பெரும்பான்மையான மாணவர்களைத் தமிழ்ச்சங்கம் நடாத்தும் தமிழ்த் தேர்வுகளில் கலந்துகொள்ளச் செய்து எங்கள் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவ வேண்டுகின்றோம். தேர்வு பற்றிய குறிப்புக்கள் கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், உயர்பள்ளி, பயிற்சிப் பள்ளி தலைமையாசிரியர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மிக்கநன்றி.

தங்களன்புள்ள,

மாட்சிமை தங்கிய இராமநாதபுரத்தரசர்
**ஆர். எஸ். இராமநாதசேதுபதி**
தலைவர்.



துணைத்தலைவர்

# தேர்வு பற்றிய குறிப்புகள்

## தேர்வின் அமைப்பும், பயனும்.

உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியில் போதிய புலமை பெறுவதற்கு இத்தேர்வுகள் துணைபுரிகின்றன. அரசாங்கத் தேர்வுகளும், பல்கலைக்கழகத் தேர்வுகளும் எம்முறையில் நடைபெறுகின்றனவோ அம்முறைக்கேற்ப இச்சங்கத் தேர்வுகளும் நடைபெறுகின்றன. பல்கலைக் கழகத்தினர், அரசாங்கத்தினர் படைக்கும் வினாத்தாளையொட்டியே வினாத்தாளின் நேரம், வினாக்களின் அமைப்புமுறை முதலியனகொண்டு இச்சங்க வினாத்தாட்கள் அமைக்கப்படுகின்றன. எனவே மாணவர்கட்குத் தேர்வு எழுதுவதில் நல்ல பயிற்சியும், அனுபவமும் ஏற்பட்டு விடுகின்றன.

அரசாங்கத் தேர்வு, பல்கலைக் கழகத் தேர்வு இவற்றிற்கு முன்னதாகவே இச்சங்கத் தேர்வுகள் நடத்தப்பெற்று உரிய மதிப்பெண்களும், சான்றிதழ்களும் அனுப்பப்படுகின்றன. ஆதலின், மாணவர்கள் அவற்றைக் கொண்டு மேலும் படித்து நிறைய மதிப்பெண்கள் பெறு பெறுவதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்படுகிறது.

## தேர்வு முடிவுகள்

இத்தேர்வின் முடிவுகள், அரசாங்கம் அல்லது பல்கலைக் கழகத்தார் நடத்தும் தேர்வுகட்கு முன்னதாகவே மாணவர்கட்கு அறிவிக்கப்படும்.

## சான்றிதழ்கள் :

தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்குரிய சான்றிதழ்கள் பள்ளி அல்லது கல்லூரி விடுமுறைக் காலத்திற்கு முன்னதாகவே முதல்வர் / தலைமையாசிரியருக்கு அனுப்பி வைக்கப்படும். மாணவர்கள் தங்களுக்குரிய சான்றிதழ்களை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சான்றிதழின் சிறப்பு:

இச்சங்கச் சான்றிதழ் பெற்றிருப்போர், படிப்பை முடித்தபின், அரசாங்க அலுவலுக்கோ அன்றி வேறு வேலைக்கோ செல்லுங்காலத்து அவர்கள் சிறப்புத்தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். மேலும் இச்சங் கத்துச் சான்றிதழ் வைத்திருப்போர்க்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

பரிசுகள்:

உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளி, கல்லூரித் தேர்வு களில் மாநில அளவில் முதல், இரண்டாம், மூன்றும் இடத்தில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பிரி விற்கும் பரிசுகள் அளிக்கப்படுவதை தாங்கள் அறிவீர்கள்.

பரிசு விபரம்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | — | ரூ. 100/— |
| இரண்டாம் பரிசு | — | ரூ. 50/— |
| மூன்றும் பரிசு | — | ரூ. 25/— |

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களுக்குத் தனித் தனிப் பரிசுகள் அளிக்கப்படும். ஒவ்வொரு உயர்பள்ளி, பயிற்சிப்பள்ளிகளில் முதல்இடத்தில் வெற்றிபெறும் மாண வர்களுக்கும் நூல்களாக பரிசளிக்கப்படுகிறது.

தேர்வாளர்களுக்கு அன்பளிப்பு:

| | தாள் ஒன்றுக்கு |
|---|---|
| பதினோராம் வகுப்பு | 50 காசுகள் |
| பயிற்சிப் பள்ளி | 50 ,, |
| புகுமுக வகுப்பு | 55 ,, |
| பட்ட வகுப்பு | 60 ,, |

# தேர்வுக் கால அட்டவணை.

## உயர்பள்ளி, பயிற்சிப் பள்ளிகள்.

| | வகுப்புகள் | தேர்வு நாள் | தேர்வு நேரம் |
|---|---|---|---|
| 1. | உயர்பள்ளி இறுதி வகுப்பு [Std XI] | 9-2-74 | காலை 10—12½<br>மாலை 2—4½ |
| 2. | பயிற்சிப்பள்ளி (Training School) | 9-2-74 | காலை 10—12 |

## சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகள்.

| | வகுப்பு | தேர்வு நாள் | தேர்வு நேரம் |
|---|---|---|---|
| 1. | புகுமுக வகுப்பு (P.U.C.) | | |
| | முதற்றாள் (I Paper) | 23-2-74 | காலை 10—1 |
| | இரண்டாந்தாள் (II Paper) | | மாலை 2—5 |
| 2. | இளங்கலை-முதலாண்டு [B.A. B.Sc. I Year] | ,, | காலை 10—1 |
| 3. | இளங்கலை 2ம் ஆண்டு [B. A. B. Sc. II Year] | ,, | காலை 10—1 |
| 4. | புகுமுகவகுப்பு சிறப்பு [P. U. C. Adv] | 25-2-74 | காலை 10—1 |

## மதுரைப்பல்கலைக் கழகக் கல்லூரிகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | புகுமுக வகுப்பு (P. U. C.) | | |
| | முதற்றாள் (I Paper) | 23-2-74 | காலை 10—1 |
| | 2ம் தாள் [II Paper] | ,, | மாலை 2—5 |
| 2. | இளங்கலை 2ம் ஆண்டு (B. A. B. Sc. II Year) | | |
| | இரண்டாந்தாள் (II Paper) | ,, | காலை 10—1 |
| | மூன்றாந்தாள் (III Paper) | ,, | மாலை 2—5 |
| 3. | புகுமுக வகுப்பு சிறப்பு [P. U. C. Adv] | 25-2-74 | காலை 10—1 |
| 4. | இளங்கலை முதலாண்டு [B. A., B. Sc. I Year] | ,, | காலை 10—1 |

# தேர்வுக் கட்டண விபரங்கள்.

## உயர்பள்ளி, பயிற்சிப் பள்ளிகள்.

| | | உருபா—பை |
|---|---|---|
| 1. | பள்ளி இறுதி வகுப்பு | |
| | பொதுத்தமிழ் (Academic Course) | 2—00 |
| | தொழிற்பிரிவு (Diversified Course) | 1—00 |
| 2. | பயிற்சிப் பள்ளி | 1—25 |

## சென்னை, மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரிகள்

| | | உருபா—பை |
|---|---|---|
| 1. | புகுமுக வகுப்பு [P. U. C.] | 2—50 |
| 2. | இளங்கலை முதலாண்டு [B.A.B·Sc. I Year] | 1—50 |
| 3. | புகுமுக வகுப்பு சிறப்பு (P. U. C. Adv) | 1—25 |
| 4. | இளங்கலை 2ம் ஆண்டு (B A B. Sc. II Year) | |
| | சென்னைப்பல்கலைக் கழகம் தாள்-1 | 1—50 |
| | மதுரைப் பல்கலைக் கழகம் தாள்-2 | 3—00 |

உயர்பள்ளி, பயிற்சிப் பள்ளிகள் கட்டணம் செலுத்த வேண்டிய இறுதி நாள்: 21-1-74.

கல்லூரிகள் கட்டணம் செலுத்த வேண்டிய இறுதி நாள்: 1-2-74.

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆர். செல்லத் தேவர்,
துணைத்தலைவர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை-625001.

# மாணவர்களுக்குப் பரிசு.

1973ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய தமிழ்த் தேர்வில் பங்கேற்ற உயர்நிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, கல்லூரி மாணவர்களில் மாநில அளவில் உயர்ந்த மதிப்பெண் பெற்று முதல், இரண்டாம், மூன்றும் தகுதியில் வெற்றி பெற்றவர்களுக்குக் கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை பெரு மகிழ்வுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

தமிழ்ச்சங்கத் தேர்வில் திரளான மாணவ மாணவிகளைப் பங்கு பெறப் பெருந்துணை புரிந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும், கல்லூரி முதல்வர்களுக்கும், தமிழ்த்துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும், தமிழ்ச் சான்றோர்களுக்கும் மனமுவந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சென்ற 1973ஆம் ஆண்டைப்போல் வரும் ஆண்டிலும் நடைபெறவிருக்கும் தமிழ்த் தேர்வுகளில் மாணவர்களைப் பெருவாரியாகப் பங்கேற்கச் செய்து தமிழ்ச் சங்கப் பணியினைச் சிறப்புடன் செயலாற்ற பல்லாற்றானும் தங்களுடைய ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்.

## உயர்நிலைப் பள்ளி.

| வரிசை எண் | தேர்வு எண் | பரிசு பெற்றவர்களின் பெயர் | உயர்நிலைப் பள்ளியின் முகவரி | தகுதி | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 50027 | S. R. ஊர்மிளா | சௌராட்டிர பெண்கள் உயர்பள்ளி, மதுரை. | முதல் பரிசு | ரூ. 100/ |
| 2 | 12843 | ஏ. மலர்விழி | ஐ. கு. க. ரங்கம்மாள் மகளிர் உயர்பள்ளி, ந. குமாரபாளையம், சேலம். | இரண்டாம் பரிசு | ரூ. 50/ (இருவருக்கு) |
| | 12844 | பி. மனோரமா | | | |
| 3 | 7218 | S. காமாட்சி | தூயகாணிக்கையனை மகளிர் உயர்பள்ளி, கோயம்புத்தூர். | 3-ஆம் பரிசு | ரூ. 25/ |

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளி.

| வரிசை எண் | தேர்வு எண் | பரிசு பெற்றவர்களின் பெயர் | ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் முகவரி | மாநில அளவில் தகுதி | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 232 | கோ. பாலாட்சி | புனித ஆன்ஸ் மகளிர் பயிற்சி நிலையம், அடைக்கலாபுரம் (அ. நி.) நெல்லை மாவட்டம். | முதல் பரிசு | ரூ 100/ |
| 2 | 1196 | A. மல்லிகா | அரசினர் மகளிர் ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, சின்னதாராபுரம் (அ. நி.) திருச்சி ஜில்லா | இரண்டாம்பரிசு | ரூ. 50/ |
| 3 | 1020 | G. சிவகாமி | அரசிர் மகளிர் உயர்நிலை ஆதாரப் பயிற்சிப் பள்ளி நாமக்கல் (அ. நி.) சேலம் மாவட்டம் | மூன்றும் பரிசு | ரூ. 25/ |

## மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரி

## புகுமுக வகுப்பு (P. U. C.)

| வரிசை எண் | தேர்வு எண் | பரிசு பெற்றவர்களின் பெயர் | கல்லூரியின் முகவரி | மாநில அளவில் தகுதி | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 1608 | ஆவுடையப்பன் | அம்பை கலைக் கல்லூரி, அம்பாசமுத்திரம். | முதல் பரிசு | ரூ. 100/ |
| 2 | 6089 | கரு. மணி | M. S. S. வக்புகுழுக் கல்லூரி, மதுரை-2. | இரண்டாம்பரிசு | ரூ. 50/ |
| 3 அ | 2172 | ந. குணசேகரன் | சைவ பானு சத்திரியர் கல்லூரி, அருப்புக்கோட்டை. | மூன்றும் பரிசு | ரூ. 40/ |
| ஆ | 3096 | க ராஜேந்திரன் | மதுரைக்கல்லூரி, மதுரை. | ,, | 4 பேர்களுக்கு |
| இ | 5349 | வெ. அ காஜா சேக்உதுமான் | சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, பாளையங்கோட்டை. | ,, | |
| ஈ | 5582 | M ஜெயபால் | தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை. | ,, | |

## இளங்கலை முதலாண்டு (B. A., B. Sc. I Year)

| வரிசை எண் | தேர்வு எண் | பரிசு பெற்றவர்களின் பெயர் | கல்லூரியின் முகவரி | தகுதி | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 11164 | பா. பரமசிவம் | பழனியாண்டவர் கலைக் கல்லூரி, பழனி. | முதல் பரிசு | ரூ. 100/ |
| 2 | 11376 | சி. மகேசன் | தியாகராசர் கல்லூரி, மதுரை. | இரண்டாம் பரிசு | ரூ. 50/ |
| 3 | 10767<br>10848 | S. ஜெயசந்திரா<br>V. வீரலக்குமி | ஜெயராஜ் அன்னபாக்யம் மகளிர் கல்லூரி, பெரியகுளம். | 3-ஆம் பரிசு | ரூ. 25/ (இருவருக்கு) |

## இளங்கலை இரண்டாமாண்டு (B. A. B. Sc. II Year)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 20889 | ஆ. ஆறுமுக நயினர் | சதக்கத்துல்லா அப்பா கல்லூரி பாளையங் கோட்டை | முதல் பரிசு | ரூ. 100 |
| 2 | 20764 | K அறம் வளர்த்த நாதன் | பரமக்கல்யாணி கல்லூரி, ஆழ்வார்குறிச்சி | 2 ஆம் பரிசு | ரூ. 50 |
| 3 | 20913 | M. ஜெயப் பிரகாஷ் | தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக் கோட்டை. | 3 ஆம் பரிசு | ரூ. 25 |

## நூல் மதிப்புரை.

### குறுக்குத்துறைக் கலம்பகம்
(அருஞ்சொல் விளக்கம்)

ஆசிரியர். வித்துவான். தி. சு. ஆறுமுகம்,
திருநெல்வேலி.

கலம்பகத்திற்குரிய பதினென் உறுப்புக்களைப்பெற்று, ஒரு நூறுபாடல்களுடன் இலங்கும் இந்நூல் இடைக் காலத்துத் தோன்றிய கலம்பக நூல்களுடன் ஒப்பிட்டு பெருமை சேர்த்தற்குரியது. 'அட்டநாகபந்தம்' 'சதுர்நாக பந்தம்' என்ற சித்திரக்கவிகளையும் நயத்துடன் இயற்றி யுள்ள இவ்வாசிரியரின் கவித்திறனை தமிழுலகம் அரியக் கடமைப்பட்டுள்ளது.

### வெள்ளோட்டம்

ஆசிரியர் : கவிஞர். கு. செ. இராமசாமி எம். ஏ.
சிவகங்கை.

அறவாழ்வும், புறவாழ்வும் அமையப் பெற்ற பழந் தமிழ்க்குடியினர் தவழ்ந்த சிவகங்கைச் சீமையின் அங்க மாக விளங்கியது பாகனேரி. ஆங்கு திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் புல்வாய் நாயகி அம்மனுக்குப் புதியதோர் சித்திரத் தேரமைத்து வெள்ளோட்டவிழா வெடுத்தனர், அது போழ்து வெளியிடப்பட்டது இம் மலர்.

தமிழர் சமயக் கலையுணர்விற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன.

ஆ. ஆண்டியப்பன்,
பதிப்பாசிரியர்.

## சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரி

## புகுமுக வகுப்பு (P. U. C)

| வரிசை எண் | தேர்வு எண் | பரிசு பெற்றவர்களின் பெயர் | கல்லூரியின் முகவரி | மாநில அளவில் தகுதி | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 31330 | மு. திராவிடமணி | அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை. | முதல் பரிசு | ரூ. 100/ |
| 2 | 30495 | சு. சிவகுமார் | தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர். | 2 ஆம் பரிசு | ரூ. 50/ |
| ஆ | 31752 | க. இரகுநாதன் | அரசினர் கலைக்கல்லூரி, மன்னார்குடி. | ,, | (இருவருக்கு) |
| 3 | 31793K | நா. மெய்கண்ட மாணிக்கம் | திரு. கொளஞ்சியப்பர் அரசினர் கலைக்கல்லூரி, விருத்தாச்சலம். | மூன்றும் பரிசு | ரூ. 25/ |

## சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரி

### இளங்கலை முதலாண்டு [B. A. B. Sc. I Year]

| வரிசை எண் | தேர்வு எண் | பரிசு பெற்றவர்களின் பெயர் | கல்லூரியின் முகவரி | மாநில அளவில் தகுதி | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 40647 | R ஆத்மநாதன் | உருமு தனலக்குமி கல்லூரி, காட்டூர், தென்னாற்காடு | முதல் பரிசு | ரூ. 100/ |
| 2 | 40825 | மா. கந்தசாமி | அரசினர் கலைக்கல்லூரி, மன்னார்குடி. | 2 ஆம் பரிசு | ரூ. 50/ |
| 3 | 40486 | பா. நிர்மலா | கி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர், தென்னாற்காடு-1 | மூன்றும் பரிசு | ரூ. 25/ (இருவருக்கு) |
| ஆ | 40464 | தி. சுசீலா | ,, ,, ,, | ,, | |

## சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரி

## இளங்கலை இரண்டாமாண்டு [B. A. B. Sc. II Year]

| வரிசை எண் | தேர்வு எண் | பரிசு பெற்றவர்களின் பெயர் | கல்லூரியின் முகவரி | மாநில அளவில் தகுதி | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 50658 | விசுவநாதன் | பூம்புகார் பேரவைக் கல்லூரி, மேலையூர், தஞ்சை மாவட்டம். | முதல் பரிசு | ரூ. 100/ |
| 2 | 50530 | V. மணிவாசகம் | கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக்கல்லூரி, திருவாரூர். | 2 ஆம் பரிசு | ரூ. 50/ |
| 3 | 50410 | ஹேமசுந்தரி | கி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர், தென்னாற்காடு-1 | மூன்றாம் பரிசு | ரூ. 25/ |

நற்றமிழ் வள்ளல்

## பாண்டித்துரைத் தேவர் பைந்தமிழ்ப் பேரவை.

வள்ளுவர் 2004ஆம் ஆண்டு (26—8—73) ஆவணித் திங்கள் 8ஆம் நாள் ஞாயிறு மாலை 6 மணியளவில் நற்றமிழ் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் பைந்தமிழ்ப் பேரவையின் சிறப்புக் கூட்டம் பேரவைத் துணைத்தலைவர் திருமிகு. பண்டித மீ. கந்தசாமி புலவர் அவர்கள் தலைமையில் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் மாளிகையில் நடைபெற்றது.

தமிழ்ப் பேரவைத் தலைவர் புலவர்மணி திருமிகு. தி. கி. சுந்தர மூர்த்தி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். காரைக்குடி இராம சாமி தமிழ்க்கல்லூரி முதல்வர் திருமிகு. ந. இராமநாதன் பி.ஓ எல். அவர்கள் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற பொருள்பற்றி விளக்கவுரை தந்தார்கள்.

சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருமிகு. வீ. முத்துச்சாமி எம். ஏ. அவர்கள் 'தமிழ் எழுச்சியில் தொய்வு' என்னும் பொருள்பற்றி விரிவுரை தந்தார்கள்.
தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திருமிகு. செல்லத்தேவர் பி. ஏ. பி. எல் அவர்கள் நன்றி கூறினர்கள்.

முடிவில் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. தமிழ்நாடெங்கும் புதிய தொய்வில்லா தமிழ் எழுச்சியை உருவாக்குதல்.

2. நாடெங்கினுமுள்ள நற்றமிழ்ப்புலவர்களையும், கவிவாணர்களையும், நல்லிசைச் சான்றோர்களையும் பெருமைப்படுத்துதல்.

3. வள்ளல் பாண்டித்துரைத்தேவரவர்களின் கருத்திற்கேற்ப ஆராய்ச்சிப் புலவர் பேரவை நிறுவுதல்.

4. தண்ணூர் தமிழுக்காக தன் உடல், பொருள், உயிர் அத்துணையும் ஈந்த பெருமனச் செம்மல் வள்ளல். பாண்டித்துரைத் தேவரவர்களுக்கு நீங்காத நினைவுச் சின்னம் எழுப்புதல்.

———